லை : 20.00
கள் : இருபது

# வலம்புரி
Valampurii

site : www.valampurii.lk
ail: valampurii@yahoo.com

14 வள்ளுவர் ஆண்டு 2044 தை 03 புதன்கிழமை (16.01.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 028

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

# ான் குற்றமற்றவள்; எனது உயிருக்கு உத்தரவாதம் தாருங்கள்



## மக்களிடம் ஷிராணி கோரிக்கை

(கொழும்பு)

தான் குற்றமற்றவர் எனவும் தனது குடும்பத்தின் பாதுகாப்பு இன்று கேள்விக்குறியாகியுள்ளது என்றும் தமது உயிருக்கு உத்தரவாதம் தாருங்கள் என்றும் பொதுமக்களிடம் கோரிக்கை விட்டுள்ள கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க, தான் பாரிய அநீதிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திலிருந்து நேற்று செவ்வாய்க்கிழமை மாலை வெளியேறியபோதே முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மேற்கண்டவாறு ஊடகங்களுக்கு குறிப்பிட்டார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## ாராட்டக்காரர்களின் கனம் மீது தாக்குதல்!

(யாழ்ப்பாணம்)

வுரிமை இயக்கத்தினரின் ஹயஸ் ம் இனந்தெரியாதோரால் தாக்கப்பட் து.

ழ்.நகரில் அரசுக்கு எதிரான போராட் றினை முன்னெடுப்பதற்காக கொழும் து யாழிற்கு இரு ஹயஸ் வான்களில் கும் மேற்பட்டோர் வருகை தந்திருந் கள், யாழ்.பனணை தனியார் பஸ் திற்கு (02ஆம் பக்கம் பார்க்க)

## 44ஆவது பிரதம நீதியரசராக ஹான் பீரிஸ் சத்தியப்பிரமாணம்



(கொழும்பு)

இலங்கையின் 44ஆவது பிரதம நீதியரசராக பீட்டர் மொஹான் பீரிஸ் நேற்று பகல் 12.37க்கு சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

அலரிமாளிகையில் ஜனாதிபதியின் முன்னிலையில் அவர் சத்தியப்பிரமாணத்தை மேற்கொண்டார்.

ஏற்கெனவே நேற்று முற்பகல் அவரை பிரதம நீதியரசர் நிலைக்கு நியமிக்க நாடாளுமன்ற (20ஆம் பக்கம் பார்க்க)

## உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து ஷிராணி வெளியேற்றம்!

(கொழும்பு)

ஜனாதிபதியினால் பதவி நீக்கம் செய்யப்பட்ட பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க கொழும்பு விஜயராம மாவத்தையிலுள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து நேற்று வெளியேறியுள்ளார்.

அவரது சொந்த பொருட்கள் அனைத்தையும் எடுத்துக்கொண்டு கொழும்பு றோயல் பார்க்கிலுள்ள தனது வீட்டுக்கு சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கொழும்பு விஜேராம மாவத்தையிலுள்ள பிரதம நீதியரசரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்துக்கு நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.15 மணியளவில் சென்ற உயர்நீதிமன்ற பதிவாளர், அங்கிருந்த ஷிராணி பண்டாரநாயக்கவிடமிருந்து ஆவணங்கள் சிலவற்றைப் பெற்றுச் சென்றுள்ளார்.

மேற்படி ஆவணங்கள் ஷிராணியினால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய உத்தியோக (20ஆம் பக்கம் பார்க்க)

## மவுரிமை இயக்க போராட்டத்தில் கழிவு எண்ணெய் வீச்சு தாக்குதல்!

### ஊடகவியலாளர்களும் இலக்காகினர்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் சிவில் நிர்வாகம் மற் க்களின் அன்றாட வாழ்க்கையில் நிலவு இராணுவத் தலையீடுகளை எதிர்த்தும், செய்யப்பட்டுள்ள யாழ்.பல்கலைக்கழக வர்களை விடுதலை செய்யக் கோரியும் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீது கழிவு எண்ணெய் வீசப்பட்டுள்ளது.

யாழ்.பேருந்து நிலையத்தில் சமவுரிமை இயக்கம் நேற்று செவ்வாய்க்கிழமை நடத்திய ஆர்ப்பாட்டம் மற்றும் கையெழுத்து வேட்டையின் போதே இனந்தெரியாத சிலர் கழிவு எண்ணெய் வீசித் தாக்குதல் நடத்திவிட்டுச் சென்றுள்ளனர்.

அத்துடன் மக்களிடம் கையெழுத்துப் பெறும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவர்கள் அச்சுறுத்தப்பட்டதை (20ஆம் பக்கம் பார்க்க)




இன்றைய வலம்புரியுடன்
வர்ண நாட்காட்டி
பத்திரிகை முகவரிடம் கேட்டு வாங்குங்கள்

### நீதித்துறை விவகாரம்

## லங்கைக்கு அமெரிக்கா மீளவும் எச்சரிக்கை

(வாஷிங்டன்)

ரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க விலக்கப்பட்டமை குறித்து மீண்டும் ல வெளியிட்டுள்ள அமெரிக்கா, நீதித் ற சுதந்திரத்தை பாதிக்கும் எந்த நட க்கையும் இலங்கையின் வெளிநாட்டு டுகளை ஈர்க்கும் திறனைப் பாதிக்கும் எச்சரித்துள்ளது.

வாஷிங்டனில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய ராஜாங்கத் திணைக்கள பேச்சாளர் விக்டோரியா நுலன்ட், பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான குற்றப்பிரேரணை குறித்து நாம் ஆழ்ந்த கவலை அடைந்துள்ளோம்.

உயர் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு மாறாகவே, அவர் (20ஆம் பக்கம் பார்க்க)

### 'நீதிமன்றம் ஒரு மரண வீடாகியது'



## மெழுகுவர்த்தி ஏந்தி சட்டத்தரணிகள் போராட்டம்

(கொழும்பு)

உயர்நீதிமன்றத்துக்கு முன்னால் கூடிய சட்டத்தரணிகள் குழுவொன்று, மெழுகுவர்த்திகளை ஏற்றி அமைதிப் போராட்டமொன்றில் நேற்று ஈடுபட்டுள்ளது.

"இன்று நீதிமன்றம் ஒரு மரண வீடாகியது" எனக் கூறி அவர்கள் இப்போராட்டத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

போராட்டத்தில் ஈடுபட்ட சட்டத்தரணிகள் குழு, நீதிமன்ற வளாகத் (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்




சமவுரிமை இயக்க போராட்டக்காரர்களின் ஹயஸ் வாகனம் தாக்கப்பட்டிருப்பதையும் அவ்வமைப்பினர் மீது யாழ்.பஸ் நிலையத்தில் வைத்து மேற்கொள்ளப்பட்ட கழிவு எண்ணை வீச்சினையும் படங்களில் காணலாம்.

# போராட்டக்காரர்...

அருகில் வரும்போது அங்கு இரு மோட்டார் சைக்கிளில் வந்த நால்வர் வானின் முன் கண்ணாடியினை அடித்து உடைத்து விட்டு அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளனர். இச் சம்பவம் தொடர்பில் சம உரிமை இயக்கத்தின் அமைப்பாளரான ஜீட் சில்வா புள்ளே தெரிவிக்கையில், நாம் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாகவும் அரசின் அடக்கு முறைக்கு எதிராகவும் குரல் கொடுக்கவே யாழிற்கு வந்திருந்தோம்.

இந்த நிலையில் எம் வாகனத்தின் மீது யார்தாக்குதல் நடத்தினார்கள் என்று தெள்ளத்தெளிவாகத் தெரிகிறது. இத்தாக்குதலுக்கு பின்னணியாக அரசும் இராணுவமும் உள்ளதனை நாம் தெளிவாக கண்டுள்ளோம். இவ்வாறான அச்சுறுத்தலுக்கு நாம் அடிபணியப் போவதில்லை. தொடர்ந்தும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுப்போம் என்றார் அவர். (செ -4)

Singapore இல் வேலை வாய்ப்புடன் கூடிய Hotel Management பயிற்சி
உங்களுக்கு
மாதாந்த சம்பளம் : 100,000/=
மொத்த செலவு : 5 இலட்சம் மட்டுமே.
NO visa, Interview, Sponsor, Bank Balance,
FREE Visa Arrangement, Air Ticket, Sponsorships, Airport Pickup, One Week Accommodation
(HEAD OFFICE)
Call Now
(Reg No : PV 67191)
Bristol Business School
Education Partner
edutrust SINGAPORE PROVISIONAL
GREENWICH COLLEGE No : 34, Galle Road, Dehiwala, Colombo.
GREENWICH COLLEGE No :01, 2nd Lane, Power House Road, Jaffna.
தொடர்புகளுக்கு:- 021-2219787 / 0777751382 / 0773448706 / 0777630708

# நாட்டிற்கு சேவையாற்றுவது எம் எல்லோரதும் கடமை -புதிய பிரதம நீதியரசர்



(கொழும்பு)

நீதி நியாயத்துடன் தான் கடமையாற்றுவதாக புதிதாக நியமனம் பெற்ற பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் உறுதியளித்தார்.

சர்வமத தலைவர்களின் ஆசிர்வாதத்துடன் கொழும்பு புதுக்கடையில் உள்ள உயர் நீதிமன்றத்தில் தனது கடமைகளை பொறுப்பேற்றதை அடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டுக்காக கடமையாற்ற வேண்டும். நாட்டின் நலனுக்காக கடமையாற்ற வேண்டும். இலங்கைக்காக கடமையுாற்ற வேண்டும் என்ற விடயத்தை நாம் அனைவரும் எப்பொழுதும் மனதில் கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (செ-11)

# அதிஉச்ச பாதுகாப்பில் உச்ச நீதிமன்றம்

உயர்நீதிமன்ற வளாகத்தில் பாதுகாப்பு பன்மடங்காக பலப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் இராணுவத்தினரும் பொலிஸாரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். நீதிமன்றத்திற்குள் செல்லும் அனைவரும் நேற்று படைத்தரப்பினரது சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.(செ -1)




Rental Car
Car with Driver
Self Drive
Cars, Vans, 4WD Vehicles
Weddings, Special Events & Tours
Weekly, Monthly & Term Rental
Cometitive Rates
(C-2130)
Hotline:
0773655261

பிள்ளையார் இன்
25% கழிவு
இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் மாலையில் வழங்கப்படும்.
இன்றைய விசேட உணவு :-
பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-
சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-
இலவசமாக இஞ்சி சோடா வழங்கப்படும். (இங்கு உணவருந்துபவர்களுக்கு மட்டும்)
(C-1660) தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

# மொழி வகுப்புகள்

நெல்லியடி, சுன்னாகம், யாழ்ப்பாணம், சாவகச்சேரி ஆகிய நகரங்களில் இலவச சிங்கள, ஆங்கில மொழி புதிய வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ்ப்பாணம், கந்தர்மடம் இந்து பௌத்த கலாசார பேரவை அறிவித்துள்ளது.

இதற்கான விண்ணப்பபடிவங்களை இந்து பௌத்த கலாசாரபேரவை இல. 29, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள தலைமைக் காரியாலயத்தில் பெற்று எதிர்வரும் 31 -ம் திகதிக்கு முன்னர் நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்க வேண்டும்.

வகுப்புக்கள் யாவும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி ஆரம்பமாக வுள்ளன. மேலதிக தொடர்புகளுக்கு 0217200157 என்னும்தெலைபேசிஇலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு இந்து பௌத்த கலாசார பேரவை அறிவித்துள்ளது.(செ -9)

## கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய

### ஆண்டு உற்சவ பொங்கல், ஆலோசனைக் கூட்டம்

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் 18.01.2013 வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு ஆலய முன்றலில் பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான கௌரவ மு.சந்திரகுமார் அவர்களினதும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் அவர்களினதும் இணைத் தலைமையில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்திற்கு திணைக்கள தலைவர்கள், பொலிஸ் அதிகாரிகள், அரச அரச, சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள், தர்மகர்த்தாக்கள், பொதுச்சபை உறுப்பினர்கள் விழா உபயகாரர்கள் ஆர்வமுள்ள அடியார்கள் அனைவரும் கலந்து 26.03.2013 இல் நடைபெறவுள்ள பொங்கல் உற்சவம் சிறப்புற நடைபெற ஆலோசனை வழங்கி உதவுமாறு கேட்டுக்கொள் கின்றோம்.

வீ.இராமநாதன்,
தலைவர்

க.வைரமுத்து
செயலாளர்

(சி-2127)

தென்னிந்தியபுகழ் அர்ச்சனா அக்கடமியின்..
ஆடைகளில் அச்சுக்கலைபயிற்சி வவுனியாவில்
Manual Fabric Screen Printing
இலகுமுறையில் உங்கள் ஆடைகளில் பல வர்ணங்களில் டிசைன் செய்யும் பயிற்சி..
தென்னிந்திய சான்றிதழுடன்
காலை 10 முதல் 4 மணி வரை ஜனவரி 19, 20 ஆம் திகதி (சனி, ஞாயிறு)



பிரவீணன் என்ரபிரைசஸ்
35, கந்தசுவாமி கோவில் வீதி, வவுனியா
விபரங்கள்,பதிவுகட்கு:
0778904131,
0777283192,
0715863151

# மரண அறிவித்தல்

## இராசையா ஆறுமுகம்



(இளைப்பாறிய மருந்தாளர்)

நீர்வேலி வடக்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா ஆறுமுகம் 13.01.2013 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா- அன்னம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான நவரத்தினம் -செல்லம்மா தம்பதியரின் மருமகனும்,

குணமணிதேவியின்(முன்னாள் தலைவர், செயல[illegible] நகரசபை, சாவகச்சேரி) அன்புக் கணவரும்,சஞ்சீவன் (க[illegible] மஞ்ஜீவன் (ஆராய்ச்சி உதவியாளர்-IFS) ஆகியோரின் அ[illegible] தந்தையும்,சொரூபினியின்(கனடா) அருமை மா[illegible] பழனிப்பிள்ளையின்(கனடா) சகோதரரும் ஆவா[illegible] அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16.01.2013 இன்று புத[illegible] 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகன[illegible] காக மாசிவன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்[illegible]

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், ந[illegible] அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

4ம் கட்டை இராசவீதி;
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
T.P.: 021 321 4894, 0771962054

தகவ[illegible]
மனைவி, பிள்[illegible]

# மரண அறிவித்தல்

## ஸ்ரீமதி இராஜேஸ்வரி அம்மா பரமசாமி சிவாச்சார்யார்



ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் வடகோவையை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீமதி இராஜேஸ்வரி அம்மா 15.01.2013 நேற்று செவ்வாய்க் கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற வை.மு.பரமசாமி சிவாச்சார்யாரின் பாரியாரும், ஊரெழுவைச் சேர்ந்த காலஞ்சென்ற பாலசுந்தரகுருக்கள் மீனாம்பிகை அம்மா தம்பதிகளின் புத்திரியும் ஆவார்.

அம்மாவின் இறுதிக்கிரியைகள் இன்று 16.01.2013 புதன் கிழமை மு.ப.11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், அபிமானிகள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குருக்கள் ஒழுங்கை,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்
T.P.: 021 223 0016

(1504)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## அத்வைதம்

ஒரு ஊரிலே முனிவர் ஒருவர் இருந்தார். அவருக்கு ஒரு சிஷ்யர் இருந்தார்.

ஒரு சமயம் அந்த முனிவர் வெளியே எங்கேயோ கிளம்பிப் போனார். மீண்டும் ஆயிரம் வருடங்கள் கடந்த நிலையில் திரும்பி வந்தார்.

அது எப்படி ஆயிரம் வருடங்கள் கடந்த நிலை... என்று கேட்கக் கூடாது. முனிவர்களுக்கு எல்லாம் இது சகஜம்.

ஆயிரம் வருடங்கள் கடந்த நிலையில் அவர் திரும்பி வந்ததனால் சிஷ்யருக்கு தனது குருவை அடையாளம் தெரியவில்லை. இருந்தாலும் கண்டுபிடிக்க முடியவில்லை. யாரோ ஒரு பெரிய முனிவர் வந்திருக்கிறார் என்று நினைத்தார்.

"பசிக்கிறது... சாப்பாடு போடு" என்று முனிவர் கூறினார்.

உடனே அந்த சிஷ்யர் மனைவியிடம் பக்குவமாகக் கூறி, சாப்பாடு போட்டார். அவரும் சாப்பிட்டு முடித்தார்.

"என்ன... திருப்தியாக சாப்பிட்டீர்களா?" என்று கேட்டார் சிஷ்யர்.

உடனே முனிவர் நிமிர்ந்து பார்த்து, "நான் எங்கே சாப்பிட்டேன்? எவனுக்குப் பசியோ அவன்தான் சாப்பிடுவான். அவனுக்குத் தானே திருப்தி ஏற்படும்" என்றார்.

சிஷ்யருக்கோ எதுவுமே புரியவில்லை; அமைதியாக நின்றார்.

பரிதாபமாக முனிவரைப் பார்த்தார்; அதன்பின் முனிவர் சொன்னார்; "இப்போது சாப்பிட்டது நான் இல்லை" எனது தேகம்... அதனாலே தேகத்திற்குத்தான் திருப்தியோ அதிருப்தியோ ஏற்படும். நான் ஆன்மா. எனக்கு அதிலே திருப்தியோ அதிருப்தியோ இல்லை" என்றார் முனிவர்.

இதைக்கேட்டதும் அந்த சிஷ்யருக்கு இதுதான் நம்முடைய குரு என்பது ஞாபகத்திற்கு வந்தது. அவரது காலிலே விழுந்து வணங்கினார்.

அதன்பின் அந்த முனிவர் வெளியே சென்று விட்டு ஆயிரம் வருடங்கள் கடந்த நிலையில் மீண்டும் திரும்பி வந்தார்.

அவர் திரும்பி ஊருக்குள் வந்து கொண்டிருக்கையில், அந்தச் சிஷ்யர் ஏதோ ஒரு மூட்டையை தலையிலே வைத்துக் கொண்டு தெருவோரமாக நின்று கொண்டிருந்தார். முனிவர் இதைப் பார்த்து விட்டு, "ஏன் இப்படி தெருவோரமாக ஒதுங்கி நிற்கி றீர்கள்" என்று கேட்டார்.

"ராஜா யானை மேலே அமர்ந்திருந்து பவனி வந்து கொண்டிருக்கிறார். அந்த வேடிக்கையைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்றார் சிஷ்யர்.

இதிலே யார் ராஜா? எது யானை? என்று கேட்டார்.

சீடர் ஆச்சரியத்துடன் முனிவரைப் பார்த்து விளக்கம் கொடுத்தார்.

"அதாவது மேலே இருக்கிறவர்தான் ராஜா... கீழே இருக்கிறது யானை" என்றார்.

"அது சரி... "மேலே" என்று சொல்வது, என்றால் என்ன? "கீழே" என்று சொல்வது என்றால் என்ன? என்று முனிவர் கேட்டார்.

உடனே இவர் என்ன செய்தார் தெரியுமா?

அப்படியே ஒரே தாவாத்தாவி அந்த முனிவரின் தோளின் மேலே அமர்ந்து கொண்டார்.

அமர்ந்து கொண்ட அவர்; "மேலே", "கீழே" என்றால் என்ன என்று தானே கேட்டீர்கள்?" இதோ நான் மேலே இருக்கிறேன். நீங்கள் கீழே இருக்கிறீர்கள்– என்றார்.

முனிவர் அவரை விட்டு வைக்கவில்லை. அடுத்த கேள்வியைத் தொடுத்தார்.

"அது சரி! நான் "மேலே" நீ "கீழே" என்று சொல்லுகிறாய். நான் யார்? நீ யார்?" என்றார்.

அப்போதுதான் இவருக்கு, தன்னுடைய குரு என்பது தெரிந்தது. உடனே காலிலே விழுந்து வணங்கினார்.

அத்வைதம் என்றால் என்ன என்பதை விளக்குவதற்காக ஜகடபாதர் அரசர் ரகுகுணனுக்கு எடுத்துக்கூறிய கதை இது.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# விஞ்ஞான சேவையின் வகுப்பு 2 தரம் II ஆட்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சை

(கொழும்பு)

இலங்கை விஞ்ஞான சேவையின் வகுப்பு 2 தரம்II இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப்பரீட்சைக்காக தகைமை பெற்றவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் கோரப்படுகின்றன.

இதற்கமைய 9 திணைக்களங்களுக்கான 21 பதவிகளிலுள்ள 67 வெற்றிடங்களுக்கு பட்டதாரிகள் விண்ணப்பிக்க முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வெற்றிடங்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் இலங்கை பிரஜைகளாக இருத்தல் வேண்டும். பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து குறித்த பதவிகளுக்குரிய பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும். பட்டம் நடைமுறைக்கு வரும் திகதி மற்றும் குறித்த அறிவித்தலின் கீழ் தேவையான அனைத்து தகைமைகளையும் விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் எல்லாவகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

இவ்வாண்டு பெப்ரவரி 15 ஆம் திகதியன்று 22 தொடக்கம் 35 வயதுக்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏதேனும் சமய சபைகளில் துறவியாக இல்லாமல் இருத்தல் போன்ற தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்கள் வர்த்தமானி அறிவித்தலுடன் வெளியிடப்பட்டுள்ளவாறு தயாரித்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம் (ஒத்துழைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை), பெலவத்தை, பத்த்ர முல்ல என்ற முகவரிக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானிப் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ளவாறு இலங்கை மிருகக்காட்சிச்சாலைகள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் பதவிக்கு 2 வெற்றிடங்களும் அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் அரசாங்க உதவி இரசாயன பகுப்பாய்வாளர் பதவிக்கு 3 வெற்றிடங்களும் மற்றும் சந்தேகத்திற்குரிய ஆவணங்கள் தொடர்பான உதவிப் பகுப்பாய்வாளர் பதவிக்கு ஒரு வெற்றிடமும் நீர்ப்பாசன திணைக்களத்தின் உதவி மண் இரசாயனவியலாளர் பதவிக்கு ஒரு வெற்றிடமும் தொழிற் திணைக்களத்தின் ஆராய் ச்சி உத்தியோகத்தர் பதவிக்கு 3 வெற்றிடங்களும் ஏற்றுமதி விவசாய திணைக்களத் தின் உதவிப் பணிப்பாளர் பதவிக்கு 2 வெற்றிடம் மற்றும் ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிக்கு 5 வெற்றிடங்களும் வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் உதவி வனப் பாதுகாவலர் பதவிக்கு 5 வெற்றிடங்களும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் வானியலாளர் பதவிக்கு 14 வெற்றிடங்களும் தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் விலங்கியல் உதவிப் பணிப்பாளர் பதவிக்கு ஒரு வெற்றிடமும் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் உயிர் இரசாயனவியலாளர் பதவிக்கு ஒரு வெற்றிடம், பௌதீகவியலாளர் பதவிக்கு 12 வெற்றிடம், மரு ந்து பகுப்பாய்வாளர் (இரசாயனவியல்) பதவிக்கு ஒரு வெற்றிடமும் ஆராய்ச்சி உத்தியோகத்தர் (இயற்கை உற்பத்திகள்) பதவிக்கு 3 வெற்றிடங்கள், ஆராய்ச்சி உத்தியோகத்தர் (பூச்சியியல்) பதவிக்கு ஒரு வெற்றிடம் மற்றும் ஆராய்ச்சி உத்தியோகத்தர் (தடுப்பு மருந்து மற்றும் உற்பத்தி பதவிக்கு ஒரு வெற்றிடமும் ஆராய்ச்சி உத்தியோகத்தர் நுண்ணுயிரியல் (பக்றீரியவியலாளர் மற்றும் வைரஸ்வியலாளர்) பதவிக்கு 4 வெற்றிடங்களும் ஆய்வு உத்தியோகத்தர் (உயிர் இரசாயனவியல்) பதவிக்கு 2 வெற்றிடங்களும் பிரதேச மலேரியா ஒழிப்பு அலுவலர் பதவிக்கு 2 வெற்றிடங்களும் இரசாயனவியலாளர் பதவிக்கு 2 வெற்றிடங்களும் விஞ்ஞான உத்தியோகத்தர் பதவிக்கு ஒரு வெற்றிடமும் காணப் படுகின்றன.

இப்போட்டி பரீட்சை தொடர்பான மேலதிக விபரங் களை கடந்த 11 ஆம் திகதி வெளியாகிய வர்த்தமானி பத்திரிகையில் பார்வையிடலாம். (அ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 320 | 300 | 150 |
| உருளைக்கிழங்கு | 60 | 100 | 80 |
| பச்சைமிளகாய் | 180 | 200 | 180 |
| தக்காளி | 90 | 80 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 |
| கோவா | 60 | 80 | 80 |
| கரட் | 80 | 120 | 160 |
| பூசணி | 30 | 60 | 50 |
| புடோல் | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 60 | 120 | 70 |
| சின்ன வெங்காயம் | 150 | 180 | 160 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 80 |
| பாகற்காய் | 190 | 150 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 120 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 70 |
| பயற்றங்காய் | 240 | 280 | 160 |
| லீக்ஸ் | 120 | 120 | 140 |
| பீற்றூட் | 80 | 120 | 120 |
| கறிமிளகாய் | 300 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 600 | -- | -- |
| போஞ்சி | 120 | 160 | 140 |
| கத்தரிதம்புள்ள | 250-300 | 250 | -- |
| கீரை - 1 பிடி | 50 | 30 | 35 |
| தேசிக்காய் | 90 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 35-40 |
| இராசவள்ளி | 100 | 140 | 130 |
| வெங்காயப்பூ | 180 | 80 | 100 |

## இராசி பலன்

16.01.2013

(தை 03, புதன்கிழமை)

சூரிய உதயம் காலை 6.28 மணிக்கு

பஞ்சமி முன்னிரவு 8.08 மணிவரை

பூரட்டாதி முன்னிரவு 9.41 மணிவரை

இராகுகாலம் 12.35-2.05 மணிவரை

சுபநேரம் 5.05-6.35 மணிவரை

**மேடம்** தொழில் நன்மை கருதி சில பயணங்கள் ஏற்படலாம், சுப செலவுகள் அதிகரிக்கும், சயன சுகக் குறைவான நாள், சொன்ன சொல்லைக் காப்பாற்ற துடிப்புடன் செயற்படுவீர்கள்.

**இடபம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான அறிகுறியுண்டு, புதிய நண்பர்களின் அறிமுகத்தால் நன்மையுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மிதுனம்** தந்தை வழியில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், தொட்ட காரியங்கள் எளிதில் நிறைவேறலாம், போசன நன்மையுண்டு.

**கடகம்** புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், மங்கையரால் ஏற்பட்ட மனக்கலக்கம் மாறும், உடல் நலம் சீராகும், புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**சிங்கம்** சஞ்சலங்கள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, வேலைச்சுமை கூடும், எடுத்த காரியங்களில் சில தாமதங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

**கன்னி** பெண்களின் சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகும், நட்பு வட்டம் விரிவடையும், பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள்.

**துலாம்** உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பகைவர்கள் விலகுவர், பழைய பாக்கிகள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு.

**விருச்சிகம்** பிள்ளைகளால் பெருமை சேரும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, எதிர்பார்த்த திட்டங்களில் சில தாமதங்கள் ஏற்படலாம்.

**தனுசு** பெற்றோர் மீது பிரியம் கூடும், திட்டமிட்ட காரியத்தை செய்து முடிப்பீர்கள், தொழில் வளர்ச்சிக்கு இடையூறாக இருந்தவர்கள் விலகுவர், வாகன சுகமுண்டு.

**மகரம்** விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும் நாள், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், சகோதர வழி ஒற்றுமை பலப்படும்.

**கும்பம்** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், நன்மைகள் நடைபெறும் நாள், எதிர்பார்ப்புக்கள் எளிதில் ஈடேறும், புதிய பொருட்சேர்க்கைக்கு அடித்தளம் அமைப்பீர்கள்.

**மீனம்** ஆழ்ந்த சிந்தனையுண்டு, ஆரோக்கியத்தில் கூடிய அக்கறை காட்ட வேண்டிய நாள், திடீர் பயணத்தால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் வடக்கு பிரதேச சபை 400 மின்விளக்குகளை பொருத்தியது

(மல்லாகம்)


வலி.வடக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் வலி.வடக்கு பிரதேச சபையினரால் இதுவரையில் 400 மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளதாக வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்.

வலி.வடக்கு பிரதேச சபையின் சபை நிதியில் இருந்து இம் மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. கடந்த வாரத்தில் வசந்தபுரம் கிராம, அபிவிருத்திச் சங்கத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக வசந்தபுரம் கிராமத்துக்கான வீதி மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

வசாவிளான் குட்டியப்புலம் பகுதிக்கான வீதிகளுக்கான மின்விளக்குகளும் அளவெட்டிப் பிரதேசத்தின் டச்சு வீதிக்கான வீதி மின் விளக்குகளும் பொருத்தப்பட்டுள்ளன.

வலி.வடக்கு பிரதேச சபையின் அதிகாரத்தினை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு கைப்பற்றியதன் பிற்பாடு வலி.வடக்கு பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டில் இருந்து இதுவரை 400 வீதி மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

இவ்வாறே வீதிகளுக்கான மின்விளக்குகள் பொருத்தப்படாத வலி.வடக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கான வீதி மின்விளக்கு பொருத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் தெரிவித்தார்.(அ-9-21)



நன்றி: மிரர்

# பல்கலை மாணவர்களின் விடுதலை கோரியும்

# வடக்குக்கிழக்கின் இராணுவ ஆட்சிக்கு எதிராகவும் கையெழுத்து போராட்டம்





(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கில் நடைபெறும் இராணுவ ஆட்சியினை உடன் நிறுத்தக் கோரியும் தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ்.பல்கலைக்கழக மாணவர்களை விடுவிக்கக் கோரியும் யாழ். நகரில் சம உரிமை இயக்கம் கையெழுத்து போராட்டம் ஒன்றினை நேற்றைய தினம் முன்னெடுத்திருந்தது.

இக்கையெழுத்து வேட்டையில் பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள், வெளிநாட்டவர்கள், சிறுவர்கள், முதியவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் எனப் பலர் பங்கேற்றிருந்தனர்.

இப்போராட்டத்தில் சமவுரிமை இயக்கத்தினால் விநியோகிக்கப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யுத்தம் முடிவடைந்து கிட்டத்தட்ட 4 வருடங்கள் கடந்துள்ள நிலையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் யுத்த சூழ்நிலையினை தொடர்ந்தும் பேணுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

அதற்கு சிறந்த உதாரணம்தான் கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்தும் சிவில் நிர்வாகம் ஸ்தம்பிக்கப்பட்டுள்ளமையும் வடக்கில் நடக்கும் இராணுவ நிர்வாகமும் இந்த இராணுவ நிர்வாகத்தின் கீழ் மக்களின் ஜனநாயக உரிமைகள் அப்பட்டமாக மீறப்பட்டு வருகின்றன. கடத்தல், காணாமல் போகச் செய்தல், கொலை செய்தல், பயமுறுத்தல் மற்றும் சித்திரவதை செய்தல் போன்றவை குறித்து பல்வேறு உதாரணங்களை கூற முடியும்.

அவற்றிற்கு மத்தியில் தமிழ் மக்களின் கலாசார உரிமைகளைக் கூட மறுத்து வருகின்றது இவ் அரசு.

எவ்வித குற்றச்சாட்டும் இல்லாமல் ஆயிரக்கணக்கானோர் சிறைப்படுத்தப்பட்டுள்ளார்கள். இராணுவ பலவந்தத்தைப் பயன்படுத்தி வடக்கு மக்களின் நிலங்கள் மற்றும் சொத்துக்களை கொள்ளையிடுவதற்கு அரசாங்கம் எடுக்கும் முயற்சிகள் வெளிப்படையாகும்.

இந்த பலாத்காரத்திற்கு சிறந்த உதாரணமாக இருப்பது கடந்த டிசெம்பர் மாதம் யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர் செயற்பாட்டாளர் மீது தொடுக்கப்பட்ட அடக்குமுறை.

மாணவர் தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டார்கள். அவர்களில் நால்வர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படாமல் தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் ஜனநாயகத்திற்கு முரணாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஜனநாயகத்திற்கு முரணான தான்தோன்றித்தனத்திற்கு எதிராக பலம்வாய்ந்த மக்கள் சக்தியை கட்டியெழுப்ப வேுண்டும்.

சில முதலாளித்துவ அரசியல் கட்சிகள் இந்த நிலைமையை பயன்படுத்தி இனவாதத்தையும் மதவாதத்தையும் பரப்பி தமது அரசியல் நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள முயற்சிக்கின்றன.

இனவாதம் எமது சமூகத்தில் பாரிய அழிவை ஏற்படுத்தியுள்ளது. எதிர்கால சந்ததியினருக்கு மீண்டும் அந்த அழிவினை பரிசாகக் கொடுக்க எங்களால் முடியாது.

எங்களது மறுக்கப்பட்ட உரிமைகளை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கான பாதை தமிழ், சிங்கள, முஸ்லிம் அனைத்து ஒழுக்கப்பட்டவர்களினதும் ஒற்றுமையிலே தங்கியுள்ளது. உரிமைகளைப் பெற்றுக் கொள்வதாக இருந்தால் தடுக்கப்பட்ட மக்கள் ஒன்று சேர வேண்டும். இனவாதமும் மதவாதமும் மக்களை பிரிக்கின்றது.


நாட்டின் அனைத்து குடிமக்களுக்கும் சமவுரிமைகள் இருப்பதாக நம்பிக்கை வைத்திருக்கும், அதற்காக குரல் கொடுக்க முன் வரும் சிங்கள, தமிழ், முஸ் லிம் மக்களையும் ஒன்றிணைத்தே சம உரிமை இயக்கம் கட்டியெழுப்பப்பட்டது. நாங்கள் எல்லோரும் இந்த ஜனநாயகத்திற்கு முரணான நிலைமைக்கு எதிராக ஒற்றுமையாக இணைவோம், போராடுவோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

வடக்கு- கிழக்கில் இராணுவ ஆட்சியினை நீக்கு, அனைத்து அரசியல் கைதிகளையும் உடன் விடுதலை செய்! கைது செய்த பல்கலைக்கழக மாணவ தலைவர்களை விடுதலை செய்! வடக்கில் இடம்பெறும் காணிக் கொள்ளையினை உடன் நிறுத்து, கடத்தல், காணாமல் போகச் செய்தல் ஆகியவற்றை நிறுத்து! என்பவற்றை வலியுறுத்தியே மேற்படி கையெழுத்து வேட்டை போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-4-6)

## தீக்காயத்துக்குள்ளான சிறுவன் உயிரிழப்பு

தீக்காயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட சிறுவன் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று உயிரிழந்தான்.

க்டந்த 4 ஆம் திகதி குறித்த சிறுவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தான். உயிரிழந்த சிறுவன் அராலி வீதியைச் சேர்ந்த சி.காண்டீபன் (வயது 17) என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. குறித்த சிறுவன் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் கடந்த 11 நாட்களாக அனுமதிக்கப்பட்டிருந்தான் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)




## வெங்காய செய்கை பாதிப்படைந்தது

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு கெருடாவில் விவசாய கிராமத்தின் வெங்காயப்பயிர்ச் செய்கை இம்முறை பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இம்முறை பெய்த கடும் பழை காரணமாகவே இவ்வாறு வெங்காயச் செய்கை பாதிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. வங்கிகளில் கடன் பெற்று பெருமளவில் வெங்காயச் செய்கையை மேற்கொண்ட விவசாயிகள் வெங்காயச் செய்கை பாதிப்படைந்ததால் அவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாக மாறியுள்ளது. (அ-5)

# இடிந்துவிழும் நிலையில் வீதியோர கிணற்றுக்கட்டு

## கவனம் செலுத்தப்படுமா?

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழையில் இருந்து அளவெட்டி நோக்கி செல்லும் வீதியில் உள்ள ஒரு கிணற்றுக்கட்டு இடிந்து விழுந்து அபாய நிலையில் உள்ளதால் அவ்வீதியால் பயணிப்போர் அச்சத்துடன் பயணிப்பதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ் வீதியில் பிரபல பாடசாலைகள் உள்ள போது அப்பாடசாலைக்கு நடந்து செல்லும் மாணவர்கள் இடிந்து காணப்படுகின்ற கிணற்றுக்குள் விழக்கூடிய அபாய நிலையுள்ளது.

இவ்வாறு இடிந்து காணப்படும் கிணற்றால் அவ்வீதியால் இரவு வேளைகளில் செல்வோர் பெரும் சிரமங்களுக்கு மத்தியிலே பயணம் செய்கின்றனர். எனவே, தினமும் நூற்றுக்கணக்கானோர் பயணிக்கும் இவ் வீதியில் இவ்வாறு இடிந்த நிலையில் காணப்படும் கிணற்றால் ஆபத்தான நிலை உள்ளது.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு இடிந்த நிலையில் உள்ள கிணற்றை புனரமைக்க முன்வர வேண்டுமென பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-28)

## சிறுதானிய விவசாயிகளுக்கு

(தனங்கிளப்பு)

மறவன்புலோ தனங்கிளப்பு பகுதியிலுள்ள விவசாய நிலங்கள் சிறுதானிய பயிர்ச்செய்கைக்காக ஐ.எம்.ஓ. நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட முட்கம்பி வேலிக்கு உட்பட்ட விவசாயிகளுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

சிறுதானிய பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கான பதிவுகளை எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்பதாக தனங்கிளப்பு, மறவன்புலோ விவசாய சம்மேளனங்களிடம் பதிவுகளை மேற்கொள்ளுமாறு மறவன்புலோ விவசாய சம்மேளனத்தலைவர் சி.திருஞானசம்பந்தர் கேட்டுள்ளார். (அ-3-37)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரசிற்றமோல் பாவனை 250 மில்லியன்களால் அதிகரிப்பு

## விசாரணை நடத்த உத்தரவு



(கொழும்பு)

நாட்டிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் பரசிற்றமோல் மாத்திரை பாவனை கடந்த வருடம் (2012) 250 மில்லியன்களால் அதிகரிப்பது தெரிய வந்திருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக உடனடியாக விசாரணை நடத்தி அது தொடர்பாகத் தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மருந்துப் பொருள் விநியோகப் பிரிவுப் பணிப்பாளருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

அரசாங்க வைத்தியசாலைகளில் வருடாவருடம் 560 தொடக்கம் 570 மில்லியன் பரிசிற்றமோல் மாத்திரைகள்தான் பாவிக்கப்படுவது வழமை. என்றாலும் கடந்த வருடம் இம்மாத்திரைப் பாவனை 810 மில்லியன்கள் வரை அதிகரித்து இருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி 2012 ஆம் ஆண்டில் மாத்திரம் பரசிற்றமோல் பாவனை மேலதிகமாக 250 மில்லியன்களால் அதிகரித்து காணப்படுகின்றது. இம் மாத்திரைப் பாவனையில் கடந்த வருடம் இவ்வாறான திடீர் அதிகரிப்பு ஏற்பட எந்த நியாயமும் இல்லை.

அதேநேரம ஈரல் ,சிறுநீரகம் உள்ளிட்ட உடல் உறுப்புக்களின் பாதிப்புக்களுக்கு பரசிற்றமோல் பெரிதும் உதவுவது தெரிய வந்திருக்கின்றது இதனால் இம்மாத்திரை பாவனையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் வைத்தியசாலைகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில்தான் இம் மாத்திரைப்பாவனை அதிகரித்து காணப்படுகின்றது. அதனால் இம் மாத்திரை பாவிக்கப்பட்டிருக்கின்றதா அல்லது திருட்டுத்தனமாக களவாடப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றதா என்பது குறித்து ஆராய்ந்து தமக்கு அறிக்கை சமர்ப் பிக்குமாறு அமைச்சர் பணிப்புரை விடுத்திருக்கின்றார். (அ-2)

# மத்திய கல்லூரி மாணவர் விடுதி

(யாழ்ப்பாணம்)

மத்திய கல்லூரி மாணவர் விடுதி மீண்டும் எதிர்வரும் 21 திகதி திங்கட்கிழமை தொடக்கம் இயங்கும் என்பதையும் அது தொடர்பான பெற்றோர் கலந்துரையாடல் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரியில் இடம்பெறும் என்றும் அதிபர் க.எழில் வேந்தன் அறிவித்துள்ளார். (அ)

# மனித உரிமைகளை பற்றிய சான்றிதழ் கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

மனிதவுரிமைகள் நிலைய அரச, அரசசார்பற்ற தனியார்துறை சார்ந்த நிறுவனங்களில் வேலை செய்யும் பணியாளர்களின் தேவை கருதியும் உயர்கல்வி கற்று விட்டு உத்தியோகத்திற்காக எதிர்பார்த்திருக்கும் இளைஞர் யுவதிகளின் நலன் கருதியும் மனித உரிமைகள் பற்றிய சான்றிதழ் கற்கைநெறி ஆரம்பிக்கப்படவுள்ளதாக சுன்னாகம், ஊரெழு மனித உரிமை நிலையத்தின் த.சண்முகநாதன் அறிவித்துள்ளார்.எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி ஆரம்பமாவுள்ள இக்கற்கை நெறி சனிக்கிழமை தோறும் முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒருமணிவரை இடம்பெற ஏற்பாடாகி உள்ளதுடன் கிட்டத்தட்ட 15 வாரங்களுக்கு 60 மணித்தியாலயத்திற்கு குறையாமல் இக்கற்கை நெறி இடம்பெறும்.

இக்கற்கை நெறி யாழ்ப்பாணம் பாங்ஷால் வீதி 90 ஆம் இலக்க கட்டடத்தில் நடைபெறவுள்ளதுடன் இலங்கை பல்கலைக்கழக சட்ட பீட விரிவுரையாளர்களும் சட்ட வரைஞர் திணைக்கள சிரேஷ்ட அதிகாரிகளும் மற்றும் பிரல்பல்யமான யாழ்ப்பாணம், கொழும்பு சட்டத்தரணிகளும் வளவாளர்களாக கலந்து விரிவுரை வழங்க உள்ளார்கள்.

இதில் கலந்துகொள்ள விரும்புவோர் 021 2240999, 0212228030 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களை பெறுவதுடன் விண்ணப்பபடிவங்களையும் பெற்றுக் கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மனிதவுரிமைகள் நிலையம் கடந்த 16 வருடகாலமாக இலங்கையில் செயற்பட்டு வருவதுடன் அதன் யாழ்ப்பாணம் கிளை கடந்த 10 வருடமாக செயற்பட்டு வருகிறது. மனித உரிமைகள் பற்றிய பார்வை உலக ரீதியாக அதிகரித்து வருகிறது.நிறைவேற்று மட்டத்தில் அமையும் நியமனங்களுக்கு மனித உரிமைகள் பற்றிய அறிவு ஓர் அவசிய தேவையாக இங்கு காணப்படும் நிலையிலேயே இவை ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9)

# குற்றப்பிரேரணை குறித்து ஜனாதிபதி பேசவில்லை

## சட்டத்தரணிகள் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொள்வதாக கூறிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குற்றப்பிரேரணை தொடர்பில் எதனையுமே தெரிவிக்கவில்லை.

அத்துடன் நீதிமன்ற நடவடிக்கைகள் நேற்று தொடக்கம் வழமைபோல செயற்படும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் சஞ்ஜய கமகே தெரிவித்துள்ளார்.

சங்கத்தின் தலைவர் விஜயதாச ராஜப க்ஷ தலைமையிலான நீதிமன்ற வலயம் 11 ஐச் சேர்ந்த நிறைவேற்றுக்குழுவின் அங்கத்தவர்கள் 30 பேர் அடங்கிய உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பு தொடர்பில் கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணை விவகாரம் நிறைவடைந்துள்ளமையினால் அது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்றும் அவ்வாறான பிரச்சினைகளின் போது அடுத்து எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடியதாகவும் அவர் சொன்னார்.

அதற்காக அரசியலமைப்பை திருத்துவதாக ஜனாதிபதி தெரிவித்தார். (அ-2)

# நீதித்துறை வரலாற்றில் இது இருண்ட சகாப்தம்

## சட்டத்தரணிகள் கூட்டிணைவு சங்கம்

(கொழும்பு)

சுயாதீனமான நீதித்துறையை பாதுகாப்பதற்கு சகலரும் கைக்கோர்க்கவேண்டும் என்பதுடன் நீதித்துறை வரலாற்றில் இருண்டை சகாப்தமாகவே இந்த சகாப்தம் எழுதப்படும் என சட்டத்தரணிகள் கூட்டிணைவின் உறுப்பினர் சட்டத்தரணி ரத்னவேல் தெரிவித்துள்ளார்.

நிப்போன் ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நீதித்துறையின் சுதந்திரம் மற்றும் அதனை பாதுகாப்பதற்காக நாம் தொடர்ச்சியாக குரல் கொடுத்தோம். பிரதம நீதியரசரை நீக்குவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

அரசியலமைப்பிற்கு முரணான வகையிலேயே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பிரதம நீதியரசரை நீக்குவதற்காக எடுக்கப்பட்டுள்ள முடிவானது சட்டவலுவற்றதாகும். அந்த தீர்மானத்தை நாம் ஏற்றுக் கொள்ளமாட்டோம். இது இலங்கையின் நீதித்துறை வரலாற்றில் இருண்ட சகாப்தம் என்றார். (அ-2)


இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

**மணமகள் தேவை**

பிறப்பு: 1964 இந்து வேளாளர்
நட்சத்திரம்: திருவாதிரை 1
உயரம்: 5'6"
கி.பா: 18.25
தகைமை/தொழில்: A/L (கோவில்வேலை,கமம்)
எ.பா: சைவபோசனம்
தொ.இ: B -984

பிறப்பு: 1979 இந்து வேளாளர்
நட்சத்திரம்: பூராடம் 2
உயரம்: 6'
கி.பா:46, 8 இல் செவ்
தகைமை/தொழில்: அச்சக உரிமையாளர்
தொ.இ: B -985

பிறப்பு: 1983 இந்து வேளாளர்
நட்சத்திரம்: உத்தராடம் 1
உயரம்: 6'
கி.பா: 67, 8 இல் செவ்.
தகைமை/தொழில்: A/L வியாபாரம் (பிரான்ஸ்)
தொ.இ: B -986

பிறப்பு: 1980 இந்து வேளாளர்
நட்சத்திரம்: அனுசம் 1
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: MSC ஆசிரியர்
தொ.இ: B -988

**மணமகன் தேவை**

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 1
உயரம்: 5'5"
கி.பா: 68.5, 7 இல் செவ்
தகைமை/ தொழில்: பட்டதாரி (அரச ஊழியர்)
தொ.இ: G -1011

பிறப்பு: 1969 இந்து விஸ்வகுலம்
நட்சத்திரம்: பூரம் 1, 8 இல் செவ்
உயரம்: 5'
தகைமை/ தொழில்: B.Com மின்சார ஊழியர்
தொ.இ: G-1014

பிறப்பு: 1972 சைவகுருமார்
நட்சத்திரம்:மூலம் , 2இல் செவ்
உயரம்: 4'8"
தகைமை/ தொழில்: O/L
எ.பா: சைவபோசனம் ஏற்கப்படும்
தொ.இ: G -1015

பிறப்பு: 1988 இந்து வேளாளர்
நட்சத்திரம்:பூரம் 4, 12 இல் செவ்
உயரம்: 5'4"
தகைமை/ தொழில்: BSc, B.Tech, MSc 1st year Student
தொ.இ: G -1016

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோய்களைத் தீர்க்கும் இரத்தினங்கள்

இரத்தினங்களுக்கு நோய்களைத் தீர்க்கும் அற்புத ஆற்றல் உள்ளது சரியான நவரத்தினக் கற்களையும் ஏனைய அதிர்ஷ்டக் கற்களையும் அணியும் போது வாழ்க்கையில் அதிர்ஷ்டங்கள் அதிகமாவதோடு உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியும் அதிகமாகிறது மேலும் உடலின் வசீகரத்தையும் இரத்தினங்கள் அதிகரிக்கின்றன. பெரும்பாலான நோய்களுக்கு மனப்பிரச்சினைகள் தான் காரணம் என்று மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர். மனதின் இறுக்கம் (Tension) படபடப்பு, பயம், தன்னம்பிக்கையின்மை, கோழைத்தனம் போன்ற மனக்கோளாறுகளே அதிக நோய்களுக்கு அடித்தளமாக இருக்கிறது.

இரத்தினங்கள் அணிவதால் மனதிற்கு உற்சாகமும் தன்னம்பிக்கையும் கிடைக்கின்றன. மாணிக்கம், பவளம் போன்றவை மனதிற்கு தைரியத்தையும் எதையும் எதிர்கொள்ளும் ஆற்றலையும் கொடுக்கின்றன. எனவே சிறந்த நிபுணர்களிடம் சரியான ஆலோசனையைப் பெற்றுக் கற்களை அணிந்து கொண்டால் நோய்கள் வராமல் தவிர்க்கலாம். உடலில் இருக்கும் நோய்களையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கலாம்.

அதுமட்டுமல்ல நோய்கள் வந்த பின்பு நீங்கள் சித்தா, ஹோமி யோபதி, அலோபதி, ஆயுர்வேதம், இயற்கை மருத்துவம் போன்ற எந்த மருத்துவ முறையையும் நாடலாம்.

இரத்தினங்கள் அணிவதால் எந்தவிதமான பக்க விளைவுகளும் ஏற்படாது. தேவைப்பட்டால்அறுவைச்சிகிச்சையும்கூடச்செய்துகொள்ளலாம். நோய்கள் விரைவில் குணமாகவும் ஆரோக்கியத்தைத் தொடர்ந்து பாதுகாக்கவும் இரத்தினங்கள் மிகவும் உதவி புரிகின்றன.

### இரத்தினங்கள் எப்படி நோய்களைத் தீர்க்கின்றன?

இரத்தினங்களிலும் நவரத்தினங்களிலும் ஏராளமான வண்ணக் கதிர்கள் நிறைந்திருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் இந்த இரத்தினங்கள் தங்களிடம் இருக்கும் உயிராற்றல் கதிர்களை தொடர்ந்து வெளியிட்டுக் கொண்டே இருக்கின்றன. இரத்தினங்கள் கிரகங்களின் கதிர்களை ஆகர்ஷிப்பதும் வெளியிடுவதும் ஒரு தொடர் நிகழ்ச்சியாக இருக்கிறது. ஒவ்வொரு கிரகமும் ஒவ்வொரு வகையான நிறமுள்ள கதிர்களை வெளியிடுகின்றன.

ஒவ்வொரு குறிப்பிட்ட இரத்தினமும் தன்னுடைய சார்பு கிரகத்தின் கதிர்களை உள்வாங்கி அதை மனிதனுக்குத் தேவையான அளவில் வெளியிட்டுக் கொண்டே இருக்கிறது. இதனால் உடலில் ஏற்படும் வண்ணக் குறைபாடுகளை சரிசெய்து நோய்களை சரிசெய்து நோய்களைக் குணப்படுத்துகின்றன.

ஆயுர்வேத சாஸ்திரத்தில் நவரத்தினங்களின் உபயோகங்களைப் பற்றி அதிகமாகச் சொல்லப்பட்டுள்ளது. மேலும் நவரத்தினங்களின் மருத்துவக் குணங்கள் என்ன? அவைகளை எப்படி நோய்களுக்குப் பயன்படுத்த வேண்டும் என்றும் ஆயுர்வேத நூல்கள் கூறுகின்றன. நவரத்தினங்களை அப்படியே மோதிரத்தில் அணிந்தும் அவைகளைப் பஸ்பம் செய்தும் (ஆயுர்வேத முறையில்) அல்லது அவைகளை அப்படியே பொடி செய்தும் பயன்படுத்தலாம் என்றும் கூறுகின்றன.

ஆயுர்வேத மருத்துவ வல்லுநர்கள் நவரத்தினங்களின் பஸ்பங்களையும் பொடிகளையும் மருத்துவ ரீதியாக இன்றும் பயன்படுத்துகின்றனர். இரத்தினங்களை பஸ்பம் செய்வது சற்று கடினமான முறையாகும். அதற்கு சில முறைகளும் பயிற்சிகளும் உண்டு. தங்க பஸ்பம், வெள்ளி பஸ்பம் போன்ற பஸ்பங்களை இன்றும் மக்கள் பயன்படுத்துகின்றனர்.

இரத்தினக் கற்களுக்கு நோய்களைத் தீர்ப்பதில் அதிக சக்தியும் அதீத குணங்களும் இருப்பதாக ஆயுர்வேதமும் சித்த வைத்திய முறையும் கூறுகின்றன.

உடலின் ஆரோக்கிய நிலையைச் சித்த மருத்துவர்கள் நாடி பிடித்து அறிந்து கொள்வார்கள். அதாவது வாதம், பித்தம் மற்றும் சிலேத்துமம் (கபம்) போன்ற 3 நாடிகள் உடம்பில் ஓடுகின்றன. இவைகள் மூன்றும் சரிவர இயங்கினால்தான் உடலில் ஆரோக்கியமும் உற்சாகமும் இருக்கும்.

இவ்வாறான முக்கிய நோய்களைப் பற்றியும் நவரத்தினங்களைக் கொண்டு எப்படி அவைகளைக் குணப்படுத்துவது என்பது பற்றியும் சுருக்கமாகப் பார்ப்போம்.

### மாணிக்கம் – சூரியன்

மாணிக்கக்கற்கள் சிவப்பு நிறக் கதிர்களை வெளியேற்றிக் கொண்டே இருக்கின்றன. குளிர்ச்சி சம்பந்தத்தினால் ஏற்படும் வியாதிகளை மாணிக்கம் குணப்படுத்தும். நமது உடலில் உள்ள எலும்புகள் முழுவதிலும் சிவப்பு நிறக்கதிர்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன. ஜாதகத்தில் சூரியன் பலம் கெட்டிருந்தால் ஏற்படும் நோய்களைத் தீர்க்கின்றன. குறைந்த அதிக இரத்த அழுத்தம் , மாரடைப்பு, இரத்தநாளங்கள் வெடிப்பு, தண்டுவடக் கோளாறுகள் போன்றவற்றை மாணிக்கத்தை முறையுடன் பிரயோகிப்பதன் மூலம் நிவாரணம் பெறலாம். இரத்தச்சோகை நோயையும் குணப்படுத்தலாம்.

### முத்து– சந்திரன்

முத்து சீதள குணத்தைக் கொண்டது. முத்துக்கள் எப்போதும் ஒரேஞ் நிறக் கதிர்களை வெளியேற்றிக் கொண்டே இருக்கின்றது. எனவே உஷ்ண சம்பந்தமான நோய்களைக் குணப்படுத்துகின்றது.

கண்நோய்கள், பைத்தியம் போன்ற மன நோய்கள், காக்கை வலிப்பு, பெரி–பெரி, சளி, இருமல் போன்ற வியாதிகளையும் குணப்படுத்துகின்றது. இரத்த 'ஓட்டத்தைச் சீர்படுத்துகிறது. மேலும் ஜலதோஷம் , பக்கவாதம், பாரிசவாயு, சிறுநீர் எரிச்சல், குடலில் இருக்கும் கற்கள், பெண்களின் மாதவிலக்கு சம்பந்தப்பட்ட கோளாறுகள், மனநிலை பேதலித்தல் போன்ற வியாதிகளையும் குணப்படுத்தும்.

### புஷ்பராகம்– குரு

இந்தக் கற்கள் நீலநிற ஒளிக்கற்றைகளை வெளியிடுகின்றன. இது வியாழன் எனப்படும் குருவின் கதிர்களை கட்டுப்படுத்திக் கொடுக்கிறது.

உடலின் கொழும்புச் சக்தி, ஈரல், தசை வளர்ச்சி போன்றவைகளுக்கு குரு அதிபதியாகிறார். குருவின் பாதிப்பால் ஏற்படும் மேற்சொன்ன நோய்களை புஷ்பராகம் அணிவதன் மூலம் நிவாரணம் அடையலாம். மேலும் அடிக்கடி மயக்கம் வருதல், தோல் நோய்கள், தொந்தி ஏற்படுதல், எக்ஸிமா , ராஜபிளவை போன்ற பிணிகளையும் இக்கற்களை அணிவதன் மூலம் குணப்படுத்தலாம்.

### கோமேதகம்– இராகு

இந்தக் கற்கள் கண்ணுக்குத் தெரியாத அல்ட்ராவயலட் நிறக்கதிர்களை வெளியிடுகின்றது. இராகு குளிர்ச்சி தன்மையுள்ள கிரகம். எனவே மிக அதிக உஷ்ண சம்பந்தமான கோளாறுகளை இக்கற்களை அணிவதன் மூலம் குணப்படுத்தலாம்.

வயிற்றில் உண்டாகும் அதிக புளிப்பு, உடம்பு எரிச்சல் மற்றும் வாயுவினால் ஏற்படும் கஷ்டங்களுக்கு இக்கல் நிவாரணம் அளிக்கின்றது. பசியை அதிகம் ஏற்படுத்தக் கூடியது. மேலும் கொலரா, முடக்குவாதம், தற்கொலை முயற்சியில் ஈடுபடுதல் போன்றவற்றையும் கோமேதகம் கட்டுப்படுத்தும்.

### மரகதம் – புதன்

இக்கற்கள் குளிர்ந்த பச்சை நிறமுள்ள கதிர்களை வெளியேற்றுகிறது. இக்கதிர்கள் மிகுந்த வீரியமுடையது மற்றும் அமைதியானது, கல்விக்கும் அறிவுக்கும் காரணமாக இருப்பவர் புதன். சரீரத்தில் சிறுநீரகம் , மண்ணீரல் , பித்தப்பை , கைகள் , பெருங்குடல் , சிறுகுடல் , உடலின் நரம்புகள் போன்ற அவயவங்களுக்கும் , ஞாபகசக்தி , புத்தி சாதுர்யம் போன்றவைகளுக்கும் புதன் காரகத்துவம் வகிக்கிறார்.

## ஜோதிடக் களம்

எனவே மேற்சொன்ன அவயவங்களில் நோய்கள் உடையவரும் புத்திக் கோளாறுகள் உடையவரும் மரகதக் கற்களை அணிந்து நிவாரணம் அடையலாம்.

மேலும் இருதய நோய் இரத்த அழுத்தம், அல்சர் எனும் குடல் புண்கள், புற்றுநோய், தலைவலி , ஆஸ்துமா , தோல் எரிச்சல் , உயர் இரத்த அழுத்தம் ஆகிய வியாதிகள் மரகதக் கற்களின் கதிர்வீச்சின் மூலம் குணமடைகிறது.

### வைரம்– சுக்ரன்

வைரக் கற்கள் இண்டிகோ (நீலக்கலரின் ஒருவகை) கதிர்களை வெளியிட்டுக் கொண்டிருக்கிறது.

சரீரத்தில் உள்ள நீண நீர்களையும் கெட்டியான கபம், கோழை மற்றும் சரீரக் கழிவையும் சுக்ரன் ஆதிக்கம் செலுத்துகிறார். வைரத்தின் கதிர்கள் வாயு , பித்தம் , கபம் போன்றவற்றில் ஏற்படும் கோளாறுகளை நீக்குகிறது.

மேலும் கண்களில் ஏற்படும் கோளாறுகள் , காது , மூக்கு , முகஜன்னி மற்றும் சுவாசுப்பை கோளாறுகள் , நிமோனியா , மூச்சுத்திணறல் , வெண்குஷ்டம் , குடல்வால் அழற்சி , குழந்தைகளுக்குவரும் இழுப்புநோய், உணர்ச்சி இன்மை , சித்தப் பிரமை போன்றவற்றையும் குணப்படுத்தும் மருத்துவ சக்தி இந்த சுக்ரனின் வண்ணமான இண்டிகோவிற்கு உண்டு.

திருமண வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகள் , திருமணம் தாமதமாகுதல் போன்றவற்றையும் நீக்கும் சக்தி படைத்தது வைரம். மேலும்ஜனனேந்திரியநோய்கள், எயிட்ஸ்போன்றவற்றையும் வைரக்கல் குணமாக்கும்.

### வைடூர்யம்

இந்தக் கற்கள் கண்ணுக்குப் புலப்படாத இன்ப்ராரெட் (ஒருவகையான சிவப்புக் கதிர்கள்) கதிர்களை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன. இது மிகவும் உஷ்ணமான கதிர்வீச்சு நிறமாகும்.மிகமிக மோசமான வியாதிகளுக்கும் தீராத வியாதிகளுக்கும் இந்தக் கற்களை அணிவதன் மூலம் நிவாரணம் அடையலாம்.புற்றுநோயை வைடூர்யக் கற்களின் மூலம் குணப்படுத்தலாம். இதுபோலவே பக்கவாதம், பரவைஸிஸ் போன்ற நீடித்த நோய்களையும் படிப்படியாகத் தீர்க்கும். உடலில் இருக்கும் அதிகபடியான வாயுவையும் கபத்தையும் வெளியேற்ற வைடூர்யம் உதவுகிறது. மேலும் தோல் நோய்கள் , கர்ப்பப்பைக் கோளாறுகள் ஆகியவற்றையும் நரம்புத் தளர்ச்சியையும் நன்கு குணமாக்கவல்லது. மயக்கம் , முடக்குவாதம் , பெரியம்மை போன்றவற்றைத் தடுக்கவல்லது. விபத்துக்கள் அடிக்கடி ஏற்படுவதையும் தடுக்கிறது.

### நீலம் – சனி

இக்கற்கள் வயலட் நிறக்கதிர்களை (கத்தரிப்பூ) வெளியிட்டுக் கொண்டே இருக்கின்றன. சனிக் கிரகத்தின் பாதிப்பினால் ஏற்படும் தோல் சம்பந்தமான நோய்களை நீலக்கற்கள் குணப்படுத்துகின்றன. தீராத வெண்குஷ்ட நோய்களையும் நீலக் கற்களின் வயலட் நிறக் கதிர்கள் குணப்படுத்துகின்றன.

மேலும் மூளைக்கோளாறுகள் , மூட்டு வலிகள், மண்டைத்தோல் கோளாறுகள், காக்கை வலிப்பு, முதுகுத் தண்டு கோளாறு, நரம்புப் பிடிப்புகள், அதிக சதை வளர்ச்சி, சிறுநீரக கோளாறுகள் போன்றவற்றையும் சனியின் கல்லான நீலக்கல் விரைவில் குணமாக்க வல்லது. இரத்தத்தில் உள்ள விஷத் தன்மைகளை இந்த வயலட் கதிர்கள் நீக்குகிறது. மேலும் நரம்பு சம்பந்தப்பட்ட வலிகள், வாத சம்பந்தப்பட்ட வலிகள், தோல் சம்பந்தப்பட்ட நோய்கள், வெண்குஷ்டம் போன்றவற்றையும் இக்கற்கள் குணமாக்குகின்றன. செவிட்டுத்தன்மை, திக்குவாய், மனதில் உற்சாகமின்மை மற்றும் கவலைகளால் ஏற்படும் உடல் பாதிப்புகளை நீலக்கற்கள் நீக்குகின்றன.

### பவளம்–செவ்வாய்

பவளக் கற்கள் மஞ்சள் நிற காஸ்மிக் கதிர்களை வெளியிடுகின்றன. இந்த மஞ்சள் நிறம் உஷ்ணம் சம்பந்தப்பட்டது ஆகும். உடலில் இருக்கும் திசுக்களைக் காயவைக்கும் தன்மை கொண்டது. பக்கவாதத்தின்போது தசைகள் இறுகி விரியும். நடப்பதற்கு சிரமமும் ஏற்படும். பவளம் சிவப்பாகத் தெரிந்தாலும் முப்பட்டைக் கண்ணாடியில் பார்க்கும் போது மஞ்சள் நிறமான கதிர்களையே பவளம்வெளியேற்றிக் கொண்டிருப்பது தெரியும்.

வயிற்றுக் கோளாறுகள், அஜீரணம், மலச்சிக்கல், வயிற்றில் காற்றோட்டம்,நீரிழிவு நோய், ஊறல், படை போன்ற தோல் நோய்களை பவளத்தின் மஞ்சள் நிறக்கதிர்கள் குணமாக்குகின்றன. மேலும் குஷ்டநோய், நரம்புத்தளர்ச்சி ஆகிய நோய்களையும் பவளம் குணப்புடுத்தும். மேலும் கோழைத்தனம்,மனக் குழப்பம், மஞ்சள்காமாலை, மன பலவீனம் ஆகியவற்றையும் பவளம் அணிவதன் மூலம் நிவாரணம் அடையலாம். பொன்னுக்கு வீங்கி, தீப்புண்கள், வெட்டுக்கள், மூளை ஜுரம், கருச்சிதைவு,இரத்தப் போக்கு போன்ற நோய்கள் மற்றும் பிரச்சினைகளையும் பவளத்தினை அணிவதன் மூலம் குணப்படுத்தலாம்.

(அடுத்த வாரம் தொடரும்)





யாழ்ப்பாணம் சத்திரச்சந்திசத்திரம்ஞான வைரவர் ஆலயத்தில் நேற்று முற்பகல் 11 மணியளவில் கோமாதா உற்சவம் இடம்பெற்றது.

இதன்போது பசுக்களின் பவனியும் பட்டிப்பொங்கல் நிகழ்வும் இடம்பெற்றதைப் படங்களில் காணலாம்.(படங்கள்;– எஸ்.ஆர்.கரன்)

## த.பே.உ.வருடாந்த பொதுக்கூட்டம்

கிளிநொச்சி மாவட்டம் தனியார் பேருந்து உரிமையாளர்களின் (உத்தரவாதம்) வரையறுக்கப்பட்ட நிறுவனத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி பழைய வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் சுதந்திரக்கட்சி கிளை அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

த.ஜெகதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் பேருந்து உரிமையாளர்கள் தங்களது பேருந்து வழியனுமதியின் போட்டோ பிரதியுடன் சமுகமளிக்குமாறு செயலாளர் க. ஜமுனாதரன் அறிவித்துள்ளார். (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் குழிவெட்டினாலும் சர்வதேசம் விமர்சிக்கின்றது

(கொழும்பு)

**அரசாங்கம் மேற்கொள்ளும் செயற்பாடுகளை சர்வதேசம் விமர்சிப்பது இது முதற்தடவையல்ல. அத்துடன் இது எமக்கு பாரியவிடயமும் அல்ல. குற்றப்பிரேரணை விடயத்தில் வருகின்ற சர்வதேச விமர்சனங்களை நாங்கள் நுட்பரீதியாக எதிர்கொள்வோம் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.**



பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை விவகாரம் தொடர்பில் சர்வதேச மட்டத்தில் வெளியிடப்படும் கருத்துக்கள் குறித்து விபரித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பில் குழியொன்றை வெட்டினாலும் சர்வதேசம் விமர்சிக்கும். பிரபாகரனை தோற்கடிக்க முற்பட்டபோதும் இவ்வாறே சர்வதேசம் விமர்சித்தது. ஆனால் நாங்கள் பிரபாகரனை தோற்கடித்து மக்களுக்கு சமாதானத்தைப் பெற்றுக் கொடுத்தோம். அது போன்றே இந்த நிலைமையையும் சமாளிப்போம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கம் முன்னெடுக்கும் அனைத்து விடயங்களையும் சர்வதேசம் விமர்சித்தே வந்துள்ளது. இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த மெனிக்பாம் முகாமில் மின்சாரம் தடைப்பட்டாலும் இந்த சர்வதேசம் விமர்சித்தது.

எமது நாட்டின் அரசியலமைப்பு மற்றும் குற்றப்பிரேரணை செயற்பாடு என்பனவற்றை புரிந்து கொண்டால் சர்வதேச சமூகம் விமர்சனங்களை முன்வைக்காது.

தற்போது எமது நாட்டின் அரசியல்வாதிகள் கூறும் விடயங்களை வைத்துக்கொண்டே சர்வதேச சமூகம் கருத்துக்களை வெளியிடுகின்றது. உண்மை நிலைமையை புரிந்து கொண்டால் சர்வதேச சமூகம் இவ்வாறு கருத்து வெளியிடாது. அமெரிக்கா போன்றே நாடுகள் எமது செயற்பாட்டை விமர்சிப்பது புதிய விடயமல்ல. பல சந்தர்ப்பங்களில் இவ்வாறு விமர்சனம் செய்யப்பட்டது. உண்மை நிலைமையை விளக்குவதன் மூலம் இதனை சமாளிக்க முடியும் என்றார். (அ-2)

## நாடு திரும்புகிறார் இரா.சம்பந்தன்

மருத்துவ சிகிச்சைக்காக இந்தியா சென்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இவ்வாரம் கொழும்பு திரும்பியதும் அமெரிக்கப் பயணம் தொடர்பான முடிபுகள் எடுக்கப்படும் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரா.சம்பந்தன் கடந்த இரண்டு மாதங்களாக தமிழ்நாட்டில் தங்கியுள்ளார். இதன் போது அவருக்கு இரண்டு கண்களிலும் புரைநீக்கசத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது குணமடைந்துள்ள அவர் இன்று இலங்கைக்குத் திரும்பவுள்ளதாகவும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை திருகோணமலை ஆலடி விநாயகர் ஆலய புனரமைப்புக்கான அடிக்கல் நாட்டு விழாவில் பங்கேற்கவுள்ளதாகவும் திருகோணமலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, வோஷிங்டனுக்கு வருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அமெரிக்கா அழைப்பு விடுத்திருந்த நிலையில் இரா.சம்பந்தன் கொழும்பு திரும்பியதும் அந்தப் பயணத்துக்கான ஒழுங்குகள் தீர்மானிக்கப்படும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்வதில்லை

## கனடாவின் முடிபு வலுப்பெறுகிறது

ஷிராணி பண்டாரநாயக்கவை பிரதம நீதியரசர் பதவியிலிருந்து நீக்கியதன் மூலமாக பொதுநலவாய நாடுகள் மாநாட்டில் கனடா பங்கேற்பதில்லை என்ற தீர்மானம் மேலும் வலுப்பெற்றுள்ளதாக கனடா பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டு இலங்கையில் இடம்பெறும் பொதுநலவாய நாடுகள் மாநாட்டில் கனடா பங்கேற்காது என ஏற்கனவே எச்சரித்திருந்தது. இதேவேளை, பொதுநலவாய நாடுகள் கொள்கைகளை இலங்கை அரசாங்கம் முழுமையாக அமுல்படுத்த வேண்டும் எனவும் கனடா வலியுறுத்தியது.

கடந்த 2009 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற போர் முடிபிற்கு கொண்டு வந்ததன் பின்னர் மனித உரிமைகள் ஜனநாயகத்தை நாட்டில் நிலைநாட்டும் பொறுப்பு இலங்கை அரசிற்கு உள்ளது எனவும் இவ்விடயம் குறித்து கனடா பிரதமர் தெரிவித்துள்ளார்.

உலக நாடுகள் பலவற்றின் கண்டனங்களுக்கு மத்தியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஷிராணி பண்டாரநாயக்கவை பிரதம நீதியரசர் பதவியிலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை நீக்கியுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார். (அ-2)

# புதிய அரசியல் அமைப்பு சட்டம் தயாரிக்கப்படும்

## மூன்று மாதங்களில் தே.பி.முன்னணி

மூன்று மாதங்களுக்குள் நாட்டுக்கு தேவையான புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தை தயாரித்து அதனை ஜனாதிபதிக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய பிக்கு முன்னணியின் தலைவர் மிட்டியாகொட குணரத்ன தேரர் தெரிவித்துள்ளார்

கண்டியில் தேசிய பிக்கு முன்னணியின் தேரர்கள் நேற்று முன்தினம் மல்வத்து மற்றும் அஸ்கிரிய மாநாயக்க தேரர்களை சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

அவர் நாட்டின் தற்போதைய அரசியல் அமைப்புச் சட்டம் காரணமாக சர்வாதிகாரிகள் உருவாகுவார்கள் எனவும் நாட்டு மக்களின் வாக்குகளினால் தெரிவுசெய்யப்படுபவர்கள் சர்வாதிகாரிகளாக மாறுவதை தடுக்க சிறந்த வழி புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்குவதாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். பௌத்த சாசனத்தையும் நாட்டையும் பாதுகாக்கும் பொறுப்பு பௌத்த பிக்குகளுக்கு இருப்பதால் தாம் இந்த நடவடிக்கையை எடுக்க தீர்மானித்துள்ளதாகவும் பௌத்த மதத்தை பயன்படுத்தி ஆட்சிக்கும் சிலர் தொடர்ந்தும் அந்த பொய்யை செய்ய இடமளிக்க போவதில்லை. இதனால் தேசிய பிக்குகள் முன்னணி உருவாக்க போகும் புதிய அரசியல் அமைப்புச் சட்டம் குறித்து முதலில் மாநாயக்க தேரர்களுக்கு தெளிவுபடுத்தியதாகவும் தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# அரசியல் சாசனத்தில் குறைபாடுகள் இருக்கலாம்?

## ஒப்புக்கொள்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

நாட்டின் அரசியல் சாசனத்தில் குறைபாடுகள் காணப்படலாம் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர்களுடன் நடைபெற்ற சந்திப்பின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.


இவ்விடயம்தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் சாசனத்தில் குறைபாடு காணப்பட்டாலும் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமானது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் அரசியல் சாசனத்திற்கு அமைவான வகையில் அமைந்துள்ளது.

சில வேளைகளில் அரசியல் சாசனத்தில் குறைபாடுகள் காணப்படலாம் எனவும் உலகில் எந்த நாட்டிலும் குறைபாடுகள் அற்ற பூரணமான அரசியல் சாசனம் கிடையாது.

நீதித்துறையில் ஏற்பட்டுள்ள முரண்பாட்டு நிலைமைகளை அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்றார். (அ-2)





யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியினால் ஒழுங்கு செய்யப்பட்ட தைப்பொங்கல் நிகழ்வு நேற்று முன்தினம் கல்வியியற்கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவிற்கு கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிப்பதையும் அருகில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன்ஆகியோர் நிற்பதையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை மாத இராசி பலன்

# 14.01.2013-12.02.2013




மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம், 1, 2, 3 ஆம் பாதங்கள்

விரயங்களிலிருந்து தப்பிக்க விழிப்புணர்ச்சி தேவை!

மற்றவர்களின் நட்புக்கு பாத்திரமாகி மனம் இனிக்கப் பேசும் மிதுன இராசி நேயர்களே!

உற்றார், உறவினர்களின் பாசத்தை ஒருங்கே பெற்ற உங்களுக்கு இந்த தை மாத கிரக நிலைகள் தக்க விதத்தில் அமையவில்லை என்பதால் சிக்கல்கள் தீரச் சிவபெருமானையும் விஷ்ணுவையும் வழிபடுவது நல்லது. எக்காலத்திலும் உங்களுக்கு இறைவனின் துணை இருந்தாலும் இக்காலத்தில் எட்டில் நான்கு கிரகங்கள் கூடி மாதம் தொடங்குவதால் கூடுதல் கவனத்துடன் செயற்பட்டால் குழப்பங்களிலிருந்து விடுபட இயலும்.

8 இல் மாதம் தொடங்கும் பொழுது சந்திரன், சூரியன், செவ்வாய், புதன் ஆகிய நான்கும் இணைந்து சஞ்சரிக்கிறார்கள். கேதுவின் ப்ர்வை உங்கள் இராசியில் பலமாக பதிகிறது. எனவே, வீண் செலவுகளும் விரயங்களும் அதிகரிக்கலாம். மானாகத் துள்ளி திரிந்த நீங்கள் மருத்துவ செலவோடும் மனக்கவலையோடும் வீட்டில் இருக்கலாம். ஆனால், தைரியத்தையும் தன்னம்பிக்கையையும் மட்டும் கைவிட வேண்டாம்.

கும்பத்தில் செவ்வாய் சஞ்சரித்த இராசிக்கு 6, 11 இற்கு அதிபதி செவ்வாய். எதிர்ப்பு, வியாதி, கடன் மற்றும் இலாபம் ஆகியவற்றிற்கு அதிபதியான செவ்வாய் 9 இல் சஞ்சரிக்கும் போது தந்தை வழி எதிர்ப்புகள் மாறும். பங்காளிப் பகை விலகும். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். ஒரு சொத்தை விற்று மற்றொரு சொத்தை வாங்கும் சூழ்நிலை ஒரு சிலருக்கு உருவாகலாம். சகோதர சச்சரவுகள் அகலும்.

## பொன், பொருள், சொத்துக்களும் சேரும் வம்பு வழக்குகளில் இருந்து விடுதலை கிடைக்கும்

பின்னர் கொடுக்கல், வாங்கல்களில் நிலைமை சீராகும். அன்பு மனதோடு பழகுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

பொன், பொருள், சொத்துக்களும் சேரும். வம்பு வழக்குகளில் இருந்து விடுதலை கிடைக்கும்.

குறிப்பாக குரு வழிபாடும், துர்க்கை வழிபாடும் விடாது செய்து வருவது நல்லது. சர்ப்ப கிரகத்தின் பார்வையால் ஏற்படும் அர்ப்பப் பலனை அற்புதப்பலனாக மாற்ற சர்ப்ப சாந்திகளை செய்வது நல்லது.

கும்பச் செவ்வாய் கொடுக்கும் பலன்கள்!

கும்பத்தில் செவ்வாய் ஜனவரி 23 இல் சஞ்சரிக்கப் போகிறது. உங்கள்

கும்ப புதனின் சஞ்சாரம்!

கும்ப இராசியில் புதன் ஜனவரி 28 ஆம் திகதி சஞ்சரிக்கப் போகிறார். இராசி நாதன் 9 இல் சஞ்சரிக்கும் இந்த நேரம் தான் ஆசைகள் எல்லாம் நிறைவேறும் நேரம். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கொடுத்து வைத்த பணம் வந்து சேரும். கூடுதல் விழிப்புணர்ச்சி இல்லாமல் செயற்பட்டாலும் இலாபம் வந்து கொண்டேயிருக்கும். உத்தியோக மாற்றங்கள் ஒரு சிலருக்கு உருவாகலாம்.

சுக்ரப் பெயர்ச்சியும் குருவின் வக்ர நிவர்த்தியும்!

இது ஒரு விபரீத இராஜயோக காலம். திட்டமிடாது செய்யும் காரியங்கள் வெற்றி பெறும். 12 இற்கு அதிபதி சுக்ரன் 8 இல் சஞ்சரிக்கும் நேரம் ஜனவரி 29 குருவின் வக்ர நிவர்த்தி பெப்ரவரி 6 இந்த இரண்டின் பார்வையும் உங்களுக்கு எண்ணற்ற நல்ல காரியங்களை நடத்தி வைக்கும். தொழில் வளர்ச்சி கூடும். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். அஞ்சல் வழி செய்தியும் ஆச்சரியப்பட வைக்கும். இம்மாதம் பிரதோஷ வழிபாட்டால் பெருமைகளைக் காணலாம். பெண் தெய்வ வழிபாடும் பிரச்சினைகளை தீர்க்கும்.

பெண்களுக்கான சிறப்பு பலன்கள்

இம்மாதம் ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்த வேண்டிய மாதமிது. முதல் வாரத்தில் நோய்கள் முற்றுகையிடலாம். மறுவாரத்தில் உறவினர்கள் முற்றுகையிடுவர். மூன்றாம் வாரம் வருமானம் வந்து சேரும். நான்காம் வாரத்தில் நல்ல காரியங்களை செய்வீர்கள். கணவன்-மனைவிக்குள் விட்டு கொடுத்து செல்வது நல்லது. ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. அங்காரகனுக்கு பரிகாரம் செய்வது ஆனந்த வாழ்க்கையை வழங்கும்.

# சிவல்புரி சிங்காரம்

புனர்பூசம் 4ஆம் பாதம் பூசம், ஆயிலியம்

காக வாகனத்தானைக் கைகூப்பித் தொழுவது நல்லது.

பிறர் மனதை அறிந்து கொள்ளும் ஆற்றலைக் பெற்ற கடக இராசி நேயர்களே!

அர்த்தாஷ்டமச்சனியும் அர்த்தாஷ்டம ராகுவும் வந்திணையும் நேரத்தில் தை மாதப்பிறப்பு நிகழ்கிறது. சப்தம ஸ்தானத்தில் யோகம் செய்யும் செவ்வாயுடன் இராசிநாதனும் தனாதிபதியும் சேர்ந்து சஞ்சரிப்பதால் செல்வ்வளம் பெருகும். செலவு வரும் முன்னதாகவே வரவு வந்து சேரும். ஆரோக்கிய பாதிப்புகள் வரக்கூடிய வாய்ப்பு அதிகமுள்ள மாதத்தில் காகவாகனத்தான் என்று வர்ணிக்கப்படும் சனியை கைகூப்பித் தொழுது வழிபாடு செய்யுங்கள். தேகநலனும் சீராகும். தெய்வ நிலையும் உயரும். 6, 9 இற்கு அதிபதி வக்ரம் பெற்றிருக்கிறார். வக்ர குருவால் வளர்ச்சியும் உண்டு. தளர்ச்சியும் உண்டு. அக்கறை செலுத்தினால் காரியம் நடக்காது. அக்கறை செலுத்தாத போது காரியம் நடக்கும். என்ன ஆச்சரியம் என்று எல்லோரிடமும் சொல்வீர்கள். விபரீத இராஜயோகம் ஒருவருக்கு வேகமாய் வந்தால் கவலை திடீரென மாறும். காசு, பணப்புழக்கம் அதிகரிக்கும். குவலயம் போற்றும் வாழ்வமையும் கொடுக்கல் - வாங்கலும் சீராகும். அதேபோலத்தான் 6 இற்கு அதிபதி வக்ரம் பெறும் பொழுதும் நடைபெறும். கேது என்னும் செம்பாம்பு 10 இல் நின்றால் கிட்ட வந்த தொழில் யாவும் விட்டுப்போகும். ஆதரவு தருபவர்கள் விலக நேரும். ஆனாலும் தனாதிபதி உங்கள் இராசியை பார்ப்பதால் ஏதோ ஒரு வழியில் செல்வம் வரும். எப்படி வந்தது என்று வியப்படைவீர்கள். தோதாக புதிய தொழில் வந்து வாய்க்கும். தொல்லை தந்த எதிரியெல்லாம் விலகிச் செல்வர். ஆதரவாய் இராகு நிற்கும். அடுத்து செவ்வாயின் ஒத்துழைப்பு கிடைக்கும். வாதாடும் நபர் விலகவும் வரவில் வரும் தடைகள் அகலவும் சர்ப்ப சாந்திகளை முறையாக செய்வது நல்லது.

கும்பச் செல்வாய் கொடுக்கும் பலன்கள்

அஷ்டமத்தில் செவ்வாய் அடியெடுத்து வைக்கும் நேரம் ஜனவரி 23 செவ்வாயின் சஞ்சாரம் தேகத்தில் தொல்லை தரும். பூமி விற்பனையில் புதியதொரு திருப்பம் வரும். சாமி துணையிருந்தால் சகலமுமே வெற்றியாகும். சேமிப்பில் சிறிய தொகை வைத்தியச் செலவு ஆகலாம். செல்லும் வாகனத்தில் கவனம் தேவை. அங்காரகனுக்கு அர்ச்சனை செய்தால் தங்கு தடைகள் அகலும்.

கும்ப புதனின் சஞ்சாரம்

ஜனவரி 28 இல் 3, 12 இற்கு அதிபதியான புதன் முன்னேற்றப் பாதைக்கு உங்களை அழைத்து செல்ல 8 இல் சஞ்சரிக்கப் போகிறார். மறைந்த புதன் நிறைந்த தனலாபத்தைக் கொடுக்கும். மாமன், மைத்துனர் வழியில் மங்கலச் செய்தியை கொண்டு வந்து சேர்க்கும். வழக்கில் திருப்பம் வரும். வராத தொகை வந்து சேரும் .

சுக்ரப் பெயர்ச்சியும் குருவின் வக்ர நிவர்த்தியும்

ஜனவரி 29 இல் மகரத்தில் சுக்ரன் சஞ்சரிக்கிறார்.பெப்ரவரி 6 இல் குரு வக்ர நிவர்த்தியாகின்றார். இந்த நிகழ்வுகளின் மூலம் தாக்குதல்களும் ஏற்படலாம். தூக்கிப் பேசும் மாந்தர்களால் தொட்ட காரியங்களிலும் வெற்றி பெறலாம்.எதற்கும் முன்னெச்சரிக்கையுடன் செயற்படுவதுதான் முன்னேற்றத்திற்கு வித்திடும். அரசியல்வாதிகளாக இருந்தால் புதிய திருப்பங்கள் ஏற்படும். இம்மாதம் நிலவு வழிபாட்டால் நிம்மதி காணலாம். கிரிவலம் வந்து கீர்த்தியைக் காணுங்கள்.




பெண்களுக்கான சிறப்பு பலன்கள்

இம்மாதம் தனாதிபதியின் பார்வை பதியும் மாதம் என்பதால் பணப்புழக்கம் அதிகரிக்கும். வாங்கிய கடனைக் கொடுத்து மகிழ்வீர்கள். கொடுத்த கடனை மீட்டுக்கொண்டு வரலாம். அஷ்டமத்தில் செவ்வாய் அடியெடுத்து வைக்கும் பொழுது உடன்பிறப்புக்களையும் உடன் இருப்பவர்களையும் அனுசரித்துச் செல்வது நல்லது. மாதத்தின் மையப்பகுதியில் சுபகாரியப் பேச்சுக்கள் திடீரென முடிவிற்கு வரலாம். வீடுவாங்கும் முயற்சியில் தாமதம் ஏற்படுகிறதே என்று கவலைப்படுவீர்கள். கணவன்-மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்வதே ஒற்றுமைக்கு வித்திடும். (தொடரும்)

## பணப் புழக்கம் அதிகரிக்கும் குவலயம் போற்றும் வாழ்வமையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மூன்றாம் உலகப்போர்

**16**

## மானுடத்திற்கான திடக்கண்ணீர்!

பட்டப்படிப்பை முடிச்ச முத்துமணி வேலவெட்டி இல்லாம விருதாப் பயல்களோட சுத்தித்திரிஞ்ச காலத்துல குடல்வெந்து கும்பி கருகிப்பேசுனாரு கருத்தமாயி:

"மகனே போறபோக்குச் சரியில்லப்பா; புத்திய மாத்திக்க வம்பாடு பட்டு உன்னைப் படிக்வச்சேன்டா. படிச்சு முடிச்சுட்டு உங்கவும் உறங்வும் ஊர்மேயுறதுமா இருந்தா வீடு வெளங்காதுரா. அரை உசிராக் கெடக்கன்டா அப்பன். கைகால் விழுகிறதுக்கு முன்ன கைகொடு மகனே. ரெண்டு கடன் பட்டவன்டா நானு. ஒண்ணு எங்கப்பன் பட்டகடன்; ரெண்டாவது கடன் நான் பெத்த கடன்டா. உங்க மூணுபேரையும் கரைசேத்துட்டா கட்டையச் சாஞ்சிருவேன். மண்ணும் மக்களும் தவிர வேறே என்னடா இருக்கு விவசாயி பொழப்புல..."

கருத்தமாயி இன்னும்பேசி முடிக்கல.

தட்டுல வச்ச சோத்த மோந்துபாக்க வந்த பூனைய வெ[illegible]க்குமாரு எடுத்து ஒரு வீசு வீசிட்டு ஆரம்பிச்சிட்டா சிட்டம்மா.

"ஏ! பூனைக்குட்டி! பிள்ளமேல சும்மா வள்ளுவள்ளுன்னு விழுக வேணாம்னு சொல்லிவையி. எம் பிள்ளை பிச்சையெடுத்து எச்சிச்சோறு தின்னு படிச்சிட்டுவந்து நிக்குது. சும்மா அதுகாதுக்குள்ள தார்க்குச்சிய வச்சுக் குத்திக்கிட்டேயிருந்தா வேலை வந்துருமா? அததுக்கு ஒரு காலம் வரணும்; கருப்புசாமியும் கண்ணு தொறக்கணும்."

அப்பன் ஆத்தாள மோத விட்டுட்டு கயித்துக்கட்டில்ல ஒக்காந்து காலரட்டிக்கிட்டே, அவிச்ச வேர்க்கடலையைத் தின்னுக்கிட்டிருக்கான் முத்துமணி.

திண்ணையில படிச்சுக்கிட்டிருக்கான் பள்ளிக்கூடத்துப்பய சின்னப்பாண்டி. அடுப்புல கிடந்த பாலுக்குக் கங்க தள்ளிக்கிட்டிருக்கா தேனு.

"ஆத்தா வேலைக்குப் பேசி வச்சுட்டேன். அதுக்குக் கருப்பு சாமி கண்ணு தொறக்கவேணாம். கருத்தமாயி கண்ணு தொறந்தாப்போதும்."

"என்னடா சொல்ற?" இழுத்தா ஆத்தா.

"காட்டு இலாகாவுல வேலை காலியிருக்காம் போட்டுத்தாறேங்குறாக மூணுலட்சம் போகுதாம். சாதிசனமாப் போயிட்ட, குடுக்கிறதைக்குடு முத்துமணி-செஞ்சு தாரேன்னு சொல்லியிருக்காரு மாவட்டச் செயலாளரு."

"லஞ்சக்காசுக்கு எங்கடா போறது? நெலத்தைக் கிலத்தை விக்கச் சொல்றியா? பதறிப்போனாரு கருத்தமாயி."

"இல்லாதவன்தான விக்கணும்?"

"அப்ப நான் வச்சுக்கிட்டா வஞ்சகம் பண்றேன்?"

## வெடிச்ச vw; விவரமான ஆளு...!

"வஞ்சகம் பண்ணமாட்ட.ஆனா வச்சிருக்க."

"நானே இத்து எலும்பில்லாம செத்துச் சீவனில்லாம கெடக்கேன். என்னத்தடா வச்சிருக்கேன்?"

"தங்கச்சி கல்யாணத்துக்கு நகையும் காசும் சிறுகச் சிறுக சேத்து வச்சிருக்கீகல்ல...? வித்துக்குடுத்தால் வேலை வாங்கிருவேன்ல?"

அதுவரைக்கும் சுவர்ல வரைஞ்ச கோடுமாதிரி சுவத்துல ஒட்டியே கிடந்த கருத்தமாயி, அடிச்ச பந்து மாதிரி வெடிச்சு எந்திருச்சாரு.

"ஏன்டா காலிப்பயலே அடிமடியிலயா கைவைக் கப்பாக்கிற?.. ஒன்னியக் கொல்லாம விடமாட்டேன்."

முறுக்கி நின்ன தகப்பன ஒரே ஓட்டமா ஓடிவந்து கையப் புடிச்சு இழுத்துட்டான் சின்னப்பாண்டி.

அப்பன் காச்சு மூச்சுன்னு கத்த, ஆத்தா குய்யோ முய்யோன்னு கூச்சல்போட தேனு பயந்துபோயி தலையில கைவச்சு மூலையில முண்டிநிக்க, குடும்பத்துக்குள்ள குத்துவெட்டாகத் தெரிஞ்சுச்சு.

இத்தன கூத்துக்கு மத்தியில ஆடாம அசையாம சொத்தைக் கடலைக்குள்ள நல்ல கடலையைத் தேடித் தின்னுகிட்டே பதறாமச் சொன்னான் முத்துமணி:

"மொதல்ல மகளுக்கு மாலையா? மகனுக்கு வேலையா? கெழவன் கெழவி முடிவு பண்ணிக்குங்க."

அப்பன் ஆத்தாகிட்ட அடிச்சுப் பறிச்ச காச அடிமடியில கட்டி ஒளிச்சு வச்சிருக்கான் முத்துமணி. அவன் பக்கத்துல ஒரு பய; அவன் வயசுதான் இருக்கும்- செக்கச்செவேர்ன்னு ஒக்காந்திருந்தான் பக்குபக்குன்னு முழிச்சுக்கிட்டு.

அவன் அடிமடியில கன்னங்கரேல்ன்னு ஒரு கறுப்புப் பை. கண்ணுல ஒரு கலவரம். பயந்து பயந்து பேசறான் காதுக்குள்ள:

"நிச்சயமாக் கெடைக்குமா முத்துமணி."

"நம்பு ராம்குமார். மாவட்டச் செயலாளர் ஒருவகையில எனக்குத் தூரத்துச் சொந்தம். மனுஷன் பணத்துக்கு அஞ்சலேன்னாக்கூட எனத்துக்கு அஞ்சுவாரு. உறுதியா ஒனக்கு இந்த வேலை வாங்கித் தர்ரேன். கல்லூரியில எனக்கு எவ்வளவோ உதவி செஞ்சிருக்க. உனக்கு இதுகூடச் செய்ய மாட்டனா? காச நீ குடு; கவரை நான் குடுக்கறேன்."

மாவட்டச் செயலகம்ன்னா லேசுப்பட்ட உத்தியோகம் இல்ல. மந்திரியில பாதி; சமயத்துல சகலத்துலயும் பாதின்னு கூடச்சொல்லலாம். பொக்கப்பாண்டி பொக்கப்பாண்டின்னு சொன்னாத்தான் அந்த ஆளை ஊரு



நாடு அறியும். மற்றும்படி பொற்கைப் பாண்டியன்ங்கறதெல்லாம் தட்டிக்கும் சுவரொட்டிக்கும் உண்டான பேரு.

ஊருல பெரியவீடு; ஆனா- தெரியாது அப்படி. முன்பக்கம் பழைய கூரைய அப்படியே வச்சுக்கிட்டுப் பின்பக்கம் ஏகத்துக்கும் இழுத்துக் கட்டியிருக்காரு வீட்ட.

திறந்தே கிடக்கும் கதவு; கொறையாது கூட்டம் .நாற்காலியில ஒருத்தனும் கைப்புடியில ஒருத்தனுமா ஒழுங்கு மரியாத் இல்லாம ஒக்காந்திருப்பாக ஆளுக.

தங்கச் சங்கிலிபோட்ட தலைசீவாத ஒருத்தனும் மூஞ்சி செரைக்காம கறுப்புக் கண்ணாடிபோட்ட ஒருத்தனும் மோப்ப நாய்க மாதிரி வந்து வந்து போவானுக. மோப்ப நாய்க கண்டுபுடிச்சிடும் வந்திருக்கிறவன் மூட்டை முடிச்சுக்குள்ள என்னென் இருக்குன்னு பொக்கப் பாண்டிக்கு. முன்மண்டையில முடியில் லேன்னு மீசையைப் பெரிசா வைச்சிருந்தாரு பொக்கப் பாண்டி. அந்த மீசை என்னடான்னா தான் சிறுசாகி வழுக்கையைப் பெரிசாக் காமிச்சு நிக்குது.

அண்ணே... இவருதான் ராம்குமாரு. கூடப்படிச்சவரு

கும்புட்டு அறிமுகப்படுத்தின முத்துமணி ராம்குமாரைப்பாத்து ஒரு கண்ணமட்டும் ஓரமா அடிச்சான்.

அவனும் எந்திருச்சு பவ்வயமாக் குடுத்தான் பைய. பணத்தக் கையால தொடறது இல்லன்னு பாலிசி உள்ளவரு பொக்கைப்பாண்டி; அதக் கைநீட்டி வாங்காம ஓரமா வைக்கச் சொல்லி[illegible]டை மட்டும் காட்டுனாரு.

"முத்துமணி யாருப்பா ? அண்ணன் கூப்புடுறாரு."

தடபுடன்னு எந்திருச்சு உள்ள போனாக ரெண்டுபேரும்.

வாப்பா ஒக்காரு.. உணர்ச்சியில்லாம உதடு மட்டும் ஆடிச்சு மேசைமேல பொத்துனாப்புல பைய வச்சான்பய.

"மலபோல நம்பியிருக்கேன் ஒங்கள. மாவட்டத்துக்கு எங்க குலசாமி நீங்கதாண்ணே. எப்படியும் செஞ்சகுடுத்துருங்கண்ணே."

"பாப்பம் என்கோட்டா இருக்குல்ல மாவட்டத்துக்கு" மேசையில இருந்த அட்டையை ஒரு சைசாச் சாச்சு ஒரு தள்ளுத்தள்ளுனாரு பைய; பாம்பு வாயில விழுந்த தேரை மாதிரி பக்குன்னு ஓடி உள்ளவிழுந்து போச்சு பையி. சட்டுன்னு எந்திருச்சான் முத்துமணி.

"ராம்குமார்... ஒரு நிமிஷம் வெளியே இரு," சத்தமாச் சொன்னவன் அவன்காதுக்குள்ள கமுக்கமாச் சொன்னான்: அண்ணன்கிட்ட அழுத்திச் சொல்லிட்டு வந்துர்றேன். ரெண்டாவது கும்புடு போட்டுட்டு விசுக்குன்னு வெளியேறிட்டான் ராம்குமார்.

அவன் போனவேகத்துல ராம்குமார் கொடுத்த கவரை பனியனுக்குள்ள போட்டுக்கிட்டு தன் கவரை எடுத்தான் முத்துமணி.

அண்ணே அவன் என்கூடப் படிச்சவண்ணே அவன் கைகால்ல விழுந்து கடன்காசு வாங்கிட்டு வந்து குடுதத்துருக்கேண்ணே. இது சத்தியமா உங்களுக்குச் சேரவேண்டிய காசுன்னுதான் அவனக்கூப்பிட்டுவந்தேன். இந்தக்கவர்ல இருக்குண்ணெ என் விவரம். இந்த வேலைய எப்படியாச்சும் எனக்கு வாங்கிக் குடுத்துட்டீங்கன்னாமூணு தலைமுறைக்கு ஒங்க காலடியலேயே கெடக்கும் எங்க குடும்பம்; உங்கள அமைச்சராக்கி அழகு பாக்கற வரைக்கும் எங்க அட்டணப்பட்டி ஓயாதுண்ணே.

கவரைக் குடுத்தான்; கையப்புடிச்சான்; கண்ணுல தண்ணிய ஒழுக விட்டான். விறுவிறுன்னு வெளியே வந்தான். சினேகிதனைக் கட்டிப்புடிச்சு சொல்றான்:

"ராம்குமார்... வேலை நிச்சயம். இது நம்ம நட்புமேல சத்தியம்."

"ஒன்ன மறக்கமாட்டேன் முத்துமணி. எங்க குடும்பமே ஒனக்குக் கடமைப்பட்டிருக்கு."

நண்பனை பஸ் ஏத்தி அனுப்பி வச்சுட்டு சரசரன்னு சாராயக் கடைக்குப் போயி மூணு பாட்டில் தண்ணி அடிச்சான்; வறுத்த பன்னிக்கறி வாங்கி ஊறுகாயிலயும் லேசா ஒரசிக்கிட்டான்.

அடுத்தவன் காசு வேலவாங்க; அப்பன் ஆத்தா காசு தண்ணியடிக்க.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்படையினரின் கட்டுப்பாட்டில் புனித சதா சகாய மாதா ஆலயம்

## மீட்டுத்தரக்கோரி செல்வம் எம்.பி. பாதுகாப்பு செயலருக்கு கடிதம்

(மன்னார்)

தலைமன்னார் பியர் பகுதியில் அமைந்துள்ள புனித சதா சகாய மாதா ஆலயம் பல வருடங்களாக அப்பகுதியில் உள்ள கடற்படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளமையினால் மக்கள் சுதந்திரமான முறையில் மத வழிபாடுகளை மேற்கொள்ள முடியாத நிலையில் இருப்பதாகவும் உடனடியாக கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள குறித்த ஆலயம் உடனடியாக மக்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கக்கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ,கோத்தபாய ராஜபக்ஷவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

தலைமன்னார் பியர் பகுதியில் அமைந்துள்ள புனித சதா சகாய மாதா ஆலயமானது மிகவும் பழைமை வாய்ந்ததாகும். சுமார் 3 ஏக்கர் நிலப்பரப்பை கொண்டுள்ளது.

தற்போது சுமார் 150 குடும்பங்கள் வரை குறித்த ஆலயத்தில் மத வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். யுத்த காலம் முதல் தற்போது வரை குறித்த ஆலயம் கடற்படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது.

குறித்த ஆலயத்திற்கு செல்லும் பக்தர்கள் கடற்படையினரின் அனுமதியை பெற்று தேசிய அடையாள அட்டைகளை கடற்படையினரிடம் கொடுத்து விட்டே உள் செல்ல வேண்டும். இதனால் அந்த மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். யுத்தம் முடிவடைந்த நிலையில் அந்த மக்கள் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் மத வழிபாடுகளில் ஈடுபட முடியாத நிலையில் உள்ளனர்.

எனவே, கடற்படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள தலைமன்னார் பியர் பகுதியில் அமைந்துள்ள புனித சதா சகாய மாதா ஆலயம் மீட்கப்பட்டு அந்த மக்கள் சுதந்திரமான முறையில் மத வழிபாடுகளில் ஈடுபட உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன் என குறித்த கடிதத்தில் அவர் கேட்டுள்ளார். (அ-2)

## கிளி.தபால் நிலையம் 19 ஆம் திகதி திறப்பு

போர்ச் சூழலின் போது முழுமையாக சேதம் அடைந்திருந்த கிளிநொச்சி தபால் நிலையம் புனரமைப்பு செய்யப்பட்டு எதிர் வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

அன்றைய தினம் அமைச்சர் முற்பகல்11 மணி யளவில் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடைபெறும் பொங்கல் விழாவில் கலந்து கொள்வதோடு பிற்பகல் ஒரு மணிக்கு கிளி.மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ள கலந்துரையாடலிலும் கலந்து கொள்ளவுள்ளார். (அ-3-254)

## நிர்வாகிகள் தெரிவு

கைதடி தென்கிழக்கு விநாயகர் சன சமூக நூல் நிலையத்தின் இவ் ஆண்டிற்கான புதிய நிர்வாகத் தெரிவு கடந்த 13 ஆம் திகதி விநாயகர் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது நூல்நிலைய புதிய தலைவராக செ.மயூரன், உப தலைவராக க.மயூரன், செயலாளராக நி.கரன், பொருளாளராக பொ.கஜேந்திரகுமார், உப செயலாளராக து.சிறிதரன் ஆகியோர் தெரிவாகினர். (அ-5)

# 25 வயதுக்கு குறைந்தவர்கள் பணிப்பெண்களாக செல்ல முடியாது

## அமைச்சர் டிலான் தெரிவிப்பு

(கொழும்பு)

25 வயதுக்கும் குறைந்தவர்கள் வீட்டுப் பணிப்பெண்களாக வெளிநாடுகளில் வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

வீட்டுப் பணிப்பெண்களாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்லும் பெண்களின் குறைந்தபட்ச வயது 25 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளுடன் தொழில் உடன்படிக்கைகள் கைச்சாத்திடும் போது சஹரிய சட்டங்கள் மற்றும் இலங்கை சட்டங்கள் கருத்திற் கொள்ளப்படும் என வெளிநாட்டு வேலை வாய்ப்பு மேம்பாட்டு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

உடன்படிக்கைகளின் போது தொழிலாளர்களின் நலன்களை உறுதி செய்யக்கூடிய வகையிலான நிபந்தனைகள் உள்ளக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பணிப்பெண் ரிஸானா நபீக்கிற்கு அண்மையில் சவுதி அரேபியாவில் சிரச்சேதம் செய்யப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் பாரிய தொழிற்சங்க போராட்டம்

## இலங்கை ஆசிரியர் சங்கம்

(கொழும்பு)

ஆசிரிய இடமாற்றம் மற்றும் சம்பள முரண்பாடுகள் தொடர்பான கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் பாரியளவில் தொழிற்சங்கப் போராட்டங்கள் மேற்கொள்ளப்படுமென இலங்கை ஆசிரியர் ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

ஆசிரிய இடமாற்றம் மற்றும் சம்பள முரண்பாடுகள் போன்ற விடயங்கள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என குறிப்பிட்டுள்ளது. தேசிய சம்பள ஆணைக்குழு தமது கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளத் தவறியுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளது.

ஆசிரிய மற்றும் அதிபர் சங்கங்களினால் விடுக்கப்பட்ட கோரிக்கையை தேசிய சம்பள ஆணைக்குழு நிராகரித்துள்ளதாகவும் இது தொடர்பில் கல்வி அமைச்சின் நிலைப்பாட்டை அறிந்து கொள்ள விரும்புவதாகவும் இலங்கை ஆசிரியர் ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி சுகயீன விடுமுறை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. கல்வி அமைச்சு உரிய முறையில் பதிலளிக்கத் தவறினால் பாரியளவில் போராட்டங்களை முன்னெடுக்க நேரிடும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## கஸ்தூரி வெண்டி

**Botanical Name-**
***Hibiscus abelmoschus linn***
**Family-Malvaceae**
**Eng- Musk mallow**
**Sinh- Kapukinnissa**

இது ஓராண்டு வாழக்கூடிய கிளைகள் விட்ட ஓரளவு உயரமான உரோம அமைப்புக்களைக் கொண்ட தண்டுகளைக் கொண்ட செடியினமாகும். தனியிலை, எதிரிலை அடுக்கும் கொண்டவை. இலைகள் 3-5 பிளவு பட்ட சோணைகளை கொண்ட இலைகளாக காணப்படும். இலைகளின் 2 பக்கமும் உரோம அமைப்பை கொண்டவை. இலைக்காம்பு இலைகளை விட நீண்டதாக காணப்படும். ஒழுங்கான இருபாலான பூக்கள் பிரகாசமான மஞ்சள் நிறமாகவும் நடுப்பகுதி ஊதா நிறமாகவும் காணப்படும். நீண்ட காய்கள் இரு பக்கமும் இருக்கும். காய் 6.3- 7.5 cm நீளமுடையதாக இருக்கும். சிறுநீரக வடிவ விதைகள் காணப்படும். ஓர் காயினுள் ஏராளமான விதைகளை காணலாம். புரட்டாதி மாதத்தில் பூக்களை அவதானிக்கலாம்.

**முக்கிய குறிப்பு:-**

இதன் விதைகளே தக்கோலம் என அழைக்கப்படுகின்றது. இது சித்த ஆயுள்வேத பெரும்பாலான மருந்துகளில் மூலிகை சரக்காக சேருகின்றது. கூடுதலான இதன் பரம்பல் உலர் வலயங்களில் (வெப்ப பிரதேசங்களில்) காணப்படுகிறது. இதனது காய், இலை, விதை அனைத்தும் மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகின்றது. விதைகள் மூலம் இதனை இன விருத்தி செய்யலாம்.

ஒரு விதையிலிருந்து ஏராளமான செடிகளை இனவிருத்தி செய்யலாம்.



**மருத்துவ குணங்கள்**

❖ இதனுடைய காய்களை நன்றாக கழுவி சுத்தம் செய்து வெண்டிக்காய் போல சாப்பிடலாம். இதனால் நரம்பு மண்டலம் பலப்படுத்தப்பட்டு உடலும் பலம் பெறும்.

❖ இதனுடைய விதைகளிலிருந்து தயாரிக்கப்படும் குடிநீர் அல்லது விதைகளை நிழலில் உலர்த்தி பொடித்து 5 g அளவுக்கு 100 ml வெந்நீர் விட்டு 15 நிமிடம் ஊறவைத்து வடித்து காலை, மாலை 5 நாட்கள் அருந்திவர நரம்பு மண்டலத்தைப் பலப்படுத்தும். இதனை 2 நாட்கள் இடைவெளி விட்டு மேலும் பயன்படுத்தலாம். அல்லது குரக்கன் மாவுடன் விதை பொடி, சிறிது சீனி சேர்த்து அடை தயாரித்து நெய்யில் வதக்கி சாப்பிட்டால் உடல் நன்கு ஆரோக்கியமாக இருப்பதுடன் வயிற்றில் ஏற்படும் நோய் போன்றவற்றையும் குறைக்கும்.

❖ இதை நாம் கோப்பி பொடி வீட்டில் தயாரிக்கும் போது 100 g கோப்பி பொடிக்கு அதன் விதை பொடி 20g சேர்த்து எடுக்கும் போது மத்திய நரம்பு மண்டலத்தை தூண்டி நரம்பு பாதிப்புக்களையும் தடுக்க வல்லது. மனநோயாளிக்கு இதனை வழங்கும் போது தூக்கத்தை உண்டாக்கி உடம்பு சோர்வடைவதனையும் குறைக்கும்.

❖ இதன் விதைகளை நன்றாக பொடித்து எதனோல் சிறிதளவு கலந்து விசஜந்துக்களின் கடிக்கும் பூசலாம்.

❖ இதனுடைய விதைகளை பசையாக அரைத்து எலுமிச்சம் பழச்சாறில் அரைத்து கரப்பன் நோயில் ஏற்படும் சொறிக்குப் பூசலாம்.

❖ இதனது இலைகளையும் வேரையும் குடிநீர் செய்து 30 -60 ml காலை, மாலை அருந்த பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை சாய்தல் நோய் நீக்கும்.

❖ தக்கோலம் எனப்படும் கஸ்தூரி வெண்டி விதையை பொடித்து 5 g அளவு காய்ச்சிய பசுவின் பால் 100 ml இல் கலந்து சிறிதளவு சீனியுடன் தொடர்ந்து 10 நாட்கள் சாப்பிட உடலிலுள்ள உஷ்ண தன்மையை நீக்கி உடலுக்கு குளிர்ச்சியைக் கொடுக்கும்.

❖ இதனது காய்களை வெண்டிக்காய் சமைப்பதுபோல சமைத்துண்ண குடல் புண் ஆறுவதுடன் குடலுக்கும் குளிர்ச்சியைக் கொடுக்கும்.

❖ அடிக்கடி காய்ச்சல் வந்து மாறிய பின் அதனை தொடர்ந்து வரும் உடல் பலவீனத்தை தீர்க்கக் கூடிய தன்மையினை கொண்டது.

❖ இதனது இலை, காய் என்பன இருதயத்தை பலப்படுத்தும் தன்மை கொண்டது.

❖ இதனை மரக்கறியாக சமைக்கும் போது பிஞ்சுகளையே சமைப்பது சிறந்தது.

❖ மெலிந்த பெண்கள் வெற்றிலை, பாக்குடன் சிறிதளவு தக்கோல விதைகளை சேர்த்துண்ண மெலிவு நீங்கி வன்மை பெறுவார்கள்.

❖ அடிக்கடி காரம் சாப்பிடும் போது இளகிய கழிச்சல் உள்ளவர்கள் தக்கோல விதைப் பொடி 1-2 கிராம் தேனில் காலை, மாலை உட்கொள்ளலாம்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று துறையின் கீழ் நீதித்துறை பணியக்கூடாது

## சட்டத்தரணிகள் கருத்து

(கொழும்பு)

நீதித்துறை சுயாதீனமாகவே இயங்கவேண்டும். அதன் செயற்பாடுகளில் நிறைவேற்றுத்துறை தலையிடும் வகையில் சட்டத்துறையும் நிறைவேற்றுத்துறையின் கீழ் அடிபணிந்தால் மக்களுக்கு நீதிமன்றங்களில் இருந்து எவ்விதமான நிவாரணமும் கிடைக்காது என்று சட்டத்தரணி லால் விஜயநாயக்க தெரிவித்துள்ளார்.

நிப்போன் விடுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து கூறுகையில், சட்டத்துறையை பாதுகாப்பதற்காக நாம் இவ்வளவு நாளாகவும் போராடிக்கொண்டிருந்தோம். எதிர்வரும் காலங்களில் இந்தப் போராட்டத்தை மாற்று வடிவத்தில் முன்னெடுக்க போகின்றோம்.

இந்த போராட்டத்தில் மக்களும் இணைந்துகொள்ள வேண்டும். நீதித்துறையானது நிறைவேற்றுத்துறையின் கீழ் அடிபணிந்து விட்டால் மக்களுக்கு எவ்விதமான நிவாரணமும் கிடைக்காது.

இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டால் நீதவான் நீதிமன்றத்தில் வழங்கப்படும் தீர்ப்பைக்கூட மாற்றி எழுதும் அளவிற்கு பிரதேச அரசியல்வாதிகள் தங்களுடைய அதிகாரங்களை கையில் எடுத்துக்கொள்வர். இவ்வாறான நிலைமை ஏற்பட்டால் அது நாட்டு மக்களுக்கே ஆபத்தாக மாறிவிடும்.

இதேவேளை, மாநாட்டில் கலந்து கொண்ட ஜனாதிபதி சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவிக்கையில், அரசியலமைப்பிற்கு எதிராகவே நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றப் பிரேரணையில் கைச்சாத்திட்டுள்ளனர். குற்றப் பிரேரணையில் கைச்சாத்திட்ட 117 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

தீர்ப்புகளை வழங்கிய நீதியரசர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. ரிசானாவுக்கு உலகத்தில் நீதி கிடைக்கவில்லை.

அதேபோல இலங்கையின் நான்காவது பிரஜையான ஷிராணி பண்டாரநாயக்கவுக்கும் நீதி கிடைக்கவில்லை. (அ-2)

# பிரதம நீதியரசரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குண்டு

## நீதியரசரை வரவேற்போம் என்கிறார் விதாரண

(கொழும்பு)

குற்றப் பிரேரணை அறிக்கை மீதான வாக்கெடுப்பிலிருந்து நாங்கள் வெளியேறிய போதிலும் புதிதாக நியமிக்கப்படும் நீதியரசரை நாம் வரவேற்போம் என்று லங்கா சமசமாஜக் கட்சியின் உறுப்பினரும் சிரேஷ்ட அமைச்சருமான திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், நிலையியற் கட்டளைகளை திருத்துதல் மற்றும் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்காக ஓய்வு பெற்ற நீதியரசர்களை நியமிக்க வேண்டும் என்று எம்மால் முன்வைக்கப்பட்ட யோசனைகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதற்கு மறுப்பு தெரிவித்ததை அடுத்தே நாம் குற்றப்பிரேரணை வாக்கெடுப்பிலிருந்து விலகியிருந்தோம்.

அரசியலமைப்பின் பிரகாரம் நீதியரசர் ஒருவரை நியமிப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கின்றது. அதன்பிரகாரம் நியமிக்கப்படும் புதிய நீதியரசரை நாம் வரவேற்போம் என்றார். (அ-2)

# சவுதியில் இலங்கை பெண்மீது தாக்குதல்

## கையில் 5 வெட்டுக்காயம்

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் இலங்கையைச் சேர்ந்த பணிப்பெண்ணொருவர் தாக்குதலுக்குள்ளாகி காயம்டைந்ததைத் தொடர்ந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு புளூமெண்டல் வீதியைச் சேர்ந்த 30 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு தாக்குதலுக்குள்ளாகியுள்ளார்.

தாக்குதலுக்குள்ளான குறித்த பெண் காயமடைந்த நிலையில் வீதியில் வீசப்பட்டுள்ளார். இது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்தே அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஒரு வருடத்திற்கு முன்னர் பணிப்பெண்ணாக சவுதி அரேபியாவுக்குச் சென்ற இப்பெண் அவரது முதலாளியினால் இரக்கமின்றி தாக்குதலுக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவரது இடது கையில் 5 வெட்டுக் காயங்களும் வலது கையில் எரிகாயங்களும் காணப்படுகின்றன. தனது தலையில் ஆடைகளைக் கழுவும் இரசாயன பதார்த்தம் போடப்பட்டதாகவும் தாக்குதலினால் தான் பாதிக்கப்பட்டதாகவும் குறித்த பெண் கூறியுள்ளார். (அ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2013.01 16

★ 1547-நான்காம் இவான் ரஷ்யாவின் சார் மன்னனாக முடிசூடினான்.

★ 1556-இரண்டாம் பிலிப்பு ஸ்பெயின் மன்னன் ஆனான்.

★ 1581-இங்கிலாந்து நாடாளுமன்றம் ரோமன் கத்தோலிக்க மதத்தை சட்டத்துக்கு எதிரான தாக்கியது.

★ 1707- ஸ்கொட்லாந்து இங்கிலாந்துடன் இணைந்து ஐக்கிய இராச்சியமாக உருவாவதற்கு ஏதுவாக அமைந்த சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியது.

★ 1761-பிரித்தானியர் பாண்டிச்சேரியை பிரான்சிடம் இருந்து கைப்பற்றினர்.

★ 1777-வெர்மொண்ட் நியூயோர்க்கில் இருந்து விடுதலையை அறிவித்தது.

★ 1795-பிரான்ஸ், நெதர்லாந்தின் யூட்ரேக்ட் என்ற இடத்தைக் கைப்பற்றியது.

★ 1864-டென்மார்க்கின் மன்னன் ஒன்பதாம் கிறிஸ்டியான் ஜேர்மனி மீது போரைத் தொடுத்தான்.

★ 1909-ஏர்ணெஸ்ட் ஷாக்கிளெட்டனின் குழுவினர் தென் முனையைக் கண்டுபிடித்தனர்.

★ 1945-ஹிட்லர் தனது சுரங்க மறைவிடத்திற்கு தப்பிச் சென்றார்.

★ 1945-எகிப்து ஜனாதிபதி கமால் அப்துல் நாசர் பாலஸ்தீனத்தைக் கைப்பற்றுவதாக சூளுரைத்தார்.

★ 1979-ஈரான் மன்னர் முகமது ரேசா பாஹ்லாவி குடும்பத்துடன் நாட்டை விட்டு வெளியேறி எகிப்தில் குடியேறினார்.

★ 1991-ஐக்கிய அமெரிக்கா ஈராக் மீது போரை அறிவித்தது.

★ 1992-எல் சல்வடோர் அதிகாரிகள் தீவிரவாதத் தலைவர்களுடன் மெக்சிக்கோ நகரில் அமைதி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

★ 2001-கொங்கோ தலைவர் லாரன்ட் கபிலா தனது மெய்க்காவலரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

★ 2006-எலென் ஜோன்சன் சேர்லீஃப்ப் லைபீரியாவின் ஜனாதிபதியாவார். இவரே ஆபிரிக்க நாடொன்றின் முதலாவது பெண் அரசுத் தலைவர் ஆவார்.

★ 2003-கொலம்பியா விண்ணோடம் தனது கடைசிப் பயணத்தை ஆரம்பித்தது. இது 7 விண்வெளி வீரர்களுடன் 16 நாட்களின் பின்னர் பூமி திரும்புகையில் வெடித்துச் சிதறியது.

★ 2008- 2002 போர் நிறுத்த உடன்படிக்கையில் இருந்து இலங்கை அரசு அதிகாரபூர்வமாக விலகியது.

★ 2008-இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு இலங்கையில் தனது பணிகள் அனைத்தையும் நிறுத்தியது.

### பிறப்புக்கள்

★ 1929-எஸ்.ஜே.தம்பையா, மானிடவியல் ஆய்வாளர், பல்சான் பரிசு பெற்றவர்

★ 1932-டயான ஃபொஸி, கொரில்லாவைப் பற்றி சிறந்த ஆய்வுகள் நடத்திய அமெரிக்கப் பெண் (இ.1985)

### இறப்புக்கள்

★ 1711-யோசப் வாஸ் அடிகள், கோவாவில் பிறந்து இலங்கை கத்தோலிக்கருக்கு சேவை செய்த குரு (பி.1651)

★ 1967-ரொபர்ட் ஜெ.வான் டி கிராப், அமெரிக்க இயற்பியலாளர் (பி.1901)

### யோசப் வாஸ் அடிகள்



முத்திப்பேறு பெற்ற யோசப் வாஸ் இந்தியாவின் கோவாவில் பிறந்து இலங்கையின் கத்தோலிக்க நம்பிக்கை ஒல்லாந்தரால் அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டிருந்த வேளையில் இலங்கை கத்தோலிக்கருக்கு சேவை ஆற்றுவதற்கு வந்த கத்தோலிக்க குருவானவர் ஆவார். இவர் ஈழத்தில் யோசே வாஸ் முனீந்திரர் என அழைக்கப்பட்டார்.

#### யாழ்ப்பாணம் வருகை

கி.பி. 1685 ஆம் ஆண்டில் கோவாவின் Oratary of St. Philip Neri இல் இணைந்த யோசப் வாஸ் அடிகளார் 1687 ஆம் ஆண்டு ஏப்ரலில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

அப்போது இலங்கையில் ஆட்சியில் இருந்து ஒல்லாந்தர் கால்வினிசத்தைப் பின்பற்றியவர்கள். எனவே கத்தோலிக்கரையும் குருமாரையும் கொலை செய்தனர். பாடசாலைகளைத் தரைமட்டமாக்கினர். இதனால் பிச்சைக்கார வேடத்தில் இலங்கை வந்த அடிகளாருக்கு சில்லாலையூர் மக்கள் புகலிடம் வழங்கினர்.

அவர் அங்கேயே தங்கி சில்லாலையிலும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் கத்தோலிக்க மக்களுக்கு தனது சேவையை வழங்கினார். பின்னர் அவர் மாறுவேடத்தில் கால்நடையில் 24 ஆண்டுகளாக வன்னி, புத்தளம், மன்னார், பூநகரி ஆகிய இடங்களுக்கும் சென்று மதப்பிரசாரம் செய்தார்.

#### கண்டிக்கு விஜயம்

1692 இல் கண்டிக்குச் சென்ற வாஸ் அடிகளார் அங்கு றோமன் கத்தோலிக்க மதத்தை மீள ஸ்தாபிக்கப் பெருமுயற்சி செய்தார். இதனால் அவர் அங்கு இரண்டாண்டுகள் சிறையிலும் இருக்க நேரிட்டது. கண்டியிலிருந்தே தனது சேவையைத் தொடர்ந்த வாஸ் அடிகள் 1696 இல் இலங்கையின் Vicar- General பதவியைப் பெற்றார்.

1710 ஆம் ஆண்டில் மட்டக்களப்பு தாண்டவன் வெளியரி வியாகுலமாதா கோயில் வள வில் சிறு ஓலைக்கோயில் கட்டிப் பலி ஒப்புக் கொடுக்கும் போது காட்டிக் கொடுக்கப்பட்டு மரத்தில் கட்டி அடிக்கப்பட்டார். 1711 ஆம் ஆண்டில் கண்டியில் காலமானார்.

#### அருளாளர் பட்டம்

தற்போது இலங்கையின் அப்போஸ்தலர் என அழைக்கப்படும் யோசப் வாஸ் அடிகளார் 1995 ஆம் ஆண்டு ஜனவரி 20 இல் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் கொழும்பு வந்திருந்த போது ஜனவரி 21 இல் காலிமுகத் திடலில் இடம்பெற்ற திருச்சடங்கின் போது யோசப் வாஸ் அருளாளர் பட்டம் பெற்றவராக அறிவிக்கப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்பு ஜனவரி

வடக்கில் தமிழ்மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள இராணுவ நிர்வாகமானது கல்வித்துறையில் தலையிடும் நடவடிக்கைகளுடன் 2013 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் ஆரம்பமாகியது.

ஊடக சுதந்திரம் என்பது ஏனைய சுதந்திரங்களைவிட கட்டாயமானது எனக் கூறப்படுகிறது. எனினும் இலங்கையின் ஜனநாயகத்தில் ஜனவரி மாதமானது ஊடக சுதந்திரத்தின் கறுப்பு ஜனவரியாக மாறிய மாதமாகும். ஜனவரி முதலாம் திகதி அதாவது 5 வருடங்களுக்கு முன்னர், அன்றைய தினம் காலையில் நாடாளுமன்ற உறுப்பினரான தியாகராஜா மகேஸ்வரன் கொழும்பு கொட்டாஞ்சேனையில உள்ள சிவன் ஆலயத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. அதனை அடுத்து மூன்று வருடங்களின் பின்னர், கொழும்பு ராஜகிரியவில் உள்ள லங்கா ஈ நியூஸ் இணைய நிறுவனம் தீ வைத்து அழிக்கப்பட்ட சம்பவத்துடன் ஜனவரி 31 ஆம் திகதி முடிவு பெறுகிறது.

இதனிடையே ஜனவரி 6 ஆம் திகதி சிரச ஊடக வலையமைப்பு மீது குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. ஜனவரி 8 ஆம் திகதி சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்ரம துங்க கொலை செய்யப்பட்டார். ஜனவரி 24 ஆம் திகதி ஊடகவியலாளர் பிரகீத் ஹெக்நேலியக்கொட கடத்தப்பட்டார். ஜனவரி 25 ஆம் திகதி ஊடக வியலாளர் சுகீர்தராஜன் கொலை செய்யப்பட்டார். இந்த சம்பவங்களுடன் ஒன்றுடன் ஒன்று பிணைந்ததான பதிவுகள் ஜனவரி மாதத்தில் காணப்படுகிறது.

அதேவேளை 1991 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதி கொழும்பு கோட்டையில் உள்ள மத்திய வங்கியில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட 91 பொதுமக்களின் நினைவு தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. மகேஷ்வரன்கொலை முயற்சியில் 14 பேர் காயமடைந்ததுடன், மத்திய வங்கி குண்டு வெடிப்பில் ஆயிரத்து 400 பேர்காயமடைந்தனர். 2006 ஆம் ஆண்டு ஜனவரி 02 ஆம் திகதி திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர். இது ஜனவரி மாதத்தின் மிக முக்கியமான சம்பவங்களில் ஒன்று. போர் நடைபெற்ற காலத்தில் நாம் அறியாத எத்தனையோ பொதுமக்கள் , பாதுகாப்புப் படையினராலும், விடுதலைப்புலிகள் தலைமையிலான ஆயுதக்குழுக்களின் தாக்குதல்கள் காரணமாகவும் கொலையுண்டிருப்பார்கள் என்பது சந்தேகமில்லை.

கடந்த வருடம் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களின் கொடூரத்தன்மை காரணமாக கறுப்பு ஜனவரி என்ற மாதம் அடையாளப்படுத்தப்படுகிறது. இந்த கோழைத்தனமான தாக்குதல்களை கண்டித்து, தாக்குதல் தொடர்பாக நீதியை நிலைநாட்டுமாறு கோரி, இலங்கையின் ஊடக அமைப்புகள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்திற்கு அரசாங்கம் அச்சமடைந்தது. தம்மால் மேற்கொள்ளப்பட்ட குற்றங்களின் ஆவிகளுக்கு அஞ்சுவது வழமையான ஒன்றாகும். படைபலம் மற்றும் அதனடிப்படையில் தங்கியிருக்கும் அரசாங்கம் ஒன்றின் இந்த அச்சமானது அரச பயங்கரவாதமாக உருவெடுக்கும். நீதிமன்ற உத்தரவுக்கு அமைய முற்றாக ஆர்ப்பாட்டங்களை தடுத்து நிறுத்த முடியாத சந்தர்ப்பங்களில் கற்கள், பொல்லுகள் கொண்ட குண்டர்களைக் கொண்டு அரசாங்கம் அவற்றை அடக்கியது. இழப்பீடுகளுக்காகவும் கூலிகளுக்காகவும் எழுதுபவர்களைக் கொண்டும் இந்த ஆர்ப்பாட்டங்களை அரசாங்கம் விமர்சனம் செய்தது.

2012 ஆம் ஆண்டின் ஆரம்பமாதத்தில் இந்த வன்செயல்கள் நாட்டின் தலைவிதியாக நாடு முழுவதும் கருமேகங்களாக அதிகரித்து வந்தன. தற்போது 2013 ஆம் ஆண்டின் ஆரம்ப மாதத்தில் இந்த கருமேகங்கள் இலங்கையில் சட்டங்கள் அற்ற, தான்தோன்றித்தனமான பாலைவனத்தை நோக்கி பயணித்து வருகின்றன.

வடக்கில் தமிழ் மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள இராணுவ நிர்வாகமானது கல்வித்துறையில் தலையிடும் நடவடிக்கைளுடன் 2013 ஆம் ஆண்டின் ஜனவரிமாதம் ஆரம்பமாகியது. தற்போது யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்தில் இராணுவ அதிகாரிகள் உத்தியோகபூர்வமாக தலையிட்டு வருகின்றனர். இதனைத் தவிர வன்னியில் சிங்கள மொழி கற்பது கட்டாயமாக்கப்பட்டு, இரணுவ சீருடை தரித்த இராணுவத்தனர் கற்பித்தல் நட்வடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கல்வியும் , போர்விதிமுறைகளும் முற்றிலும் ஒன்றுடன் ஒன்று வேறுபட்டவையாகும்.


இலங்கையில் தற்போது மேற் கொள்ளப்படும் ஜனநாயக உரிமை களை மீறும் அளவீடுகளாக இருப்பது வடக்கு- கிழக்கு மாகாணங்களாகும். இதில் வடக்கு மிகவும் முக்கியமானது. அங்கு நேற்று நடந்தது இன்று தெற்கில் நடக்கும். அதேவேளை இன்று நடப்பது நாளை தெற்கில் நடக்கும். அப்போது மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தை விமர்சிப்பவர்கள் வீடுகளுக்கு பூதங்கள் வந்து கழிவு எண்ணெய் ஊற்றிச் செல்லும். யாழ்ப்பாணத்தில் உரிமைகளைக் கோரி மக்கள் நடத்தும் ஆர்ப்பாட்டங்களுக்கு எதிரான அரச அனுசரணையில் பயங்கரவாதம் பயன்படுத்தப்படுகிறது. யாழ் மற்றும் முல்லைத்தீவு நீதிபதிகளுக்கு எதிராக பேரணி நடத்துகின்றனர். மன்னார் நீதிபதிக்கு எதிராக ஹூ சத்தமிடுகின்றனர். தற்போது தெற்கில், மகிந்தராஜ பக்ச அரசை விமர்சிக்கும் சட்டத்தரணி களுக்கு மரண பயத்தை ஏற்படுத்தி, பூஸுதங் கள் வந்து துப்பாக்கிச் சூடுகளை நடத்திவிட்டு மாயமாகி விடுகின்றனர். எப்படியான காரியங்களை செய்திருந்தாலும்- விமர்சிக்கும் அரசியல் வாதிகள்கூட பரலோகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். நீதிபதிகளுக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்படும் அதேவேளை அவற்றை உண்மையான அச்சுறுத்தல்கள் என காண்பிப்பதற்காக துப்பாக்கிகள் மூலம் தலைகளை உடைக்கின்றனர். இவற்றை வடக்கில் போன்று தெற்கிலும் அரச அதிகாரத்தின் ஆவிகளே செய்கின்றன. இது ஆவிகளின் செயற்பாடுகள் என்பதுபோல, சம்பவங்கள் தொடர்பாக எவருமே கைது செய்யப்படுவதில்லை. கைது செய்யப்பட்டாலும் யாருக்கும் தெரியாமல் நழுவிச் சென்று விடுகின்றனர்.

இந்த சகல கருமேகங்களும் இறங்கி வரும் சந்தர்ப்பத்தில் 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதமானது இலங்கையில் நீதித்துறையின் சுதந்திரத்தின் மீது அழுத்தங்களைக் கொடுத்து ஆரம்பமாகிறது. இலங்கையின் ஜனநாயகக் கட்டமைப்பில் , ஏதோ ஒரு நம்பிக்கை மற்றும் சுதந்திரத்தை அனுபவித்து வந்த நீதித்துறை, அரசினைச் சார்ந்த, அரசை விமர்சிக்காத ஒரு துறையாக்கும் நடவடிக்கைகள் 2013 ஆம் ஆண்டில் முழுமைப்படுத்தப்படவுள்ளது. உள்நாட்டு வெளிநாட்டு அரசியல் விமர்சகர்கள் மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டுவது போல, இது அரச சர்வாதிகாரத்தின் உத்தியோகபூர்வ ஆரம்பமாகும்.

மக்களின் எதிர்ப்புகளுக்கு செவிசாய்க்காமை, தொழிற்சங்கப் போராட்டங்களை அடக்குதல், பொருளாதார சுமைகளை மக்கள் மீது ஏற்றி, சுகபோகங்களை ஆட்சியதிகார குழுக்களுக்கு எழுதி எடுத்துக்கொள்ளவது , எதிர்க்கட்சித் தலைவரை தம்வசப்படுத்திக் கொள்வது, அரச நிர்வாகத்தை மேலும் உறவினர் அமைச்சுகளின் கைக்குள் வைத்துக் கொள்வது, சிறுபான்மை இனங்களுக்கு எதிராக அடிப்படைவாத சக்திகள் செயற்படுவது, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை குப்பைக் கூடையில் எறிந்து, ஊடக நிர்வாகத்தை சிதறச் செய்தல், தேர்தலில் முறைகேடுகளைச் செய்தல், நீதிமன்றத்தைப் புறக்கணித்து செயற்படுதல், தமக்கு சார்பான வரை பிரதம நீதியரசராக நியமித்தல், காவற்றுறையை முற்றாக தமது அரசியல் கைப்பாவையாக மாற்றுதல், வடக்கு-கிழக்கில் இராணுவமயப்படுத்தலை அதிகரித்தல், தமிழ் மக்களை அடக்கி ஆளுதல், சர்வதேச மனித உரிமை இணக்கப்பாடுகளை மீறி செயற்படுகின்றமை போன்றவை, 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கும்- அச்சத்தை ஏற்படுத்தும் ஆரம்பமாகும்.

பிரதமநீதியரசர் பதவியில் இருந்து விரட்டியடிக்கப்படும் அதேவேளை அரசியல் வாதிகள் நீதிமன்றத்திற்கு அவமதிப்பை ஏற்படுத்தி நீதிமன்றத்தின் கௌரவத்தை தரம் தாழ்த்துவதன் மூலம் இந்த ஜனவரி மாதத்தில் சட்டம் அவச்சட்டமாக மாறிப்போகும். நீதிமன்றத் தீர்ப்புகளை உதாசீனப்படுத்துவது தொடர்பாக அரசாங்கம் செய்துள்ள சாதனை இந்த ஜனவரியில் மகுடம் சூடும். உயர்நீதி மன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதி மன்றங்களின் தீர்ப்புகளை நாடாளு மன்றத்தின் பெரும்பான்மை பலத்தில் கல்லறைக்கு கொண்டு செல்வதன் மூலம் இந்த சாதனை நிகழ்த்தப்படும். 2013 ஆம் ஆண்டு ஜனவரியை வேறு வார்த்தைகளால் கூறுவதானால், பெரும்பான்மை பலமானது இலங்கையின் சர்வாதிகாரத்தின் சட்டமாக மாற்றும் மாதமாக மாறியுள்ளது. ஏற்கனவே நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை பலத்தின் மூலம் இலங்கை அரச நிர்வாகத்தை ராஜபக்ச குடும்பத்தினரின் கைகளுக்கு கொண்டு செல்லும் ஆபத்தான நடவடிக்கையான திவிநெகும சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டுவிட்டது.

நீதித்துறையின் சுதந்திரத்திற்கு எதிராகவும் இந்த பெரும்பான்மை பலமே பயன்படுத்தப்பட்டது. 10 ஆயிரம் சட்டத்தரணிகள் சட்டவாதிகள் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், 300 நீதிபதிகள் அங்கம் வகிக்கும் நீதிபதிகள் சங்கம், சமூக அமைப்புகள் என அனைத்து தரப்பினரின் எதிர்ப்பையும் மீறி, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. சர்வதேச சட்டத்தரணிகள் சங்கமும் தமது எதிர்ப்பை வெளியிட்டிருந்தது.



-சுனந்த தேசப்ரிய-

பெரும்பான்மை பலம், அனைத்தையும் நியாயப்படுத்துமாயின் 1975 ஆம் ஆண்டு பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க, நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்தை நீடித்தது, ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவின் 1978 ஆம் ஆண்டு சர்வாதிகாரி அரசியல் அமைப்புச்சட்டம், 1982ஆம் ஆண்டு மக்களின் நிலைப்பாடுகளை கொள்ளையிட்டமை, ஜனாதிபதி பிரேமதாச, லலித்- காமினி கொண்டு வந்த நம்பிக்கையில்லா திர்மானத்தை கீழடிப்புச்செய்தமை என்பனவும் நியாயமானதே. இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் போது, துதிபாடல் கோஷங்கள் எழுப்பப்பட்ட போதிலும் வரலாறு அந்த நடவடிக்கைகள் தொடர்பில் சரியான தீர்ப்பை வழங்கியுள்ளது.

இன்னும் 10 வருடங்கள் மகிந்த ராஜபக்ச நிர்வாகம் இருந்தாலும், நீதிமன்ற சுதந்திரத்தை இரும்புப் பாதணிகளால் மிதித்து, மனித உரிமை, ஜனநாயகம் ஆகியவற்றை உதாசீனப்படுத்தி நகர்வுகளை முன்னெடுத்தபோதும் இவை தொடர்பாக வரலாறு, சரியான தீர்ப்புகளை வழங்கும் என்பது உறுதியானது. இந்த சந்தர்ப்பத்தில் நாம் எழுப்பும் அனைத்து எதிர்ப்பு குரல்களும், சிந்தும் கண்ணீர் அனைத்தும் அந்த வரலாற்றில் பதிவு செய்யப்படும் . அந்த வரலாறு ஜனநாயகத்திற்குரியது. மனித உரிமைகளுக்குரியது. இது தான்தோன்றித்தனமான அல்லது சர்வாதிகாரத்திற்குரியதல்ல. அந்த வரலாறு நம் பக்கம் இருக்கும். கைவிடாது செய்யும் போரட்டத்தின் தேவை என்பது, இந்த வரலாற்றின் நிபந்தனையாகும்.

-சுனந்த தேசப்ரிய-
குளோபல் தமிழ் செய்தி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

341

## அம்புலிமாமா கதைகள்

# அறியாது செய்த அறம்



முன்னொரு காலத்தில் காசிநாதன் என்ற ஒரு புண்ணியவான் இருந்தார். அவருக்கு பிறரிடம் இரக்கமும் ஏழைகளை ஆதரிக்கும் குணமும் கூடியிருந்தன. பிறருக்குக் கொடுப்பதைத் தவிர பிறரிடமிருந்து எதையும் பெற்று அறியார். ஆனால் தான் இப்படிச் செய்வதை அவரே அறியாமலிருந்தார். அளவு கடந்த நன்மைகளை உலகிலுள்ளோர்க்குச் செய்து வந்தார். பலனை எதிர்பார்க்காமல் சூரிய, சந்திரர்கள் செய்வது போலவும் மணம் வீசும் மலர்களைப் போலவும் அவர் பிறருக்குத் தொண்டு செய்து கொண்டு தன் வாழ்க்கையை நடத்தி வந்தார். இதனால் எல்லோருக்கும் அவரிடம் மரியாதையும் பக்தியுடன் உண்டாயின.

இத்தகைய பெருந் தகையைக் கண்டு வானோர் மிக ஆச்சரியப்பட்டார்கள். மானிடனாக இருக்கும் காசிநாதனை அவர் இவ்வாறு புண்ணியங்களைச் செய்யும் நோக்கத்தை அறிய விரும்பி சில தேவ தூதர்களை அனுப்பி அவரை வானுலகிற்கு அழைத்துச் சென்றனர். அவ்விடம் அவருக்குத் தக்க மரியாதை செய்து புண்ணியவானே தாங்கள் பூவுலகில் செய்த அரும் அறங்களைக் கண்டு மகிழ்ந்தோம். அதற்கு ஈடாக தங்கள் விருப்பம்போல் பரிசளிக்க ஆவல் கொண்டுள்ளோம். தங்கள் தேவையைச் சொல்லுங்கள் என்றார்கள்.

தேவர்களே எனக்கு எதுவும் தேவையில்லை என்றார் அப்புண்ணியவான். சுவாமி தாங்கள் அவ்வாறு மறுக்கக் கூடாது. கையால் தொட்ட உடன் தீராத நோய்கள் கூட தீர்ந்து விடும்படி வரம் கொடுக் கிறோம் என்றனர் தேவர்கள்.



வேண்டாம்! வேண்டாம்! அம்மாதிரியான அற்புதங்கள் செய்ய எல்லாம்வல்ல இறைவன் ஒருவனே தகுந்தவன். மானிடர்களுக்குத் தகாது என்று காசிநாதர் மறுத்துவிட்டார்.

தேவர்கள் போகட்டும் தங்களுக்கு உலகத்திலுள்ளவர்களை மயக்கும் படியான அழகிய வடிவத்தைக் கொடுக்கிறோம். அதைப்பார்த்து உலகத்தினர் தங்களை நாடுவார்கள். அவ்வயம் தாங்கள் அவர்களுக்கு நல்ல ஒழுக்கங்களைப் போதிக்கலாம் என்றனர்.

காசிநாதன் ஐயோ வேண்டவே வேண்டாம். அழகுடன் இருக்கும் என்னைப்பார்த்து உலகிலுள்ள பொதுமக்கள் இறைவனை மறந்து விடுவார்கள். கடவுளைப்பற்றி பிரசாரம் செய்ய எனக்கென்ன உரிமை இருக்கிறது? கடவுளுக்குத் தன்னைப்பற்றிப் பிரசாரம் செய்து கொள்வது அவரின் இஷ்டம். அது அவரைச் சார்ந்தது என்றார்.

ஆனால் பொல்லாத மக்களை நல்வழியில் திருத்த சில வழிகளைத் தருகிறோம் பெற்றுக் கொள்ளும் என்று தேவர்கள் வற்புறுத்தினர். அதற்கு அவர் தேவர்களே தாங்கள் செய்ய வேண்டிய தொழிலை நான் ஏற்றுக்கொள்வது பாவம் என்று பதில் சொன்னார்.

புண்ணியவானே நாங்கள் கொடுக்க விரும்பிய தெல்லா வற்றையும் நிராகரிக்கின்றீர்கள். தாங்களே ஏதாவது விரும்பினால் அதைக்கொடுக்க ஆவலுள்ளவர்களாயிருக்கிறோம். தயவுசெய்து சொல்லுங்கள் என்று கெஞ்சினர் விண்ணோர்.

வானோர்களே இறைவனுடைய அருளைத்தவிர வேறொன்றிலும் எனக்கு விருப்பம் கிடையாது. என்னை மன்னிக்கவும் என்று கூறினார் அம்மகான். ஆனால் எங்களுக்குத் தோன்றிய வரம் ஒன்றை நாங்களே உங்களுக்குக் கொடுக்கிறோம். மறுக்காமல் அதை ஏற்றுக்கொள்ளும் என்று தேவர்கள் வற்புறுத்தவே அம்மகானும் அப்படியானால் நான் அறியாமலே உலகிற்கு நன்மைகளைச் செய்து கொண்டு என் வாழ்நாட்களைக் கழிக்க அருள் செய்யுங்கள். அது மட்டும் எனக்குப்போதும் என்றார் புன்னகையுடன்.

இதைக்கேட்ட தேவர்கள் மனதில் சஞ்சலமடைந்தனர். இது எப்படி ஆகும்? தான் செய்யும் காரியங்களைப் பற்றித்தான் எப்படி அறியாமல் இருக்கமுடியும்? பின்பு எல்லோரும் கலந்தாலோசித்து காசிநாதன் எங்கிருந்தாலும் சென்றாலும் அவருடைய நிழல் விழுந்த இடத்தில் ஒரு அதிசய மகத்துவம் உண்டாக வேண்டும். அவருடைய நிழல்பட்டவர்களுக்கும் தீராத நோய் இருப்பினும் அது தீரவேண்டும். அவர்களின் மனக்கவலைகள் முற்றிலும் மாயமாக வேண்டும்.

அவர்களுக்குச் செல்வம் செழிக்கவேண்டும் என்று வரமளித்து ஆசி கூறி அவரை மிகவும் மரியாதைகளுடன் பூவுலகிற்கு அனுப்பினார்கள்.

காசிநீதன் பூலோகத்தில் முன்போலவே பல தருமங்களைச் செய்து கொண்டு வந்தார். உலகில் அவர் பல விடங்கள் திரிந்து வந்தார். எங்கு சென்றபோதிலும் அவருடைய நிழல்பட்ட பாலைவனங்கள் பூஞ்சோலைகளாகவும் பட்டுப்போன மரங்கள் தளிர்விட்டு வளரவும் வற்றிய ஆறுகள் நீர்நிறைந்து ஓடவும் மெலிந்த குழந்தைகள் திடகாத்திரத்துடனும் மாறின. உலகிலுள்ளவர்கள் அவரை நாடி பிணிகளைப்போக்கிக் கொண்டனர்.



ஜனங்கள் அதிக பக்தியுடன் அவரை பின் சென்றும் அவர் அறியாமல் அவரின் நிழலில் சென்று அவர்களின் விருப்பங்களை அடைந்து வந்தார்கள்.

இவ்வளவு புண்ணியங்களைத்தான் செய்வது கொஞ்சமும் தெரியாமல் காசிநாதன் தன் வாழ்க்கையை நடத்தி வந்தார். உலகிலுள்ளவர்களும் அப்புண்ணியவானை அடைந்து நற்கதி அடைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் மீண்டும் குடும்பப்பதிவு; நீதிமன்றை நாடுகிறது கூட்டமைப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் இராணுவத்தின ரால் மீண்டும் மேற்கொள்ளப்படும் குடும்ப பதிவு மற்றும் புகைப்படம் எடுப்பதற்கு எதி ராக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நீதிமன் றத்தை நாடவுள்ளதாக கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்திலுள்ள சில கிரா மங்களில் மீண்டும் இராணுவத்தினரால் குடும்பப் பதிவுகள் மேற்கொள்ளப்படுவ து டன் இதற்காக புகைப்படம் எடுப்பது தொடர் பிலும் அக்கிராம மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

இந்நிலையிலேயே இவ்வாறு மேற்கொள் ளப்படும் குடும்பப்பதிவுகள் மற்றும் புகைப் படம் எடுப்பதற்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நீதிமன்றத்தை உடனடியாக நாடவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி விக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் கட்டுக்காரன் குடியிருப்பு, பருத்திப்பண்ணை, கீலியைக் குடியிருப்பு, பேசாலை ஆகிய கிராமங்களில் தற்போது இராணுவத்தினர் குடும்பப் பதிவு கள் மேற்கொண்டுவருகின்றனர். இக்கிரா மங்களுக்குச் செல்லும் இராணுவத்தினர் குடும்ப விபரங்களை திரட்டுவதுடன் அம்மக் களின் வீடுகளை தனியாகவும் குடும்ப உறுப் பினர்களை குழுவாகவும் புகைப்படமும் எடுக்கின்றனர்.

எதற்காக இப்புகைப்படம் எடுக்கப்படு கின்றதெனத் தெரியாத நிலையில் அம் மக்கள் அச்சம் காரணமாக எனது கவன த்திற்கு கொண்டுவந்துள்ளனர்.

ஏற்கனவே இராணுவத்தினரால் மேற் கொள்ளப்பட்ட குடும்ப பதிவுகளுக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தது. இதன் போது சட்டமா அதிபரின் திணைக்களத்தால் இவ் இராணுவப் பதிவுகள் உடன் நிறுத்தப் பட்டு இனி இவ்வாறான பதிவுகள் மேற் கொள்ளப்படமாட்டாதென தெரிவிக்கப்பட்ட நிலையில் இவ்வழக்கு மீளப் பெறப்பட்டது என்றார். (அ-2)

# ஜனாதிபதியின் நியமனம் குறித்து நீதிமன்றில் வழக்கு தொடர முடியாது

## பிரதி சபாநாயகர் தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய பிரதம நீதியரசரை நியமிக்கும் ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷவின் தீர்மானத்திற்கு எவராலும் சவால் விடுக்க முடியாது என பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித் துள்ளார்.

ஜனாதிபதியின் நியமனம் குறித்து நீதி மன்றில் வழக்குத் தொடர முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

1996 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றின் நீதியரசராக ஷிராணி பண்டாரநாயக்கவை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க நியமித்தார்.

இந்த நியமனத்திற்கு சில தரப்பினர் எதி ர்ப்பை வெளியிட்ட போதிலும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் உத்தரவுகளுக்கு எதிராக சவால் விடுக்க முடியாது.

புதிய பிரதம நீதியரசரை ஏற்றுக் கொள் வதா இல்லையா என்பதனை நீதவான்களும் சட்டத்தரணிகளுமே தீர்மானிக்க வேண்டும்.

எவ்வாறெனினும் ஷிராணி பண்டார நாய க்க பிரதம நீதியரசர் பதவியிலிருந்து ஏற் கனவே விலக்கப்பட்டுள்ளதாகவும் தொடர் ந்தும் அவரால் பிரதம நீதியரசராக கடமை யாற்ற முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு சட்டம் பற்றிய போதிய தெளிவு இருக்கும் எனவும் இராணுவத்தினரை அழைத்து பலவந்தமாக அவரை வெளியேற்ற வேண்டிய அவசியம் இருக்காது என கருதுவதாகவும் அவர் தெரி வித்துள்ளார். (அ-2)



பதவி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க பிரதம நீதியரசருக்கான உத்தியோகபூர்வ வாச ஸ்தளத்திலிருந்து நேற்றைய தினம் வெளியேறியதை படத்தில் காண லாம்

# மழை வெள்ளத்தால்

# 5 ஆயிரம் ஏக்கருக்கு அதிகமான நெற்செய்கை கடும் பாதிப்பு

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால்5 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நெற்செய்கை பாதிப்படைந்துள்ளது.

வவுனியா மாவட்டத்தில் கடந்த வருட இறுதி யிலும் இவ்வருட ஆரம்பத்திலும் ஏற்பட்ட வெள்ளத்தால் 8 கமநல சேவைகள் பிரிவுக ளில் 5 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நெற் செய்கை பாதிப்படைந்துள்ளது. அத்துடன் மேட்டுநிலப் பயிர்ச்செய்கைகளும் பாரியள வில் சேதமடைந்துள்ளதாக வவுனியா மாவ ட்ட விவ்சாய சம்மேளத்தின் செயலாளர் தெரி வித்தார்.

நெற்செய்கை நிலங்கள் பகுதியளவிலும் மொத்தமாகவும் பாதிப்படைந்துள்ளமையால் விவசாயிகள் பெரும் இழப்புக்களை எதிர் நோக்கியுள்ளதாகவும் அவர் கூறினார். எனவே விவசாயிகளின் எதிர்கால தொழில் முயற்சிக்கு அரசாங்கத்தால் முழுமையான நிவாரணங்கள் வவுனியா மாவட்ட விவசாய சம்மேளனத்தினூடாக எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார். (அ-9-250)

# சவுதிக்கு எதிராக செயற்பட இலங்கைக்கு அழைப்பு

ரிஸானா நபீக்குக்கு மரண தண்டனை நிறைவேற்றிய சவுதி அரேபியாவுக்கு எதிராக மனித உரிமைகள் சபையில் யோசனை முன்வைக்கப்படவேண்டும் என்று கோரி க்கை விடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேசத்தின் இந்த கோரிக்கைக்கு இலங் கையும் தமது ஆதரவை வெளிப்படுத்த வேண் டும் என்று ஏசியன் ரிபியுன் இணையத்தளம் கோரியுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி 25 முதல் மார்ச் 22 வரை மனித உரிமைகள் சபையின் 22 ஆவது அமர்வுகள் இடம்பெறவுள்ளன.

இதன்போது சவுதி அரேபியாவின் மனித உரிமைகள் மீறலுக்கு எதிராக சர்வதேசம் தீவிரமாக செயற்பட வேண்டும் என்றும் ஏசி யன் ரிபியூன் கோரியுள்ளது. (அ-2)

# உரிமை கோரப்படாத பொருட்கள் ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றினால் பறிமுதல் செய்யப்பட்டு உரிமை கோரப்படாத சான்றுப் பொருட்கள் எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

பொருட்கள் கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவாக பணத்தினை மட்டும் கொடு க்க வேண்டும்.காசோலை ஏற்றுக்கொள்ளப்ப டமாட்டாது என யாழ்ப்பாணம் நீதவான் நீதி மன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (அ-2)

# மொஹான் பீரிஸ் நியமனத்தை எதிர்க்கிறேன் -அமைச்சர் வாசு

முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ்பிரதம நீதியரசர் பதவிக்கு தகுதியற்றவர். அவரின் கடந்தகால நடவடிக்கைகள் பிழை யானவை. எனவே அவரை நியமிப்பதைக் கடுமையாக எதிர்க்கின்றேன் என்று அரசின் பங்காளிக் கட்சியான இடதுசாரி முன்னணி யின் தலைவரும் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத் தீர்மானத்தை எவராலும் மீறமுடியாது.எனவே புதிய பிரதம நீதியரசர் நியமிக்கப்பட்டவுடன் சம்பிரதாயபூர்வமாக அழைத்துச் சென்று அப்பதவிக்கான ஆச னத்தில் அமரவைப்போம் என அமைச்சர் கூறினார்.இது தொடர்பாக அமைச்சர் வாசு தேவ நாணயக்கார மேலும் கூறுகையில்,

பாராளுமன்றமே இறையாண்மை கொண் டது.அவ்விடத்தில் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை பதவி விலக்குவதற் கான பிரேரணை மூன்றிலிரண்டு பெரும்பா ன்மையால் நிறைவேற்றப்பட்டு பதவியிலி ருந்து விலகுமாறு ஜனாதிபதியும் கையெழுத் திட்டு கடிதம் அனுப்பியுள்ளார்.

இதற்கு மேலும் அவர் பிரதம நீதியரசர் பதவியில் நீடித்திருக்க முடியாது. பாராளும ன்றத் தீர்மானத்தை எவரும் மீற முடியாது.

அதேவேளை முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸின் கடந்தகால நடவடிக் கைகள் பிழையானவை. எனவே அவர் பிரதம நீதியரசர் பதவிக்கு நியமிக்கப்படுவதை எதிர்க்கின்றேன்.

அத்தோடு ஷிராணி பண்டாரநாயக்க தற்போது பதவி இழந்துவிட்டார். எனவே அடம்பிடித்துக்கொண்டு பிரதம நீதியரசர் பதவியிலிருக்க முடியாது.

இதேவேளை இலங்கையின் தற்போ தைய அரசியலமைப்பை இல்லாதொழிக்கும் காலம் வந்துவிட்டது.புதியதொரு அரசியல மைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

ஆனால் அவ் அரசியலமைப்பில் நிச்சயம் மாகாணங்களுக்கும் பிரதேச சபைகளுக்கும் அதிகாரங்கள், பரவலாக்கல் உறுதிப்படுத்தப் பட வேண்டியது கட்டாயமாகும். ஏனென்றால் அதிகாரப் பரவலாக்கல் மூலமே ஜனநாயகத் தைப் பாதுகாக்க முடியும்.

அனைத்து மக்களுக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும். சிறுபான்மை இன மக்களின் உரிமைகள் உறுதி செய்யப்பட வேண்டும் என்றார். (அ-2)

# காலை வேளையில் கடும்குளிர் நிலவும்

(கொழும்பு)

நாட்டில் எதிர்வரும் சில தினங்களுக்கு காலை வேளையில் கடும் குளிருடனான வானிலை நிலவுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

நேற்று காலை கொழும்பின் வெப்ப நிலை 22.3 செல்சியசாக குறைந்துள்ள தாக திணைக்களத்தின் வானிலை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, நுவரெலியா, ஹற்றன் பகுதிகளில் வெப்பநிலை 10 செல்சியசாக குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகி ன்றது.

அத்துடன் நண்பகல் வேளைகளில் கடும் வெயில் காணப்படும் எனவும் மழை பெய்வதற்கான சாத்தியங்கள் இல்லை எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பிரான்சின் இதயப்பகுதி மீது தாக்குதல் நடத்துவோம்

### தீவிரவாத குழு எச்சரிக்கை

பிரான்சின் இதயப்பகுதி மீது தாக்குதல் நடத்தப் போவதாக தீவிரவாத குழுவின் தலைவர் அறிவித்துள்ளார்.

மாலியின் பிரதான நகரான டியாப்லியை தீவிரவாதிகள் கைப்பற்றிவிட்டதாக பிரான்ஸ் அறிவித்துள்ளது.

இது குறித்து பிரான்ஸ் வெளிவிவகாரத் துறை அமைச்சர் ஷான் ஈவ் லெ திரியான் கூறுகையில், தீவிரவாதிகளுக்கு எதிராக பிரான்ஸ் நடத்திய குண்டுவீச்சு தாக்குதல் வெற்றி அடைந்துள்ளது. இந்த இராணுவ நடவடிக்கை தனது ஆரம்ப இலக்கை எட்டிவிட்டது என்பதை நிரூபிக்கும் வகையில் சில செயற்கைக்கோள் படங்கள் வெளியாகியுள்ளன.

இவற்றில் மாலீன் வடக்கு நகரான கென்னாவுக்கு அருகே வீதியில் எரிந்து போன ஆட்களின் சடலங்களும் காணப்படுகின்றன.

இராணுவ வாகனம் மற்றும் தீவிரவாதிகளை முற்றிலும் ஒழிப்பதற்கு இன்னும் சில காலங்கள் ஆகலாம் என்று தெரிவித்துள்ளார். இந்நிலையில் பெரும்பாலான பகுதிகளிலிருந்து மக்கள் வெளியேறி அண்டை நாடுகளில் தஞ்சமடைந்து வருவதாக தெரிய வருகின்றது. (அ-5)

# உலகின் மிகப்பெரிய திருவிழா மஹா கும்பமேளா தொடங்கியது


© AFP/GETTY IMAGES

உலகின் மிகப்பெரிய மக்கள் ஒன்று கூடல் என்று கருதப்படும் கும்பமேளா நேற்று முன்தினம் கங்கை, யமுனை நதிகள் அலகாபாதில் சங்கமிக்கும் இடத்தில் தொடங்கியது.

பல நாட்கள் நடைபெறும் இந்த மத விழாவில் பத்து கோடிக்கும் அதிகமான மக்கள் அங்கு புனித நீராடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் இத்திருவிழாவின் முதல் நாளான நேற்று முன்தினம் மட்டும் ஒரு கோடி பேர் அலகாபாத் சங்கமத்தின் நீராடியிருப்பார்கள் என கருதப்படுகிறது.

உடல் முழுவதும் திருநீறு பூசியபடி மலர் மாலை மட்டுமே அணிந்த நிர்வாண நாகா சாதுக்கள் இங்கு புனித நீராடவென வண்ணமயமான ஒரு ஊர்வலத்தில் மந்திர உச்சாடனங்களைச் செய்தவாறே கங்கை, யமுனை சங்கமத்தில் குதித்து நீராடினர்.

இத்திருவிழாவையொட்டி அலகாபாத் நகர் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் 30 ஆயிரத்துக்கும் அதிகமான பாதுகாப்பு பொலிஸார் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் இது தவிர பதினான்கு இடங்களில் தற்காலிக மருத்துவமனைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் புனிதப் பயணம் மேற்கொள்பவர்களின் தேவைக்காக 40 ஆயிரத்திற்கும் அதிகமான கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஆறுநாட்கள் கங்கை, யமுனை சங்கமத்தில் புனித நீராடும் நிகழ்வு நடைபெறவுள்ள நிலையில் நதிகளுக்கு மேலேயுள்ள அணைகளில் இருந்து கூடுதலாக நன்னீரைத் திறந்து விட உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை கும்பமேளா திருவிழாவுக்காக அரசு 210 மில்லியன் டொலர்கள் அதாவது 1150 கோடி இந்திய ரூபாய்களை செலவு செய்கிறது. எனினும் கும்பமேளா மூலம் 12 ஆயிரம் கோடி ரூபாய்கள் அளவுக்கு வியாபாரம் இருக்கும் என இந்திய வர்த்தக சம்மேளனங்களின் கூட்டமைப்பின் ஆய்வறிக்கை கூறுகிறது.

இத்திருவிழாவுக்கு இந்தியர்களைத் தவிர வெளிநாட்டிலிருந்து பத்து இலட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (அ-5)

# எகிப்தில் புகையிரத விபத்து! 15 பேர் பலி; 103 பேர்காயம்

எகிப்தில் இராணுவபுகையிரதத்தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில் 15 பேர் பலியாகியுள்ளதோடு 103 பேர் காயமடைந்துள்ளனர்.

எகிப்தில் இராணுவத்திற்கு சொந்தமான புகையிரதவண்டி கெய்ரோவிலிருந்து அயல் ஊரான பத்ரஸினுக்கு சென்ற போது எதிர்பாராத விதமாக தடம் புரண்டது.

இந்த விபத்திலேயே 15 பேர் பலியானதோடு 103 பேர் காயமடைந்துள்ளதாக அந்நாட்டு சுகாதார அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

புகையிரத போக்குவரத்து சாலை மிக மோசமாக இருந்ததே இதற்குக் காரணம் என்று கூறப்படும் அதேவேளை இந்த புகையிரதத்தில் அருகில் உள்ள இராணுவ முகாமிற்கு பயிற்சிக்காக இராணுவ இளைஞர்களை ஏற்றிச் சென்றதாகவும் இதன்போதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இவ்விபத்தில் பலியானவர்கள் குறித்த தகவல் எதுவும் இதுவரை அறியப்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-5)

# சரியான நேரத்தில் தக்க பதிலடி கொடுப்போம்

### இராணுவத் தளபதி பிக்ரம் சிங்



பாகிஸ்தானின் நடவடிக்கையை மன்னிக்க முடியாது. சரியான நேரத்தில் சரியான இடத்தில் பதிலடி கொடுக்க இந்தியாவுக்கும் உரிமை உள்ளது என்று இந்திய இராணுவ தளபதி ஜெனரல் பிக்ரம் சிங் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் டில்லியில் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்தபோது, இந்திய வீரர்கள் இரண்டு பேரை பாகிஸ்தான் கொன்றது கொடூரமானது. பாகிஸ்தான் கூறுவதுபோல 6 ஆம் திகதி இந்தியா எந்த தாக்குதலையும் நடத்தவில்லை. பாகிஸ்தான் இராணுவம் திட்டமிட்டே இந்திய இராணுவ வீரர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளது. சரியான நேரத்தில் சரியான இடத்தில் பதிலடி கொடுக்க இந்தியாவுக்கும் உரிமை உண்டு.

மேலும் பாகிஸ்தானின் நடவடிக்கை மன்னிக்க முடியாது என்றும் இதுபோர் விதிமுறைகளுக்கு எதிரானது என்றும் கண்டனம் தெரிவித்துள்ளார். (அ-5)

# டில்லியில் கடும் பனிமூட்டம்; விமான சேவைகள் பாதிப்பு

டில்லியில் கடும்பனி மூட்டம் காரணமாக நேற்று 150 இற்கும் மேற்பட்ட விமானங்களின் சேவையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக மத்திய அமைச்சர் பயணித்த விமானமும் இரண்டு மணி நேரம் தாமதமாக புறப்பட்டுச் சென்றது.

கடந்த சில நாட்களாக டில்லியில் கடும் பனி மூட்டமும் பனிப்பொழிவும் காணப்படுகிறது. டில்லி இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையத்தில் நேற்று காலையில் கடும் பனி மூட்டம் காணப்பட்டது.

அதிகாலை 5 மணி முதல் 6.30 மணி வரை விமான நிலைய ஓடுபாதைகளில் 50 மீற்றருக்கும் குறைவான தூரத்தையே பார்க்க முடிந்ததால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விமானங்கள் என 150 இற்கும் மேற்பட்ட விமானங்களின் சேவையில் பாதிப்பு ஏற்பட்டது.

டில்லியில் தரையிறங்க வேண்டிய விமானங்கள் வேறு நகரங்களுக்கு திருப்பி விடப்பட்டதுடன் வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் பயணித்த பூட்டான் செல்லும் விமானமும் இரண்டு மணிநேரம் தாமதமாக புறப்பட்டுச் சென்றது. (அ-5)

# ஒசாமா பின்லேடன் திரைப்படத்திற்கு அமெரிக்காவில் உச்ச வரவேற்பு

சர்வதேச அல்கொய்தா இயக்கத் தலைவர் ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டது குறித்த திரைப்படம் அமெரிக்காவில் உச்ச வரவேற்பை பெற்றுள்ளது.

அல்கொய்தா இயக்கத் தலைவர் ஒசாமா பின்லேடன் அமெரிக்க படையினரால் கடந்த 2011 ஆம் ஆண்டு மேமாதம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் குறித்த நிகழ்வுகளை கத்தரின் பிகிலோ என்பவர் சீரோ பாக் தேட்றி என்ற பெயரில் படமாக தயாரித்துள்ளார்.

இப்படம் அமெரிக்காவிலும் கனடாவிலும் முதலிடத்துக்கு வந்துள்ளது. படம் வெளியான மூன்று நாட்களுக்குள் உலகளாவிய ரீதியில் 24 மில்லியன் டொலர்களை சம்பாதித்துள்ளது.

மேலும் கடும் விமர்சனத்திற்கு உள்ளான இப்படம் எதிர்வரும் 25 ஆம் திகதி இங்கிலாந்திலும் அயர்லாந்திலும் வெளியாகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-5)

# ஆயிரம் பேர் மத்தியில் அதிர்ச்சியூட்டிய கொலை

### இங்கிலாந்தில் சம்பவம்

இங்கிலாந்தில் ஆயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் 2 பேர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இங்கிலாந்தின் மத்திய பிர்மிங் காம் பகுதியில் மிகப் பெரிய வர்த்தக நிலையம் உள்ளது. இங்கு கடந்த 11 ஆம் திகதி ஆயிரக்கணக்கான மக்கள் குவிந்திருந்தனர்.

இதன்போது 30 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவர் 2 பேரை கத்தியால் சரமாரியாக குத்தியுள்ளார். தகவல் அறிந்து விரைந்து வந்த பொலிஸார் காயமடைந்த இருவரையும் மருத்துவமனைக்கு விரைந்து கொண்டு சென்றபோதும் காப்பாற்ற முடியாமல் போயுள்ளது. இது குறித்து வழக்கு பதிவு செய்துள்ள பொலிஸார் 23 வயது மதிக்கத்தக்க வாலிபர் ஒருவரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

விசாரணையில் இறந்தவர்கள் 2 பேரும் வீடு இல்லாதவர்கள் என்றும் வீதிகளில் பத்திரிகை விற்று பிழைத்து வந்தவர்கள் என்றும் தெரியவந்துள்ளது. (அ-5)

# ரஷ்யாவின் விமானம் மூலம் சிரிய இராணுவம் தாக்குதல்

சிரியாவில் உள்நாட்டு போர் தீவிரமடைந்து வரும் நிலையில் சிரியாவில் புரட்சிப்படையினர் வசமுள்ள பகுதிகளை மீட்பதற்காக இராணுவத்தினர் வான்வழி தாக்குதல்களை நடத்துகின்றனர்.

இதில் நேற்று நடத்தப்பட்ட தாக்குதல்களில் மட்டும் 13 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் டமாஸ்கஸ் மற்றும் அலெப்பா பகுதிகளில் நடந்த தாக்குதல்கள் தொடர்பான வீடியோ இணையத்தில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அதில் ரஷ்யாவின் மிக்போர் விமானம் மூலம் தாக்குதல் நடத்தப்பட்ட தாகவும் சர்ச்சை எழுந்துள்ளது. (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேர்வினின் ஆதரவாளர்கள் களனியை விட்டு வெளியேற்றம்

(கொழும்பு)

அமைச்சர் மேர்வின் சில்வாவின் ஆதரவாளர்கள் களனி பிரதேசத்தை விட்டு வெளியேறிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

களனி தேர்தல் தொகுதியின் அமைப்பாளர் பதவியை அமைச்சர் இராஜினாமா செய்ததனைத் தொடர்ந்தே இவ்வாறு அவரது ஆதரவாளர்கள் வெளியேறிச் சென்றுள்ளனர். அமைச்சர் மேர்வின் சில்வா தொகுதி அமைப்பாளராக கடமையாற்றிய காலத்தில் கிடைக்கப்பெற்ற அரசியல் மற்றும் பொலிஸ் பாதுகாப்பு தற்போது இல்லாத காரணத்தினாலேயே இவ்வாறு வெளியேறிச் செல்கின்றனர்.

களனி பிரதேசத்தில் அமைச்சரின் ஆதரவாளர் ஒருவரது வீட்டில் வெடிபொருள் கண்டு பிடிக்கப்பட்டதனைத் தொடர்ந்து ஆதரவாளர்கள் தலைமறைவாகத் தொடங்கியுள்ளனர்.

இந்நிலையில் அமைச்சருக்கு எதிராக செயற்பட்டு வரும் களனி பிரதேச சபைத் தலைவர் உள்ளிட்டோரின் ஆதரவாளர்களினால் தாக்குதல் நடத்தப்படக் கூடுமென்ற அச்சத்தினால் இவ்வாறு அமைச்சரின் ஆதரவாளர்கள் வெளியேறிச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, களனி தேர்தல் தொகுதி அமைப்பாளர் பதவிக்கு போட்டி நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் களனி தேர்தல் தொகுதி அமைப்பாளராக அமைச்சர் மேர்வின் சில்வா கடமையாற்றி வந்தார்.

இதன்போது பிரதேச சபை உறுப்பினர் ஹசித மடவல கொலைச் சம்பவத்தின் பின்னர் தொகுதி அமைப்பாளர் பதவியை அமைச்சர் மேர்வின் சில்வா இராஜினாமா செய்திருந்தார். இந்தப் பதவி வெற்றிடத்திற்கு ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரதேச சபை உறுப்பினர்களும் போட்டியிட்டு வருவதாக கூறப்படும் நிலையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர் மாலினி பொன்சேகா, மாகாணசபை உறுப்பினர் ரோகணசிறி வராகொட, மாகாணசபை உறுப்பினர் சிசிர ஜகொடி உள்ளிட்ட சிலருக்கு இந்தப் பதவியை வழங்குமாறு மக்கள் கோரி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அமைச்சர் மேர்வின் சில்வாவைத் தவிர்ந்த ஏனைய எவருடனும் இணைந்து செயற்படத் தயார் என களனி பிரதேச சபையின் தலைவர் பிரசன்ன ரணவீர தெரிவித்துள்ளார். களனி தேர்தல் தொகுதி அமைப்பாளர் பதவிக்கு ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஆளும் கட்சியில் இணைந்து கொண்ட மொஹான் லால் கிரேரு நியமிக்கப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அமைச்சருக்கு மீளவும் தொகுதி அமைப்பாளர் பதவி வழங்கப்பட வேண்டுமென சில தரப்பினர் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## தரம் 5 புலமைப்பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு

தேசிய சேமிப்பு வங்கியின் ஹப்பன் புலமைப்பரிசில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு தேசிய சேமிப்பு வங்கியின் யாழ்ப்பாண மேற்தரக்கிளை பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

தேசிய சேமிப்பு வங்கி வடபகுதி கிளைகளில் சிறுவர் சேமிப்பு கணக்கினை நடைமுறைப்படுத்தி வரும் மாணவர்களை கடந்த 2012 இல் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாத மாணவர்கள் தமது விபரங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன் அந்தந்தக் கிளைகளில் (கணக்கு நடைமுறையில் உள்ள கிளை) பதிவுகளை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-9)

# தூக்குமரத்தை தயார்படுத்திய பின் விசாரணை நடத்தும் காலம் விரைவில்

## எச்சரிக்கிறார் சட்டத்தரணி சந்திரபால

(கொழும்பு)

அமெரிக்கா சுதந்திரம அடைவதற்கு முன்னர் தூக்குமரத்தை தயார் செய்து கொண்டே இங்கு வழக்குகள் விசாரிக்கப்பட்டன. அவ்வாறானதொரு நிலைமை இங்கு ஏற்படுவது தொலைவில் இல்லை சட்டத்தரணி சந்திரபால குமாரகே தெரிவித்துள்ளார்.

நிப்போன் விடுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்கவை பதவி விலக்கவேண்டாம் என இந்த நாட்டு மக்களில் பெரும்பான்மையினர், அமைப்புக்கள், சட்டத்தரணிகள், ஜனநாயகத்தை நிர்வகிக்கும் நாடுகள், சர்வதேச சட்ட நிறுவனங்கள் கோரிக்கை விடுத்துள்ளபோதிலும் அவற்றையெல்லாம் கணக்கில் எடுக்காமல் பிரதம நீதியரசருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குற்றப்பிரேரணை விவகாரத்தை சட்டம் தொடர்பிலும் போதியளவிலான கல்வியறிவு இல்லாதவர்களுமே கையாண்டனர். இவ்வாறான நிலையிலேயே பிரதம நீதியரசரை பதவியிலிருந்து நீக்குவதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார். அதனை நாம் ஏற்றுக் கொள்ள மாட்டோம்.

அரசாங்கம் அரசியலமைப்பை மீறியுள்ளது. அரசியலமைப்பை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும். சட்டமா அதிபர் திணைக்களம் சூனியம் ஆக்கப்பட்டது போல நீதித்துறையையும் சூனியமாக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அரசியல்வாதிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறப்படும் பல்வேறு கொலைகள் தொடர்பிலான வழக்குகள் கடந்த காலங்களில் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

அவ்வாறான காலப்பகுதியில் சட்டமா அதிபராக பதவிவகித்தவர் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டால் தூக்கு மரத்தை தயார்படுத்திக் கொண்டே வழக்குகளின் விசாரணைகள் ஆரம்பிக்கப்படும். அவ்வாறானதொரு நிலைமை ஏற்படுவது வெகு தொலைவில் இல்லை என்றார். (அ-2)

## போலி நாணயத்தாள்களுடன் ரஷ்ய பிரஜை கைதானார்

போலி நாணயத்தாள்களை வைத்திருந்த ரஷ்ய பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் நீர்கொழும்பு, எக்குகால பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சுற்றுலா வந்திருந்த நபர் விடுதி ஒன்றில் தங்கியிருந்த வேளையில் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவரிடமிருந்து போலி அமெரிக்க டொலர்கள் ஏழு கைப்பற்றப்பட்டுள்ளன. இவரை நீர்கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# குற்றவியல் பிரேரணை நிறைவேற்றம் அரசியலமைப்பிற்கு முரணானது

## கிரியெல்ல எம்.பி தெரிவிப்பு

குற்றவியல் பிரேரணை நிறைவேற்றப்பட்டமை நாட்டின் அரசியல் அமைப்பிற்கு முரணானது என ஐக்கியதேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்க பதவி விலக்கப்பட்டமை தொடர்பில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அதில் அவர் குறிப்பிட்டுள்ள விடயங்கள் வருமாறு,

பிரதம நீதியரசருக்கு எதிராக குற்றவியல் பிரேரணை அரசியல் அமைப்பிற்கு புறம்பானது என உச்ச நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இவ்வாறான ஓர் நிலையில் குற்றவியல் பிரேரணையை நாடாளுமன்றில் நிறைவேற்றுவது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல. பிரதம நீதியரசர் பதவி விலக்கப்பட்டமை நாட்டின் அரசியலமைப்பிற்கு முரணானது.

எனவே, தீர்ப்பை ஏற்றுக்கொள்ள முடியாது. அனைவரும் உச்ச நீதிமன்றின் தீர்ப்பை ஏற்றுக்கொண்டு செயற்பட வேண்டும்.

அரசியலமைப்பு தொடர்பான சட்ட வரவிலக்கணத்தை வழங்கக் கூடிய ஒரே நிறுவனம் உச்ச நீதிமன்றமாகும் என்றார். (அ-2)

# வலம்புரியின் செய்தி தொடர்பில் படைத்தரப்பு வெளியிட்ட கருத்து

தங்கமாலை ஒன்றை பறித்துக்கொண்டு பல்சர் சைக்கிளில் மறைந்தனர் என்ற தலைப்பில் 23.07.2012 ஆம் திகதி வலம்புரிப் பத்திரிகையில் வெளியான செய்தி சம்பந்தமாக இலங்கை பத்திரிகை பேரவையினால் 12.12. 2012 ஆம் திகதி நடத்தப்பட்ட விசாரணைகளின் பிரகாரம் குறித்த செய்தி தொடர்பில் படைத்தரப்பின் கருத்தை பதிவு செய்யுமாறு பத்திரிகைப் பேரவையின் தலைவர் கேட்டுக் கொண்டதற்கு வலம்புரி ஆசிரியர் சம்மதம் தெரிவித்தார்.


இதனையடுத்து மேற்படி செய்தி தொடர்பாகப் பலாலி பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தலைமையகத்தின் சட்ட அதிகாரி கப்டன் எம்.எஸ். ஜெயவிக்ரம அனுப்பி வைத்த விளக்கம் இங்கு பிரசுரமாகின்றது.

மிருசுவில் வடக்கு வீதியில் நடந்து வந்த பெண் ஒருவரின் கழுத்தில் இருந்த தங்க மாலை அறுத்தெடுக்கப்பட்டது சம்பந்தமாக பத்திரிகையில் வெளியான செய்தியின் கடைசிப் பந்தியில், இராணுவக் காவலரண் அமைந்துள்ள வீதியில் இந்தச் சம்பவம் நடந்தது என்று வெளியான செய்தியை திருத்திக்கொள்ளல்.

இந்தச் சம்பவம் நடந்த இடம் இராணுவக் காவலரணுக்கு தெரிவதற்கு சம்பந்தம் இல்லை. இச்சம்பவம் சம்பந்தமாக அந்தப் பெண் அல்லது வேறு யாராலும் இராணுவத்திடம் முறைப்பாடு அல்லது அது மாதிரியான எந்த முறைப்பாடுகளும் செய்யவில்லை.

தங்க மாலையை அறுத்தெடுத்த ஆள் குடத்தனை மேற்கைச் சேர்ந்தவர். எனவே கொடிகாமம் பொலிஸார் அவரைக் கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்படுத்தி மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

இது மாதிரியான செய்தி எக்காரணம் கொண்டும் இராணுவத்தினரை அபகீர்த்தி ஏற்படுத்தும் நோக்கில் வெளியிடவில்லை. அப்படியாக அபகீர்த்தி ஏற்பட்டிருப்பின் அதற்காகத் தாம் மனவருத்தம் அடைவதாகவும் எதிர்காலத்தில் இப்படியான செய்திகள் வெளியிடுவது தவிர்க்கப்படும் என்றும் ஆசிரியர் உறுதியளித்தார். (ந)



திருநெல்வேலி எச்சாட்டி வைரவர் ஆலய முகப்பு மண்டபத் திறப்பு விழா கடந்த 11 ஆம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்வில் சிகரம் ஊடக இல்ல பணிப்பாளர் கோ.ருஷாங்கன், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா ஆகியோர் உரையாற்றுவதையும் ஆலயத்தில் பூஜை வழிபாடுகள் நடைபெறுவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். இம் மண்டபம் திருநெல்வேலியைச் சேர்ந்த அமரர் சு.தம்பிராசா ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்:- எஸ்.ஆர்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபமும் பொறாமையும் மனிதனை கொன்றுவிடும் சக்தியைப் படைத்தது.

-இயேசு கிறிஸ்து

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இயற்கையின் நியதியை உய்த்துணர்தல் வேண்டும்!

ஈழத் தமிழர்களுக்கு அரசாங்கம் தானாக முன்வந்து எதுவும் தரப்போவதில்லை என்பது நிறுதிட்டமான உண்மை.

அதற்காக இனப்பிரச்சினை தீராமல் இருக்கப் போகிறது என்று யாரும் பொருள் கொள்ளக்கூடாது.

சர்வாதிகாரத்திற்கும், ஆணவத்திற்கும் இயற்கை கொடுத்த தண்டனைகள் நிறையவே உண்டு.

ஒருவர் அடைந்த துன்பத்தை இயற்கை எங்ஙனம் காலஅசைவில் நிவர்த்திக்கின்றதோ அதேபோன்று ஒருவரின் மகிழ்வையும் இயற்கை தணிக்கவே செய்யும்.

நிலத்தில் ஒரு கிடங்கை வெட்டிவிடுங்கள். அந்தக் கிடங்கை நாமாக மூடிவிட்டால் அதனால் ஏற்படக் கூடிய அசௌகரியங்களைக் குறைத்துக் கொள் ளலாம்.

கிடங்கை நாம் மூடிவிடவில்லை என்பதற்காக கிடங்கு மூடப்படமாட்டாது என்று எவரும் நினைத்து விடக்கூடாது.

இயற்கை நிச்சயம் அந்தக் கிடங்கை மூடிக் கொள்ளும். அது நடந்தேறுவதற்கு சில காலம் தேவைப்படலாம்.

சிலவேளை, கிடங்கை மூடுவது என்று இயற்கை தீர்மானித்துவிட்டால் கடற்கரை மண்ணையும் அது புழுதிப் புயலாகக் கொண்டுவந்து கிடங்கில் சேர்க்கும்.

இதன்போது கிடங்கை வெட்டியவர், அதனைப் பார்த்து நின்றவர்கள், அதுபற்றி எச்சரிக்கை செய்யாதவர்கள் என அனைவரும் இயற்கையின் புழுதிப் புயலில் சிக்கித் தவிக்க வேண்டிவரும்.

எனவே இயற்கையை மதித்து நடப்பதென்பது மிகவும் முக்கியமானது.

எனினும் துரதிர்ஷ்டவசமாக இலங்கை மண்ணில் ஆட்சியாளர்கள் முதல் சாதாரண அரசபணியாளர்களில் பெரும்பாலானவர்கள் வரை தமக்குக் கிடைத்த பதவிக்கு மதிப்புக் கொடுப்பதாகத் தெரியவில்லை.

ஆட்சிப் பீடத்தில் அமருதல் என்பது இறைவன் கொடுத்த கொடை என்று நினைத்துக் கொண்டால் அங்கு சர்வாதிகாரத்திற்கு இடம் இருக்க முடியாது.

மாறாக எல்லாம் எங்களால்தான் நடந்தது. நாங்கள் செய்வது தான் சரி, எவரும் அதில் குறைகண்டு கொள்ளக்கூடாது என்று நினைத்தால், அதன் விளைவு மனித அவலங்களாகவே இருக்கும்.

அதேநேரம் ஒரு இனம் அல்லது ஒரு சமூகம் எக்காலத்திலும் பின்னடைந்து அடிமைகளாக அல்லது தேசமற்றவர்களாக வாழவேண்டும் என்பதும் சாத்தியப்பாடானதொன்றல்ல.

இவற்றுக்கு இயற்கை ஒருபோதும் இடம் கொடுப்பதில்லை.

இத் தத்துவத்தை உணர்ந்துகொண்டு மனித வாழ்வு மேம்பாடடைவதற்கான திட்டங்களைச் செய்து அதனை நடைமுறைப்படுத்தும்போது, எங்களை அறியாத இன்பம் எங்களைச் சூழ்ந்து கொள்ளும். இதனைத்தான் பேரின்பம் என்று கூறுகின்றோம்.

எனினும், இலங்கையைப் பொறுத்தவரை எல்லோரும் இன்புற்றிருக்க நினைக்கும் உயர் சிந்தனைக்கு நிறையவே பஞ்சம் உண்டு.

ஆட்சியாளர்கள் பௌத்த மதத்தை மதிக்கும் அளவில் கௌதம புத்தபிரானின் போதனைகளை மதிப்பதில்லை.

உண்மையில் கௌதம புத்தபிரானின் போதனைகள் மதிக்கப்பட்டால்-கடைப்பிடிக்கப்பட்டால் மதவாதம்,இனவாதம் என்பதற்கு இந்த மண்ணில் இம்மியும் இடமிருக்கமாட்டாது.

என்ன செய்வது! மொழியும் மதமும் இந்த நாட்டின் நிம்மதியை தொலைத்து வருகின்றன என்பதற்காக துன்பப்படுவதைத்தவிர வேறு எதைத்தான் சொல்லவும் செய்யவும் முடியும்.

# வடக்கு பிரதி தேர்தல் ஆணையராக எஸ்.அச்சுதன் இன்று பதவியேற்பு

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் பிரதித் தேர்தல் ஆணையாளராகவும் யாழ்.தேர்தல் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளராகவும் எஸ்.அச்சுதன் இன்று தனது பணியைப் பொறுப்பேற்க உள்ளார் என யாழ்.தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.தேர்தல் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளராக பணிப்பாற்றியாற்றிய எஸ்.சுதாகரன் வன்னித் தேர்தல் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளராக நியமனம் பெற்று செல்வதை அடுத்து யாழ்.தேர்தல் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளராகவும் வட மாகாணத்தின் பிரதித் தேர்தல் ஆணையாளராகவும்எஸ்.அச்சுதன் இன்று தனது பதவியை பொறுப்பேற்கின்றார்.

இவர் அம்பாறை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளராக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.(செ-6)

## மு/ வித்தியின் பரிசளிப்பு விழா

முல்.வித்தியானந்தா கல்லூரியின் நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும் வித்தியாதீபம் கல்லூரி மலர் வெளியீட்டு விழாவும் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக பழைய மாணவர் வி.நவநீதன், முல்லைத் தீவு 592ஆவது படைப்பிரிவின் அதிகாரி எஸ்.ஏ.ஆர்.சமரசிங்க,முல்லை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் என்.ரங்கநாதன், கரைத்துறைப்பற்று கோட்டக் கல்விப் பணிப்பாளர் செயசோதிநாதன், கல்லூரியின் ஓய்வுபெற்ற பிரதி அதிபர்களான எஸ்.கதிரவேலு, வி.தர்மராஜா ஆகியோர் கலந்து சிறப்பிக்வுள்ளனர்.(அ-9)

## நெருப்புக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 5 பேர் யாழ். ஆஸ்பத்திரியில்

### தொற்றுநோய் தடுப்புப் பிரிவு தகவல்

(யாழ்ப்பாணம்)

நெருப்புக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று முன் தினமும் நேற்றும் 5 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என தொற்றுநோய் தடுப்பு பிரிவு தகவல்கள் தெரிவித்தன.

யாழ்.குடாநாட்டில் டெங்கு, தைபஸ், நெருப்புக்காய்ச்சல் போன்ற தொற்று நோய்களினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

தொற்றுநோய்களினால் பாதிக்கப்படுவோரில் அதிகமானவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையிலே சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுகின்றனர்.

இதில் நேற்று முன்தினமும், நேற்றும் 5 பேர் நெருப்புக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நெருப்புக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை வைத்தியர்களும் உறுதிப்படுத்தினர் என போதனா வைத்தியசாலையின் தொற்றுநோய் தடுப்புப் பிரிவு புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவித்தன.

இதில் நேற்று முன்தினம் 3 பேரும் நேற்று 2 பேரும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு இனம்காணப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.(செ -6)

## வீதி விளக்குகள் இன்மையால் விபத்துக்கள் அதிகரிக்கின்றன

### வவுனியா நகர மக்கள் விசனம்

(குருமன்காடு)

வவுனியா நகரப் பகுதியில் வீதி மின் விளக்குகள் பொருத்தப்படாமையால் இரவு நேரவீதி விபத்துக்கள் அதிகம் ஏற்படுவதாக பொதுமக்கள் அதிகம் விசனம் தெரிவிக்கின்றனர்.

நகரசபைக்குட்பட்ட பல வீதிகளும் இன்று வீதி விளக்குகள் இன்றி காணப்படுகிறது.

இது தொடர்பில் நாம் பல தடவை நகர சபைக்கு முறையிட்டுள்ளோம். எனினும் மின் விளக்குகள் பெருத்தப்படவில்லை. அண்மையில் மின் விளக்குகள் கொள்வனவு செய்யப்பட்டதாகவும் அதனை வீதிகளுக்கு பொருத்துவதாகவும் நகர சபையினால் கூறப்பட்டது.

எனினும் சில மின் குமிழ்கள் பொருத்தப்பட்ட நிலையில் பல வீதிகளுக்கும் பொருத்தப்படவில்லை. அவ்வாறு பொருத்தப்பட்ட மின்குமிழ்கள் சில தற்போது ஒளிர்வதுமில்லை.

இவ்வாறான நிலையில் வீதி மின் குமிழ்களை பொருத்தி மக்களின் போக்குவரத்திற்கு ஆவன செய்ய நகரசபை நடவடிக்கை எடுக்கவேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.(செ-9, 250)

## பிரதான வீதியிலுள்ள பாலம் சேதம்; விரைந்து திருத்துமாறு மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி மாவட்டத்தின் அக்கராயன்குளம் உடைப்பெடுத்ததனால் கோணாவில் பிரதேசத்திற்கும் யூனியன் குளம் கிராமத்திற்கும் இடையிலான பிரதான வீதியில் உள்ள பாலம் சேதமடைந்துள்ளதால் அக்கிராமத்திற்கான போக்குவரத்து முற்றாக பாதிப்படைந்துள்ளது.

குறித்த யூனியன் குளம் கிராமத்தில் 66 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இங்கு வாழும் மக்களுக்கும் ஏனைய பிரதேசத்திற்குச் செல்லும் பிரதான வீதியில் உள்ள பாலம் உடைந்துள்ளதால் போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் அப்பகுதியில் வாழும் மக்கள் மூன்று கிலோமீற்றர் தூரத்திற்கு நடைபயணமாகச் சென்று தங்கள் தேவைகளைப் பெறவேண்டிய நிலை காணப்படுகின்றது.

குறிப்பாக பாடசாலை மற்றும் மருத்துவமனைக்கு செல்வதற்கு அங்குள்ள மக்கள் இவ்வீதியையே பயன்படுத்தி வந்துள்ளனர். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய கவனமெடுத்து இந்த வீதியை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த சிலநாட்களுக்கு முன்பு பெய்த கடும் மழை காரணமாக குறித்தகுளம் உடைப்பெடுத்தது என்பது குறிப்பிடத் தக்கது. (செ-6)


## கிளி., முல்லைக்கு நாமல் விஜயம்

அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் புதல்வருமான நாமல் ராஜபக்ஷ நேற்று முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டத்திற்கு விஜயம் ஒன்றினை மேற் கொண்டார்.

அங்கு அவர் கிளிநொச்சி வட்டக்கச்சி மகா வித்தியாலயம், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, முத்துஐயன் கட்டு வலதுகரை மகாவித்தியாலயத்திற்கு விஜயத்தினை மேற்கொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கிவைத்தார்.

பாடசாலையில் காணப்படும் போக்குவரத்து பிரச்சினை, ஆசிரியர் பற்றாக்குறை, மின்சார பிரச்சினை என்பவற்றை நாமல் ராஜபக்ஷவுக்கு பாட சாலை நிர்வாகம் எடுத்துக் கூறினர். (செ-267)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்



### நாமெல்லாம் ஒரே ஆள்

மின்னாது முழங்காது சீறிச்சினந்து பொங்கிய ஈரலைகளும் குழந்தைகளையும் உடன் பிறந்தார்களையும் பெற்றோரையும் பறித்துச்செல்ல கதறிக் கொண்டும் பிதற்றிக் கொண்டும் சித்தப்பிரமையுற்றும் பேயே போன்றிருந்தோரைச் சூழ்ந்துகொண்டு அயலவர் ஆதரவும் ஆறுதலும் தேறுதலும் அளித்தனவெல்லாம் அயல் நமக்கு இல்லை எனக் தோசித்தன என்றே சொல்லுதல் வேண்டும். கரையோரப்பகுதியில் கதியற்றுக் கிடந்தோரை நோக்கி மலையக மக்கள் உதவிப்பொருட்களோடு விரைந்து வந்தமை இடத்தில் எட்ட இருந்தாலும் இதயத்தில் கிட்டியிருக்கின்றோம் என்று உணர்த்தின.

வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தமிழ்மக்களுக்கு நேர்ந்த துன்பம் துடைப்பதற்காகத் தெற்கிலும் மேற்கிலுமிருந்து பௌத்த குருமார்களுடனும் பாதிரிமார்களுடனும் சிங்களச் சகோதரர்கள் சாரிசாரியாக வந்தமை நம்மிற் சாதி சமயமாகிய மாறுபாடுகள் ஏதுமில்லை. நாமெல்லாம் ஒரே சாதி சமயத்தையும் சேர்ந்தவர்கள் என்ற அந்தரங்க உண்மையை வெளிப்படுத்தின. அரச படையினரும் புலிப்படையினரும் ஆதரவு அளிப்பதற்குக் கைகோர்த்து நின்றமை நம்மிடத்துள்ள உள்ளார்ந்த நட்புறவை வெளிப்படுத்தியது. இவ்வாதரவுச் செயல்களிலே **பிறர் சுகம் தன் சுகம், பிறர் துயர் தன் துயர்**, பிறருக்கு ஆறுதலளிப்பதால் நாம் இரட்டிப்பு ஆறுதலடைகின்றோம். நாமெல்லாம் ஒரே ஆளின் அங்கங்கள். நம்மில் யார்படும் இன்பத்திலும் துன்பத்திலும் நமக்கெல்லாம் பங்குண்டு என்ற நல்லுணர்வுகள் நன்கு வெளிப்பட்டன.

கடலடியில் ஏற்பட்ட நிலநடுக்கம் சுனாமியாய் எழுந்தது. சுனாமி நம்முள்ளே மண்டிக்கிடந்த நாமெல்லாம் ஒரே ஆள் என்ற மெய்யுணர்வை அருட்டி எண்ணற்ற நல்லுணர்வலைகளை எழுப்பியது. இதன்பொருட்டுச் சுவாமியின் அருள் அலை என்று போற்றுதல் தக்கதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "லா லிகா" காற்பந்து லீக் போட்டியில
# பார்சிலோனா அணி வெற்றி




ஸ்பெயினில் நடைபெற்று வரும் "லா லிகா" காற்பந்து லீக் போட்டியில் மலாகா அணிக்கெதிரான ஆட்டத்தில் பார்சிலோனா அணி வெற்றி பெற்றது.

மாட்ரிட் நகரில் நடந்த லீக் போட்டியீல் பார்சிலோனா, மலாகா அணிகள் மோதின. இதில் முதல் பாதியில் அபாரமாக ஆடிய பார்சிலோனா அணியின் மெஸ்சி 26ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார். இந்த சுற்றில் மெஸ்சி அடித்த 28ஆவது கோல் ஆகும்.

இரண்டாவது பாதியில் பார்சிலோனாவின் பேப்ரிகாஸ் 49ஆவது நிமிடத்தில் இரண்டாவது கோலும், தியாகோ 81ஆவது நிமிடத்தில் மூன்றாவது கோலும் அடித்து அணியை 3-0 என்று முன்னிலை பெற வைத்தனர். கடைசி நேரத்தில் மலாகா அணியின் புனானோட் ஒரு கோல் அடித்து ஆறுதல் தந்தார்.

போட்டி முடிவில் 3-1 என்ற கணக்கில் பார்சிலோனா அணி வெற்றி பெற்றது.

இதுவரை விளையாடிய 19 லீக் போட்டியில் 18 வெற்றி, ஒரு சமநிலை உட்பட 55 புள்ளிகளுடன் உள்ள பார்சிலோனா அணி முதலிடத்தில் உள்ளது.

# மகளிர் உலகக் கிண்ணத்தில் பாகிஸ்தான் விளையாடுமா...?

ICC WOMEN'S WORLD CUP
India 2013

இந்தியாவில் நடைபெற உள்ள மகளிர் உலகக் கோப்பை போட்டியில் பாகிஸ்தான் அணி பங்கேற்பது குறித்து ஐசிசியின் முடிவுக்கு பிசிசிஐ விட்டுவிட்டது.

இந்தியா - பாகிஸ்தான் இடையே நிலவும் சூழ்நிலை குறித்து ஐசிசிக்கு கடிதம் எழுதியுள்ள இந்திய கிரிக்கெட் வாரியம் (பிசிசிஐ), இந்தியாவுக்கு பாகிஸ்தான் மகளிர் கிரிக்கெட் அணி வருவது குறித்து முடிவு எடுக்கும் பொறுப்பை ஐசிசிக்கு விட்டுவிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளது.

மும்பையில் ஜனவரி 31ஆம் திகதி முதல் பெப்ரவரி 17 ஆம் திகதி வரை மகளிர் உலகக் கோப்பை நடைபெற உள்ளது.

# இந்தியா – அவுஸ்திரேலியா முதல் டெஸ்ட் டில்லியிலிருந்து சென்னைக்கு மாற்றம்

இந்தியா, அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் டில்லியில் இருந்து சென்னைக்கு மாற்றப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் இந்தியா செல்லவுள்ள அவுஸ்திரேலிய அணி நான்கு போட்டிகள் கொண்ட "பார்டர்-கவாஸ்கர் கிண்ணம் டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதல் டெஸ்ட் டில்லியிலும் (பெப்ரவரி 22-26ஆம் திகதி) அடுத்த மூன்று போட்டிகள் மொகாலி (மார்ச் 2-6), ஐதராபாத் (மார்ச் 14-18), சென்னையில் (மார்ச் 22-26) நடத்த முடிவு செய்யப்பட்டது.

தற்போது, டெஸ்ட் தொடருக்கான அட்டவணையில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பி.சி.சி.ஐ) மாற்றம் செய்துள்ளது. இதன்படி, முதல் டெஸ்ட் சென்னையில் உள்ள சேப்பாக்கம் மைதானத்தில் பெப்ரவரி 22-26 ஆம் திகதிகளில் நடத்தப்படும்.

இரண்டாவது டெஸ்ட் ஐதராபாத்தில் உள்ள ராஜிவ் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் மார்ச் 2-6 ஆம் திகதிகளில் நடத்தப்படும்.

மூன்றாவது டெஸ்ட் மொகாலியில் உள்ள பஞ்சாப் கிரிக்கெட் சங்க மைதானத்திலும் (மார்ச் 14-18), நான்காவது மற்றும் கடைசி டெஸ்ட் டில்லியில் (மார்ச் 22-26) உள்ள பெரோஷா கோட்லா மைதானத்திலும் நடத்தப்படும்.

வடமாநிலங்களில் நிலவி வரும் கடுமையான பனிப்பொழிவு காரணமாக, டெஸ்ட் தொடருக்கான அட்டவணையில் மாற்றம் செய்யப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# 'டாடா ஸ்டீல்' செஸ் தொடர் நெதர்லாந்தில்




நெதர்லாந்தில் உள்ள விஜ் ஆன் ஜீ நகரில், 75ஆவது டாடா ஸ்டீல் செஸ் தொடர் நடைபெறுகிது. இதில் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த், நோர்வேயின் கார்ல்சன், ஆர்மேனியாவின் ஆரோனியன் உள்ளிட்ட 42 முன்னணி வீரர்கள், மூன்று பிரிவுகளாக லீக் சுற்றில் விளையாடுகின்றனர்.

"ஏ" பிரிவில் இடம்பெற்றுள்ள இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த், தனது முதல் சுற்று ஆட்டத்தை சமன் செய்தார். இரண்டாவது சுற்றில் நெதர்லாந்தின் அனிஷ் கிரியை சந்தித்த ஆனந்த், கறுப்பு நிற காய்களுடன் விளையாடினார். இப்போட்டி 46ஆவது நகர்த்தலின்போது சமன் ஆனது.

மற்றொரு போட்டியில் இந்தியாவின் பென்டலா ஹரி கிருஷ்ணா, இத்தாலியின் பேபியானோ காருயனாவை எதிர் கொண்டார். இதில் ஹரிகிருஷ்ணா கறுப்பு நிற காய்களுடன் விளையாடினார். இப்போட்டி 51ஆவது நகர்த்தலின்போது சமன் ஆனது.

## செரீனா அபார ஆட்டம்!



அவுஸ்திரேலிய ஓபன் டெனிஸ் போட்டியில், மகளிர் ஒற்றையர் பிரிவில் செரீனா வில்லியம்ஸ், முதல் சுற்றில் ருமேனியாவின் எடினா காலோவிட்ஸ்- ஹால் உடன் மோதினார். ஆக்ரோஷமாக ஆடிய செரீனா எடினாவை ஒரு புள்ளிகூட எடுக்க விடாமல் திணறடித்தார்.

அப்போது வலது கணுக்காலில் காயம் ஏற்பட்டது. சிகிச்சைக்குப் பிறகு வலியுடன் தொடர்ந்து ஆடிய அவர் 6-0, 6-0 என்ற நேர்செட்களில் வெற்றிபெற்று, ரசிகர்களை ஆச்ச ரியத்தில் ஆழ்த்தினார். அவரது காலில் வலி மற்றும் வீக்கம் இருப்பதால் தொடர்ந்து வரும் ஆட்டங்களில் பங்குபற்றுவாரா என்பது கேள்விக்குறியாகியுள்ளது.

## முன்னாள் வீரர் காலமானார்

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் சகலதுறை வீரரான ருசி சுர்தி காலமானார். பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டிருந்த



இவர் மும்பையில் உள்ள மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்தார். 76 வயதான இவர் 1960 முதல் 1969 ஆம் ஆண்டு வரை 26 டெஸ்ட் போட்டியில் விளையாடி 1,263 ஓட்டங்கள் எடுத்துள்ளார். அவரது அதிகபட்ச ஓட்டங்கள் 99 ஆகும். 42 விக்கெட்டுகளையும் வீழ்த்தி உள்ளார்.

# தொடரை இழந்தது நியூசிலாந்து

தென்னாபிரிக்காவிற்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும், தென்னாபிரிக்க அணிக்குமிடையிலான இரண்டாவது போட்டியில் தென்னாபிரிக்க அணி இன்னிங்ஸ் வெற்றியைப் பெற்றுள்ளது.

இப்போட்டியில் தென்னாபிரிக்க அணி ஓர் இன்னிங்ஸ் மற்றும் 193 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

போர்ட் எலிசபத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடியது

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி பஃப் டு பிளெஸிஸ், ஹசிம் அம்லா, டீன் எல்கர் ஆகியோரின் சதங்கள், கிரேம் ஸ்மித், ஏபி.டி.வில்லியர்ஸ் ஆகியோரின் அரைச்சதங்கள் ஆகியவற்றின் உதவியோடு 8 விக்கெட்டுக்களை இழந்து 525 ஓட்டங்களைக் குவித்து தனது இன்னிங்ஸை இடைநிறுத்தியது.

பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக டக் பிரேஸ்வெல் 3 விக்கெட்டுக்களையும், கொலின் முன்ரோ 2 விக்கெட்டுக்களையும், ட்ரெண்ட் போல்ட்ற், நீல் வக்னர், ஜீதன் பட்டேல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தனது முதல் இன்னிங்ஸில் ஆடிய நியூசிலாந்து அணி மோசமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி 121 ஓட்டங்களுக்கே சகல விக்கெட்டுக்களையும் இழந்திருந்தது.

அவ்வணி சார்பாக பிஜே.வற்லிங் அதிகபட்சமாக 63 ஓட்டங்களைப் பெற, தென்னாபிரிக்க அணி சார்பாக டேல் ஸ்ரெய்ன் 5 விக்கெட்டுக்களையும், ரோறி கிளெய்ன்வெல்ட்ற், ரொபின் பீற்றர்சன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், மோர்னி மோர்கல் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தென்னாபிரிக்க அணியை மீண்டும் துடுப்பெடுத்தாட வைத்து இனிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க 404 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் "பொலோ ஒன்" முறையில் துடுப்பெடுத்தாட வைக்கப்பட்ட நியூசிலாந்து அணி 211 ஓட்டங்களுக்கே சகல விக்கெட்டுக்களையும் இழந்து ஓர் இன்னிங்ஸ் மற்றும் 193 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

அவ்வணி சார்பாக பிஜே.வற்லிங், 63 ஓட்டங்களையும், டீன் பிரௌண்லி 53 ஓட்டங்களையும், மார்ட்டின் கப்ரில்48 ஓட்டங்களையும் பெற்றனர்.




பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக டேல் ஸ்ரெய்ன் 3 விக்கெட்டுக்களையும், மோர்னின் மோர்கல், ரோறி கிளெய்ன்வெல்ட்ற், ரொபின் பீற்றர்சன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், ஜக்ஸ் கலிஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக தென்னாபிரிக்க அணியின் டேல் ஸ்ரெய்ன் தெரிவானார். 2 போட்டிகள் கொண்ட இத்தொடரை தென்னாபிரிக்க அணி 2-0 என்ற கணக்கில் இலகுவாகக் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழி தீர்த்தது இந்தியா




இங்கிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி 127 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்தியா-இங்கிலாந்து அணிகள் மோதும் இரண்டாவது ஒருநாள் போட்டி கொச்சியில் நேற்று நடைபெற்றது.

இந்திய அணியில் டிண்டா நீக்கப்பட்டு ஷமி அஹமது வாய்ப்பு பெற்றார். இங்கிலாந்து அணியில் பிரஸ்னனுக்கு பதில் கிறிஸ் வோக்ஸ் இடம்பிடித்தார்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணியின் அணித் தலைவர் மகேந்திர சிங் தோனி துடுப்பாட்டத்தை தெரிவு செய்தார்.

இந்திய அணியின் தொடக்க வீரர்களான காம்பீர் 9 ஓட்டங்களும், ரகானே 4 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்தனர். அடுத்து களமிறங்கிய ரெய்னா அரைச்சதம் கடந்து 55 ஓட்டங்களும், யுவராஜ் சிங் 32 ஓட்டங்களும் ஹோலி 37ஓட்டங்களும் எடுத்து ஓரளவு கைகொடுத்தனர்.

அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய அணித் தலைவர் தோனி 7 பவுண்டரிகள் , 2 சிச்சருடன் 72 ஓட்டங்கள் எடுத்தார்.

இவருக்குத் துணையாக ஜடேயாவும் அதிரடியாக ஆடினார். 50 ஓவர்கள் முடிபில் இந்திய அணி 6 விக்கெட்டுக்கு 285 ஓட்டங்கள் எடுத்தது. ஜடேஜா 61 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

கடின இலக்கை விரட்டிய இங்கிலாந்து அணியின் பீட்டர்சன் 42 ஓட்டங்களும், ரூட் 36 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

பின் வரிசையில் மோர்கன், வோக்ஸ், ஸ்ரீவன் ஆகியோர் ஓட்டங்களின்றி ஆட்டமிழந்தனர்.இங்கிலாந்து அணி 36 ஓவரில் 158 ஓட்டங்களுக்கு சுருண்டு 127 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்ந்தது. இந்தியா சார்பில் புவனேஷ்வர்,அஷ்வினி தலா 3 விக்கெட்டும், ஜடேஜா 2 விக்கெட்டும் வீழ்தினர்.போட்டியின் ஆட்ட நாயகனாக இந்திய அணியின் ஜடேஜா தெரிவானார்.




ஆட்ட நாயகன் ஜடேயா

## மரண அறிவித்தல்



### மனுவேல் மன்மதராஜன்

**(மேற்பார்வையாளர் - யாழ்.மாநகரசபை)**

அரியாலையைப் பிறப்பிடமகாவும் வசிப்பிடமாகவும் கொண்ட மனுவேல் மன்மதராஜன் அவர்கள் நேற்று (15.01.2013) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை மனுவேல் - நேசமலர் தம்பதியினரின் இரண்டாவது மகனும் கணபதிப்பிள்ளை - புஸ்பராணி ஆகியோரின் அன்பு மருமகனும், உதய சிறி (யாழ். மாநகரசபை - பாஷையூர் மகப்பேற்று நிலையம்) அவர்களின் அன்புக் கணவரும், மதீஷன் (பழைய மாணவன் - பரியோவான் கல்லூரி, 2012 ), திபோஷன் (மாணவன் - மானிப்பாய் இந்துக்கல்லூரி),சியாம்சன் (மாணவன் - பரியோவான் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மங்களநேசன் (யாழ்.மாநகரசபை உறுப்பினர்) அருணாயோகநேசன் (உரிமையாளர் - விஜயா வீடியோ), சாந்தி (சுவிஸ்), சுரேஷ்நேசன் (சிரேஷ்ட தாதிய உத்தியோகத்தர் - யாழ்.போதனா வைத்தியசாலை), வித்தியானந்தநேசன் (மாவட்ட புள்ளிவிபரவியலாளர் - மாவட்ட செயலகம், மன்னார்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், உதயகலா (ஜேர்மன்), நந்தபாலா (உரிமையாளர் - ரம்மிஸ்பொட்), குகபாலா (அமெரிக்கா), காலஞ்சென்ற சத்தியபாலா (பாபு) மற்றும் விஜயபாலா (ஆசிரியர் - மானிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் நாளை (17.01.2013) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லூர் பரி.யாக்கோப்பு ஆலய சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**48, பூமகள் வீதி,**
**அரியாலை மேற்கு,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**☎: 0777251297, 0776724416**


(505)

## மானிப்பாய் இந்துக் கல்லூரி வெற்றி

(மானிப்பாய்)

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் முன்னாள் மாணவத் தலைவர்கள் ஒன்றியத்தினால் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட மாபெரும் உதைபந்தாட்ட போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி வெற்றிபெற்று சம்பியனாகத் தெரிவாகியுள்ளது.

மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மேற்படி போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் வட்டுக்கோட்டை யாழ்பாணக் கல்லூரி அணியும் மோதியது. இப்போட்டியில் சிறப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்திய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியினர் 3-1 என்ற கோல் கணக்கில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை வெற்றி பெற்றனர். இப்போட்டியில் இரண்டாமிடத்தினை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் மூன்றாமிடத்தினையும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியும் பெற்றுக்கொண்டது. இவ்



உதைபந்தாட்டப் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ஈ.எஸ்.பி நிறுவன உரிமையாளர் ஈ.எஸ்.பி.நாகரட்ணம் வெற்றி பெற்ற அணிக்கான கேடயங்களை வழங்கி வைத்தார். இவ் உதைபந்தாட்ட போட்டிக்கு சிறப்பு விருந்தினராக யாழ் மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி எம். ஆர். மோகனதஸும் கௌரவவிருந்தினராக கனடா பழைய மாணவர் சங்க செயற்குழு உறுப்பினர் எஸ். இராகுலன்; மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் எஸ். சிவனேஸ்வரன் ஆகியோர் கலந்து கெண்டனர்.(21- 23)

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

கொக்குவில் பிரம்படி விளையாட்டுக் கழகத்தினால் நடத்தபடும் மாபெரும் மென் பந்தாட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

போட்டிக்கு விண்ணப்பிக்கும் விளையாட்டுக் கழகங்கள்எதிர்வரும் 18-ம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

விண்ணப்பிக்கும் கழகங்கள் 075 658 2461, 0777276731 என்னும் இலக்கத்து டன் தொடர்பு கொள்ளலாம். வெற்றிபெறும் அணிக்கு பெறுமதியான பரிசில்களும் வெற்றிக் கேடயமும் வழங்கப்படவுள்ளது.

## கரப்பந்தாட்ட போட்டி முடிபுகள்

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய மின்னொளியிலான கரப் பந்தாட்ட சுற்றுப்போட்டியில் தென்மராட்சி ரீதியான போட்டியில் மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக் கழகமும் யாழ்.மாவட்ட ரீதியிலான போட்டியில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகமும் வெற்றி பெற்று சம்பியனாகி உள்ளன.

தென்மராட்சி ரீதியிலான போட்டியில் மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுகழக அணியை எதிர்த்து மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகம் மோதியது.

இதில் 3:0 என்ற அடிப்படையில் மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுகழகம் வெற்றி பெற்றது.

யாழ் மாவட்ட ரீதியிலான போட்டியில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகத்தினை எதிர்த்து நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகம் மோதியது.

இதில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் 3:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றி பெற்றது.

வெற்றி பெற்ற கழகங்களுக்கான பரிசில்களை சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட [illegible] பசுபதி சீவரட்ணம் வழங்கி கௌரவித்தார் . (3 -14)

## லெவின் ஸ்ரார் வி.க சம்பியன்




(மானிப்பாய்)

வலி.தென்மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு நடத்திய 6 பேர் 5 ஓவர் கொண்ட கிரிக்கெட் போட்டியின் இறுதிப்போட்டி பொங்கலன்று மதியம் செல்லமுத்து விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

இவ் இறுதிப்போட்டியில் ஆறுகால்மடம் லெவின் ஸ்ரார் வி.கழகத்தை எதிர்த்து கொக்குவில் காமாட்சி வி.க அணியும் மோதியது.

இப்போட்டியில் லெவின் ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று சம்பியனாகியது. நாணயச்சுழற்சியில் வென்று முதலில் லெவின் ஸ்ரார் விளையாட்டுக்கழகம் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் காமாட்சி வி.க நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவர்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 77 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் செல்ரன் ஆட்டமிழக்காது 28 ஓட்டங்களையும் ரம்பியராகுலன் 31 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பந்து வீச்சில் லெவின் ஸ்ரார் அணியின் சாரு 2 இலக்குகளை கைப்பற்றினார்.

பதிலுக்கு 78 என்னும் இலக்கு நோக்கி துடுப்பெடுத்தாடிய லெவின் ஸ்ரார் வி.க 4.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை மாத்திரமே இழந்த நிலையில் வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் கஜேந்திரா 28 ஓட்டங்களையும் சாருஜன் ஆட்டமிழக்காது 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்து வீச்சில் காமாட்சி வி.கழகத்தைச் சேர்ந்த நிஷா 2 இலக்குகளை கைப்பற்றினார்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக லெவின் ஸ்ராரைச் சேர்ந்த கஜேந்திராவும், போட்டித் தொடரின் சிறப்பாட்டக்காரராக காமாட்சி வி.க சேர்ந்த கிருபவனும்; சிறந்த துடுப்பாட்ட வீரராக காமாட்சி வி.கவைச் சேர்ந்த ரம்மியராகுலனும் தெரிவானார்கள்.

வலி.தென் மேற்கு பிரதேச சபையின் தவிசாளரும் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர்கள் சம்மேளனத் தலைவருமானஅ.ஜெபநேசன் தலைமையில் நடைபெற்ற இவ் நிகழ்வின் பிரதம விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட உதவி இயக்குநர் ஈஸ்வராசாவும்; சிறப்பு விருந்தினராக தொழிலதிபர் சி. வரதராஜனும் கலந்து கொண்டனர்.(23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் குற்றமற்றவள்; எனது...

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், கடந்த 30 வருடங்களாக உண்மையாக கடமையாற்றியுள்ளேன். எதிர்காலத்தில் மக்களோடு இருப்பேன். நான் உண்மையானவள். வரியற்ற வர்கனமொன்றையேனும் கெள்வனவு செய்யவில்லை.

நான் நிரபராதி. நான் எப்போதும் மக்களுடனேயே இருப்பேன். மக்கள் எனது குடும்பத்தைக் காப்பார்கள் என்று நம்புகின்றேன். நான் எதிர்கொண்ட பிரச்சினை தொடர்பில் ஓரிரு நாட்களில் விளக்கமளிப்பேன் என்றார்.

இது தொடர்பாக அவர் நேற்று ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கை வருமாறு,

நான், இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் 43-வது பிரதம நீதியரசராவேன். பிரதம நீதியரசர் என்ற வகையில் நான் நீதியரசர்கள், நீதிபதிகள், சட்டத்தரணிகள் மற்றும் குடிமக்கள் யாவருக்கும் செய்ய வேண்டிய கடமையும் தளம்பாத கடப்பாடும் எனக்கு இருக்கிறது.

அநியாயமான முறையில் அவதூறு செய்யப்பட்டு பழிசுமத்தப்பட்டவராக எதுவித ஏதுக்களும் இன்றி உதறி எறியப்பட்டவளாக நான் இன்று உங்கள் முன்னிலையில் நிற்கிறேன்.

கடந்த சில வாரங்களாக என் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட கொடும் நடவடிக்கைக்கு இந்த குடியரசின் ஒரு பிரதம நீதியரசர் மட்டுமல்ல எந்தவொரு குடிமகனும் உள்ளாக்கப்பட்டிருக்கக் கூடாது.

எனது 54 வயது நிரம்பிய வாழ்க்கைக் காலத்தில் 32 வருட காலத்தில் எனது தாய் நாட்டிற்கு பல்வேறுபட்ட பரிமாணங்களில் பல்தரப்பட்ட நிலைகளில் செய்த சேவைக்கு துரதிர்ஷ்டவசமான முறையில் கிடைத்திருக்கும் அநியாயமான சன்மானம் இது.

பாராளுமன்றத் தெரிவுக்குழு மூலம் எதேச்சதிகாரமாகவும் தன்னிச்சையாகவும் குற்றவாளியாக்கப்பட்டாலும் நான் சட்டரீதியான முறைகள் மூலம் அதனை முகங்கொடுத்துள்ளேன் என்பது நீங்கள் அனைவரும் அறிந்ததே.

நான் நம்பிக்கை வைத்திருக்கின்ற இயற்கை நீதிக் கோட்பாடு மற்றும் சட்டரீதியான நடவடிக்கை முறைகள் தொடர்பில் நம்பிக்கை கொண்டு ஆரம்பம் முதல் அதனை நிலைநிறுத்தி உயர் நீதிமன்றங்களிலும் உறுதி செய்தேன்.

மேலும் பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தீர்மானம் உறுதிகேள் எழுத்தாணை மூலம் ரத்துச் செய்யப்பட்டு செல்லுபடியற்றதாக்கப்பட்டது.

ஆகவே பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தீர்மானம் எதுவித வலுவோ அதிகாரமோ அற்றதும் சட்டரீதியான நியாதிக்கமின்றி மேற்கொள்ளப்பட்டதென்ற அடிப்படையில் செல்லுபடியற்ற ரத்துச் செய்யப்பட்ட தீர்மானமாகும்.

இந்தச் சூழ்நிலையில் ஓர் ஜனநாயக நாடான எனது நாடு - இலங்கை சட்ட ஆட்சியைத் திறவுகோலாகக் கொண்டு உரிமைகளை நிலை நிறுத்துகின்ற ஓர் தேசம். அதில் நான்தான் இன்னும் சட்டரீதியாக நியமிக்கப்பட்ட பிரதம நீதியரசர்.

இன்று பிரதம நீதியரசர் என்ற பதவி மட்டுமல்ல நீதித்துறையின் சுதந்திரத்திற்கே பங்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சட்ட ஆட்சி, இயற்கை நீதித்துறைச் சுதந்திரம் என்பன தூக்கியெறியப்பட்டிருக்கின்றன மட்டுமன்றி காட்டுமிராண்டித்தனமாக சின்னாபின்னமாக்கப்பட்டுள்ளன.

கொடுக்கப்பட்ட அழுத்தங்களுக்கு ஈடு கொடுத்து நான் சுதந்திரமான நீதித்துறைக்காகவே பாடுபட்டதால்தான் இன்று பாதிக்கப்பட்டுள்ளேன்.

**இந்த நாட்டின் மக்களே!**

அதியுயர் சக்தி அரசியலமைப்புச் சட்டம் சட்டவாட்சியையே அங்கீகரித்துள்ளது. சட்டத்தின் ஆட்சி மேலோங்கி நிலை நிறுத்தப்பட்டிருந்தால் இவ்வாறான அநீதியான முறையில் நான் தண்டிக்கப்பட்டிருக்கமாட்டேன்.

எனக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் உண்மைக்குப் புறம்பான படுபொய்கள். குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்கள் அனைத்திலிருந்தும் நான் குற்றமற்றவர் மட்டுமன்றி என்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களில் ஒரு சிறுதுளி உண்மை கூட இல்லை.

மேற்கூறப்பட்ட குற்றச்சாட்டுக்களில் எதுவும் உண்மை தென்பட்டிருந்தால் நான் ஒரு கணம் கூட இந்த மகிமைமிகு பிரதம நீதியரசர் பதவியில் நீடித்திருக்கமாட்டேன்.

ஒரு குற்றமற்றவர் என்பதால் இந்த நாட்டின் பிரதம நீதியரசராகவும் ஒரு பிரஜையாகவும் ஒரு சாதாரண மனிதப் பிறவியாகவும் நான் இன்று உங்கள் முன்னிலையில் நிற்க முடிகிறது.

இந்த நாட்டின் மக்களின் உரிமைகளை நிலைநாட்டுவதற்கு கடந்த 16 வருடங்களாக உயர்நீதிமன்றத்தில் கடமையாற்றினேன்.

இன்று எனக்கு நீதி கிடைக்காவிட்டாலும் நான் செய்ததையும் நானும் எனது நம்பிக்கையைப் பகிர்ந்தவர்களும் எதற்காகப் பாடுபட்டோமோ அதனைக்காலமும் இயற்கையும் சரியானதொரு நாள் உணர்த்தும்.

உங்களுக்குத் தெரியும்; அநேகமானவர்கள் இந்தப் பதவிக்கு வருவார்கள்; போவார்கள். ஆனால் இந்தப் பதவியைத் தற்போது யார் வகிப்பது என்பதல்ல முக்கியம். தொடர்ந்தும் நீதித்துறைச் சுதந்திரம் நிலைநிறுத்தப்பட வேண்டியதே முக்கியம் என அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (செ)

# சமவுரிமை இயக்க போரா...

யடுத்து, அந்தக் கையெழுத்து வேட்டை இடையில் கைவிடப்பட்டதாக சமவுரிமை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

அநீதிகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் எதிராக ஜனநாயக வழியில் போராட்டம் நடத்துவதற்குக் கூட யாழ்ப்பாணத்தில் சுதந்திரம் இல்லை என்றும் அந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

தங்கள் மீது நடத்தப்பட்ட கழிவு எண்ணெய்த் தாக்குதல் மற்றும் அச்சுறுத்தல் தொடர்பில் யாழ்.பொலிஸாரிடம் முறையிடப்பட்டிருப்பதாகவும் அவர்கள் கூறினர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மு.ப 10.50 மணியளவில் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது யாழ்.பஸ் நிலையத்திற்கு அருகில் இருந்த கடைப் பக்கமாகவிருந்து பொலித்தின் பையில் சுற்றப்பட்ட கழிவொயில் ஊடகவியலாளர்கள் மற்றும் போராட்டக்காரர்கள் நின்ற பக்கம் நோக்கி எறியப்பட்டது.

இதில் போராட்டக்காரர்கள் மற்றும் ஊடகவியலாளர்களது உடைகள் கடுமையாக சேதத்திற்குள்ளானது.

கழிவொயில் வீசியவர் என இனந்தெரியாத நபரொருவர் அங்கு நின்றவர்களால் இனங்காணப்பட்டு அவரினைப் பிடிப்பதற்கு முயன்ற போதிலும், அந்நபர் தப்பியோடியுள்ளார்.

இக்கழிவொயில் வீச்சு இடம்பெற்ற இடத்திற்கு பொலிஸாரின் வரவு தாமதமாகவே இருந்தது.

ஊடகங்கள் மீதான தாக்குதல்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். (செ-4)

# மெழுகுவர்த்...

திற்குள் நுழைய முற்பட்டவேளை பொலிஸார் தடுத்து நிறுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், இரு தரப்பினருக்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற்றுள்ளது.

மேலும் நீதிமன்ற வளாகத்தின் நுழைவாயிலில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்புத் தடைகளை நீக்கக்கோரி சட்டத்தரணிகள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டதால் அங்கு பதற்ற நிலை நேற்று ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (செ-11)




# இலங்கைக்கு அமெ...

பதவி நீக்கப்பட்டுள்ளார். இது இலங்கையில் அதிகாரப்பகிர்வு சம்பந்தமான தீவிரமான கேள்விகளை எழுப்பியுள்ளது.

ஆரோக்கியமான ஜனநாயகத்திற்கு இந்த அதிகாரப் பகிர்வு அடிப்படையானது. இந்தக் குற்றப்பிரேரணை குறித்து இலங்கை அரசுக்கு நாம் திரும்பத்திரும்ப எமது கவலையை வெளிப்படுத்தி வந்துள்ளோம்.

நீதித்துறைச் சுதந்திரத்தைப் பாதிக்கும் எத்தகைய நடவடிக்கையும் இலங்கையின் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் திறனைப் பாதிக்கும் என்ற எமது கருத்தை தெளிவுபடுத்தியுள்ளோம்.

இவ்விடயத்தில் நாங்கள் மட்டும் தனியாக கவலை கொள்ளவில்லை. பிரித்தானியா, கனடா, ஐரோப்பிய ஒன்றியம், ஐநாமற்றும் நோர்வே போன்றனவும் இந்த நடைமுறைகள் தொடர்பாக தமது ஆழமான கவலைகளை வெளிப்படுத்தியுள்ளன.

இந்த நடவடிக்கைகள் மூலம் இலங்கை சர்வாதிகார ஆட்சியை நோக்கி நகர்கிறது என்று நம்புகிறீர்களா? என்று செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த விக்ரோரியா நுலண்ட்,

இலங்கையின் ஜனநாயகம், ஆரோக்கியம் குறித்து தீவிரமான கேள்விகள் .உள்ளன என்று நாம் நினைக்கிறோம். அவர்கள் அதற்காக உண்மையாகச் செயற்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# உத்தி...

பூர்வ ஆவணங்கள் என்று பதிவாளர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# 44ஆவது...

சபை அங்கீகாரம் வழங்கியது.

புதிய பிரதம நீதியரசராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட மொஹான் பீரிஸ் தனது கடமைகளை உயர்நீதிமன்ற கட்டிடத் தொகுதியில் நேற்று பிற்பகலே உத்தியோக பூர்வமாக பொறுப்பேற்றுள்ளார். (செ-11)

**SPOKEN ENGLISH CLASS AT JAFFNA**

உங்கள் தகுதிக்கேற்ப மூன்று மாதத்தில் ஆங்கிலம் சரளமாக பேசக் கற்பிக்கப்படும்.

தொடர்பு- RAM 0722008022 (1489)

**MBBS DEGREE FROM EUROPE**

18,19,20 ஆகிய திகதிகளில் யாழ்ப்பாண சர்வதேச கண்காட்சியில் STALL NO:-204 இல் எம்மை சந்திப்பதன் மூலம் உங்களின் எதிர்காலத்தினை சரியான முறையில் திட்டமிடுங்கள்.

ஐரோப்பாவில் மருத்துவம் படிக்க விரும்புகிறீர்களா?



- ஐரோப்பிய தரத்திலான 6 வருடக் கல்வி.
- கட்டுப்படியான கல்விக் கட்டணம்/வாழ்க்கைச் செலவு.
- ஐரோப்பாவில் எங்கு வேண்டுமானாலும் DOCTOR ஆக பரீட்சைகள் எதுவுமின்றி வேலை செய்யும் வாய்ப்புகள்.
- எமது பல்கலைக்கழகத்துக்கு சொந்தமான 3HOSPITALS இயங்குகின்றன.
- ஐரோப்பியா எங்கும் பயணிக்கக் கூடியவாறான செங்கன் வீசா [SCHENGEN VISA].
- இலங்கை உட்பட எந்த நாட்டிலும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி.
- ஐரோப்பாவில் கல்வி கற்கும் அனைத்து இலங்கை மாணவர்களும் சுவீடன், ஜேர்மனி, அயர்லாந்து, நோர்வே, டென்மார்க், மோல்ட்டா போன்ற 27ஐரோப்பிய நாடுகளிலும் உடனடி வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

அடிப்படைத் தகுதி:-A/L BIO 3 PASSES.

V4 EDUCATIONAL CONSULTANCY[PVT]LTD 0774836084

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.01.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org